திருச்சிற்றம்பலம்.

ஞானஞ்ஞானரகித

அகம்பொருள்விளக்கம்.

இஃது

திருத்துருத்தி இந்திரபீடம் கரபாத்திர சுவாமிகள் ஆதீனம்

ஸ்ரீமான் ஈசூர். சச்சிதானந்த சுவாமிகள்

மாணுக்கருள் ஒருவராகிய

தண்டரை-சுப்பராய ஆசாரியாரவர்களால்

தமது சுவானுபவத்தி லுதித்தவா றியற்றப்பட்டு

பாலூர் - வேலுதேசிகரவர்களாற்

பார்வையிடப்பட்டு

அத்துவித சபையாரது உதவியினுல்

சென்னைப்புரசை

கணேச அச்சியந்திரசாலையிற் பதிப்பிக்கப்பட்டது.

11 வெங்கடாசலமுதலிதெரு, வேப்பேரி, மதராஸ்.

சோபகிருது ஆு பங்குனிமீ

Price As. 6.] (All Righte Reserved.) [விலைஅணு 6.

உ

திருச்சிற்றம்பலம்.

விளம்பரம்.

இதனை லறிவிப்பது யாதெனில்,

இப்புத்தகம் வேண்டுவோர் சென்னை வேப்பேரி புது மார்க்சட்டுக்கு மேலண்டை வெங்கடாசலமுதலிவீதி ஸக்கின் 17-வது நெம்பர் வீட்டிலிருக்கும் ம-ா-ா-ஸ்ரீ, சுப்பராய ஆசாரியாரவர்களிடத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

உ

திருச்சிற்றம்பலம்.

திருத்துருத்தி இந்திரபீடம்

ஈசூர் - சச்சிதானந்தசுவாமிக ளாதீனம்

இந்நூலாசிரியராகிய

தண்டரை — சுப்பராய ஆசாரியார் அவர்கள்

மாணுக்கரு ளொருவராகிய

சேலம் ஜில்லாவைச்சேர்ந்த அரங்கனூர்

ம-ா-ா-ஸ்ரீ, தாமோதரம்பிள்ளையவர்கள் குமாரர்

மகாவித்துவான்

வேங்கடாத்திரி பிள்ளையவர்களா லியற்றிய

சாத்துகவி.

பதினான்குசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்.

மேதினியு ளோர்கள்பவ வேதைக ளொழிந்தென்று
மேவுபே ரின்ப மெய்த
மேதையர்செய் ஞானநூ லோவளவி லாதனவு
மேனியரி னுயுள் சிலவும்

ஆதலினி யாவுமறை யூகநுப வாதிமுறை
யாக வுயிர் காருணியமா
யாருமருள் பெறுமாறு ஞானஞ்ஞான ரகித
வகம்பொருள் விளக்க மென்னுநூல்

ஈதருளி ஞேனிந்திர பீடமர போங்குமீ
சூர்சச்சி தானந்த கோன்
ஏதமறு மலர்தாளி ணைக்குரிய சேகர
ணெநாளெனினு மியாவ ரெனினும்

ஓதுபெரு நூலெனினு மணுகினோர்க் கெளிதினி
லுணர்த்தியருள் ஞான ரவியாய்
ஓங்குதண் டறைசுப்ப ராயதே சிகராமவ்
வசிதனடி பணிவா மரோ.

3-4 pages missing in bookitself

திருச்சிற்றம்பலம்.

சாத்துகவிகள்.

திருத்துருத்தி இந்திரபீடம்
பாரிப்பாக்கம் முனியப்பசாமிகள் மாணுக்கருளொருவராகிய
இராயவேலூர் - ஜெயராமசெட்டியாரவர்களியற்றியது.

வெண்பா.

புத்தி விகற்பமதைப் போக்கியறி வாநந்த
முத்தி யளிக்கவல்ல மூதுணர்வோன்—சித்திபெறு
ஞானவஞ் ஞான ரகிதநவ நூலளித்தான்
ஞானசுப்ப ராயகுரு நன்கு.

ஷை இந்திரபீடம்
ஈசூர் சச்சிதாநந்தசுவாமிகள் மாணுக்கருளொருவராகிய
மழவை - தங்கவேலையரவர்களியற்றியது.

அறுசீரடி யாசிரிய விருத்தம்.

நகைதருநான் மறைமுடிவி னுட்கருத்தை
நன்குணர்ந்து ஞானஞ் ஞான
ரகிதவகம் பொருள்விளக்க மெனுநூலா
னெளிதருளி நவின்றிட் டானல்

சுசநிலேயே யகநிலேயாத் துணிந்துவிளங்
கிடுமெங்கள் சுப்ப ராய
மகிபனவன் றிருவுருவம் பல்லாண்டு
பல்லாண்டு வாழ்க மாதோ.

ஷை இந்திரபீடம்
ஈசுர் சச்சிதாநந்தசுவாமிகள் மாணுக்கருளொருவராகிய
பி - ஆறுமுக முதலியாரவர்களியற்றியது.
கலிவிருத்தம்.

அசம்பொருள் விளக்கமெனு மான்றெளிரு நூலொன்
றிகந்தனி லெவர்க்குமறி வெய்திட விசைத்தா
னுகும்பரிசி லாதவறி வுருவனிவ னென்னத்
தகுஞ்சுப்ப ராயனெனுந் தக்கபெரி யோனே.

ஷை இந்திரபீடம்
ஈசுர். சச்சிதானந்தசுவாமிகள் மாணுக்கருளொருவரும் சாதியாசா
மாதிய நூலாசிரியருமாகிய
அரிகரபாடி - சின்னையாமுதலியாரவர்களியற்றியது.

அறுசீரடியாசிரியவிருத்தம்.

இந்திரபீ டத்தமர்ந்த வேந்தல்சுப்ப ராயக்கோ னெந்த நாளுஞ்
சிந்தையினி லாராய்ந்து சீர்தூக்கி யுண்மையிது வென்னத் தேர்ந்தே
யந்தமின்ஞா ஞஞ்ஞான ரகிதவகம் பொருள்விளக்க மாயிந் நூலை
பந்தமறப் பாமரரும் பார்த்துய்ய வேயளித்தான் பாரின் ம...

ஷை இந்திரபீடம்
ஈசூர். சச்சிதாநந்தசுவாமிகள் மாணுக்கருளொருவராகிய
தே - வேலுநாயகரவர்களியற்றியது.

அகவற்பா.

இருநிலத் தெவரு மிருடனைக் கடிந்து
தெருணில ஞனெனத் தேர்ந்திடு மாறிங்
கிந்திர பீடத் திலகிடு குருவாய்
வந்தருள் சச்சிதா நந்தன தருளா
ஞை வென்னு நலிவற ஞானஞ்
ஞான ரகித வகம்பொருள் விளக்கம்
பான மாகப் பல்லாற் ஞனுந்
தெருடரு கலைநிசந் தேர்ந்தே யுரைத்தனன்
கருவுறு நெறியைக் காட்டிடு சீலன்
சுத்தமாம் பிரம சுப்பரா யக்குரு
அச்சமற் றுலகோ ரகமகிழ்ந் திடவே.

ஷை இந்திரபீடம்
ஈசூர். சச்சிதாநந்த சுவாமிகளாதீனம் இந்நூலாசிரியராகிய
தண்டரை சுப்பராய ஆசாரியார் மாணுக்கருளொருவராகிய
மதுரை. மீனம்பிகைபிரஸ் மானேஜர்
கந்தசாமிப்பிள்ளை யவர்களியற்றியது.

எழுசீரடியாசிரியவிருத்தம்.

மலைமகள் கொழுனன் றன்னுள மகிழ்ந்து
மானிட வுருவுகொண் டருளி

யுலகெலாம் புகழுஞ் சுப்பரா யப்பே
ரோங்கிய சற்குரு வெனப்பே
ரிலகவில் வுலகி லவதரித் தெவர்க்கு
மின்பமாந் தம்முரு விளங்க
அலகறு புலமை ஞானவஞ் ஞான
ரகிதமா நூலளித் தனனே

ஷை இந்திரபீடம்

ஈசூர். சச்சிதானந்தசுவாமிகளாதீனம் இந்நூலாசிரியராகியதண்டரை சுப்பராய ஆசாரியார் மாணுக்கருளொருவராகிய அத்து விதானந்தமென்னுஞ் சிறப்புப் பெயர்வாய்ந்த சே - சி - அந்தோனிப் பிள்ளையவர்களியற்றியது.

எண்சீர்க்கழிநெடி லாசிரிய விருத்தம்.

ஞானுஞ்ஞா னப்பகுப்பா யன்றுயென்று
நன்கொளிரு மகநிலையை யறியாதூனை
நானுனென் றழுந்துவரை யாணவாதி
நண்ணுபவ துன்பமெலாந் தீர்க்கவேண்டி
யானுநல் வியலமைய ஞானுஞ்ஞான
ரகிதவகம் பொருள்விளக்க மான்றோர்போற்றத்
தானுகி யேமிளிருஞ் சுப்பராய
சற்குருவாய் மலர்ந்திட்டான் றயங்கமாதோ.

உ

திருச்சிற்றம்பலம்.

முகவுரை.

சுருதியாதி சத்பிரமாணரூபமான சதுர்த்தச வித்தைகளிற்
றேர்ந்தவை தர்மார்த்த காம மோட்ச மென்னும் சதுர்வித புருஷா
ர்த்தங்களேயாம். இவற்றுள் (க-வது) தர்மமென்பது அளித்தல் எத
ற்கு எதனையளித்தல் ? அறிவானாகிய தனக்கு அயலையெனின், அய
லாகிய சீவேசுர சகத்துக்களி லொவ்வொன்றையு மாராயுமா றாரா
யுழி அந்தத்தில் யாதிருக்கின்றது? அங்ஙன மாராய்ந்து நிற்கு மறி
வானன்றோ? அவ்வறிவான் றனக்கெதனையளிக்கின்றது? அறிவோ
டயலென்பது மிருக்கின்றமையால் அயலையே யளிக்கின்றதெனின்,
அயலையாராயுழித் தன்னில்வந்து முடியா திருக்கட்டும். முடிவதா லெ
தனையளிப்பது? தன்னையே யளிக்கின்றதெனின், தன்னையெதுவாக
வளிக்கின்றது? அதிட்டானமாகிய வியாபக வுணர்வொளியாக வன்
றோ? அங்ஙனமளிப்பது என்னவெனப்படும் ? ஈதலெனப்படுமெ
னின், அவ்வீதலே ஷ தர்மமும், (உ-வது) பொருளென்பது தானெ
னப்படுவதா? அன்றி அயலெனப்படுவதா? அயலென்பது அனுபவப்
பட்டு வருகின்றமையால் அறிவைப்போ லயலும் பொருளென்பமே
யெனின், அயலென்பவற்று ளொவ்வொன்றுந் தொழிற்குணமுந்
தோற்றகுணமுமா யில்லா திருக்கட்டும். இருக்கின்றதால் அங்ஙன
மின்றி யிருப்பது யாதெனப்படும்? அறிவானாகியதானென்பதெனின்,

அவ்விதமாகிய தன்னை எதுவெனப்பற்றுகின்றது? பொருளெனப் பற்றுகின்றதெனின், அங்ஙனந் தன்னைப்பற்றுவது எதுவெனப்படும்? வேறேயாதொன்று மின்றாகலின் தானென்பதன்றோ? தன்னை யெப் பொருளெனப் பற்றுகின்றது.? ௸ வியாபகவுணர் வொளியாக வெனின் அங்ஙன மதுவாகப் பழகிப் பழகிப் பற்றலே ௸ அர்த் தமும், (௩-வது) இன்பமென்பது யாதின்பாலது அயலென்பது தோ ற்றிக்கொண்டிருக்கின்றமையால் அயலின்பால தென்போமெனின், இவ்வயல் முன்ஞான்று பொருளெனப்பட்டதா இல்லையே! பொரு ளென்பது அறிவானாகலின் எது இன்பமெனப்படுவது? அன்றியும் எவ்வய லின்புருவாத்தோன்றுகின்றதோ அவ்வயல் பின்ஞான்றுதுன் புருவாயும், துன்புருவாத்தோன்றுவது மற்றோர்ஞான் றின்புருவா யும், மற்றோர்ஞான் றிவ்விரண்டு மின்றாயும், ஒருவர்க்கின்புருவாத் தோன்று ஞான்றே மற்றோர்க்குத் துன்புருவாயும், ஒருவர்க்குத் துன் புருவாத் தோன்று ஞான்றே வேறொருவர்க் கின்புருவாயு மிங்ஙன மாறிமாறித் தோன்றுவதேன்? இவற்றா லெங்ஙன மின்புருவெனப்ப டும். தானென்பது இன்புருவாயின் அயலைச் சுகிப்பானேனெனின், தானன்னியனா யாரோபிதமுற் றிருக்குங்காலுந் தற்பிரியமு மன் னியம்போ லிருக்குமன்றோ? அங்ஙனமின்றித் தானதிட்டானமாக வே நின்றொளிரின் தன்னின்பந் தன்னைவிடாது தனக்கு வெளிப்படு மன்றோ? வெளிப்பட்டஞான்று தானெதாகாரமா யிருக்கவேண்டுவது அவ்வின்பாகாரமாகவெனின், அங்ஙனமதுவாகப் பன்ஞான்றும் பழ கிநிற்றலே ௸ காமமும், (௪-வது) வீடென்பது செம்மையொளி வெப்பமாகிய விம்முப்பிரிவுந் தனித்தனியா யிராது ஒருமையுற் றிரு த்தலே தீபமென்றாற்போல ௸ தன்னைத் தனக்களித்தன்முதலிய முப்பிரிவுந் தானாதலால் இவை ஓர் மொழியார்த்த மென்பதற்கு முரணின்று இன்றாகலின் நானென்பான் தானேதானாகத் தெளிந்து

நிற்கின், முன்னர் ஒன்றுக்கொன்று வேற்றுமைபோலிருக்கு முப்பிரி
வையு நாடுந்திருட்டியானது நித்திரையிற் கைப்பொருள் நழுவுவது
போல நழுவும். இந்நழுவுத லென்னவெனப்படும் விடுதலெனப்படு
மன்றோ? இவ்விடுதலே ஷை மோட்சமென்க. இம்முப்பிரிவு மேகத்
துவமாய் நிற்றலால் ஐக்கமுத்தியென்றுங் கூறுப.

என்னை, அறம்பொரு ளின்பம்வீ டாயவோர் நான்கின்
திறந்தெரிந்திங் கொன்றாக்கிச் சிந்தை—கறங்கென்ன
வாடாது நிற்றற் கருநெறியெல் லாமுறையிற்
கோடா தளிப்போன் குரு.

என்றருளிய வான்றோர் திருவாக்கால் நன்குணரப்படும்

பதவிமுத்தியோவெனின், அயலனைத்துந் தற்பாவந் தற்பிரியமா
யிருப்பதைச் சிறிது மறியாது தனக்கயலென மயங்கிய திடத்தோர்
கள் தம்மயக்கத்தினின்று தாமகலும்வலி தமக்குக் கிஞ்சித்து மின்
றிப் பரமாநந்தத்தில் சிறிதும் பிரிவின்றி லயித்திருப்பதாம். இதனை
மேலானமுத்திப் பேறெனக்கூறுவது மதவாதபட்சமும், ஷை ஐக்கி
யமுத்தியென்பது அத்துவித சித்தாந்த பட்சமு மாமென்க.
இவ்வத்துவித பட்ச மதவாதபட்சங்களி லொன்றாயிருக்க இதனை
மதவாதமென்னாது சித்தாந்தபட்சமென வேறுபிரித்த தென்னையெ
னின், அம்மதவாதங்கள் ஆஸ்திக நாஸ்திகங்களா யுள்ளன. அவற்று
ளாஸ்திகபட்சத்தில் தனக்கெனச் சிறிதும் பொருளில்லாமற் காண
ப்படு முலகைப் பொரு ளுளதெனக் கருதி யிதற்கோ ரிறைவனுண்
டெனவும், நாஸ்திக பட்சத்தில் உலகமியற்கையி லிருக்கின்றதா
லிதற்கோ ரிறைவன் வேண்டுவதின்றெனவுங் கணிக்கின்றது. அங்ங
னங் கணிப்பது எதுவெனப்படும்? ஆங்காங்கு மறிவென்பதன்றோ?
நாஸ்திகபட்சத்திலறிவென்பதின்றெனின், இறைவனின்றெனக்

கணித்தற்கு அறிவானன்றி வேறே யாதுபொருளிருக்கின்றது. வேறின்றாகலின் எங்ஙன மறிவு பொய்யெனப்படும்? மண்ணாதி சதுர்ப்பூதாம்சக் கூட்டுறவி லெழுமெழுச்சியே நினைவாகிய வோர்வித தர்மமாகலிற் கற்பிதமென்பதற் கிழுக்கின்றேயெனின், இக்கற்பிதத்தா லிறைவனின்றெனவும் மற்றவை யுண்டெனவுங் கணிக்கின்றதுங் கற்பிதமெனப்படுமென்றோ? அந்தோ பாவம்அறியாமையே: இறைவனுண்டெனவு மின்றெனவுமென்பது ஒன்றினாற் கொள்ளுங் கொள்கையா அன்றா? கொள்கைதானெனின்? இவை மதவாதமென்பதற் கிழுக்கென்னை? இன்றாகலின், இவற்றைப்போ லத்துவித சித்தாந்த மதவாதமன்று. எனெனின், இச்சித்தாந்தத்துள் அத்துவிதமாயிருப்பது யாதெனப்படும்? அதாவதுஇரண்டாவ திறந்துநிற்றல். அங்ஙனமாயின், பிரமந்தானெனின்? அப்பிரம மகம்பொருளென்பதன்றோ? அவ்வகம் பொருளொன்றுளதென அதற்கு வேறாக யாதிருந்து கணிக்கின்றது? சீவனென்பதெனின், அச்சீவன் அகம்பொருளையன்றியோர்முதலாக விருக்கட்டும். எங்ஙனனெனின் மட்பொருள் கடோபாவமாய் நின்றுழி அக்கடம் விவகாரிக சத்தெனப்படுவதுபோல் அகம்பொருள் சீவோகமா யாரோபிதமுற்றுழி அச்சீவன் விவகாரிக சத்துப்போலிருந்து தனதாதாரம் வெளிப்படுங்காறும் பரோட்சமாகக் கணிக்கின்றதால் தான் கொள்கைப்பொருளா அல்லவே! அஃது தன்னாற் றன்னைக் கணிக்காது வேறொன்றாற் கணிக்கப்படுமாயின் தான் கொள்கையெனப்படும். அன்றியும், அகம்பொருள் இருவகைச் சமாதிக்கண்ணும் பிரத்தியட்சானுபவப் பட்டுப் பின்பு தானே தானாதற்கியைந்ததா லெஞ்ஞான்றுங் கொள்கைப் பொருளன்றாகலின் மதாதீதமாகிய சித்தாந்தமே யாமென்க. அன்றியும்,

நாஸ்தி நபாதியெனல் ஞாயமே சொல்லளவா
யாஸ்திகங் கொள்ளளவு மாரேலார்—ஆஸ்திகந்தா

னுத்தேச லட்சணத்தோ டொத்துப் பரிட்சைசெய
லெத்தடைக்கு மென்ஞே விடம்.

எனமேலோர் வாக்கானுங்காண்க. இதுநிற்க.

ஷை பதமுத்திக்கியைந்த பரிபாகர் மனந்தூய்மை யில்லாமை யும் ஒருமுகப்படாமையுமாகிய மலவிட்சேபங்களை நிட்காம கர்மோ பாசனைகளான் முற்று நிவர்த்திசெய்து.

தானிகர் தனக்கா மீசன் றனையுந்தங் களைத்தான் கண்ட
ஞானிக டமையு மன்றி நாஸ்தி நபாதி யென்னு
மூனிறை யுயிர்க ளுள்ளி லுணர்விழிக் குருடாம் வண்ணம்
வானிலந் திசைகண் மூடி மழைநிசி யிருள்போன் மூடும்.

என்றருளியபடி கேவலமாவரணத்தி னதீனமாயிருப்பார்கள். இங்கே ஆவரணமென்பது உலகிருப்புந் தன்னிருப்புஞ் சிறிதுந் தோன்முது செய்விக்கு மறப்பாகிய வஞ்ஞானமாம். இவ்வஞ்ஞானம்

தன்னை யறியுந் தனக்கயலுந் தானறியு
மென்ன மயறனையு மீங்ககற்றித்—தன்னந்
தனியா வொளிர்வதுவே சாற்றுபரஞானம்.

என்னு மபரோட்ச ஞானுனுபவத்தா னகறற்பாலது அற்றேல் ஷை சர்மோபாசனைகளா னகலாதோவெனின், ஞானவிசாரமெற்று க்கு? அன்றியும் அங்ஙனங் கூறுபவர் பந்தஞ் சத்தியமென்னுஞ் சற் காரியர் கூற்முசலின் அக்கூற்று அவர்களுக்குப் பெருங்கூற்முகவே முடியுமாகலி னதனைவிடுக்க. அற்றேல் பரோட்ச ஞானத்தாலேனு மஃது நசிக்காதோவெனின்,

எட்டறிவு காலவறி வீங்குகிரி யாயோக
நாட்டறிவு மூன்றபர ஞானமதாம்—நாட்டம்

அயலா தலின்ஞான மல்லவே யல்ல
மயலகற்றற் கென்னே வலி.

என்பது பரோட்சஞானத்திற் கிலக்கணமாகலின் இவற்றாற் கூடாது. எனவே ஞானாஞ்ஞான மிறந்து சதோதயமாய் விளங்குமபரோட்ச ஞானானுபவமே யெய்தற் பாலதென்றும்,

வேதப் பொருடா னிதுவே றுசொலும்
வினையா வையுமன் றொருவே றமிலாப்
போதப் பொரு ளந்தமறைக் கணியாம்
புனிதப் பொருடத் வமசிப் பொருளே.

என வாச்சியார்த்த லட்சியார்த்தங்களாற் றெள்ளிதி னிச்சயித்திருக்கின்றது. இருக்கின்ற விவ்வகம்பொருள் ஷை தர்மமுதலிய மூன்றினது ஒருமைப்பொருளென்பதற்கும், இஃதே ஐக்கமுத்தியென்பதற்கும் பின்னர் ஆஸ்திக நாஸ்திக மதவாத மன்றென்பதற்கும், பதவிமுத்தியு மன்றென்பதற்கும் விருத்தமுண்டோ? இன்றாகலின், இதனை ஞாயஞ் சோதனை பொருத்தமென்னு மிவ்வரிய வேதுக்களாற் பிரதிபாதிக்கவந்தது இந்நூலாம். இஃது முகவுரை பாயிரமுட்பட 37-பிரிவினைகளோடு நிகழுகின்றது. நிகழினும் இவ்வகம்பொருளை ஷை எதுக்களா லூட்டவந்த வபிப்பிராயம் யாதெனின், பாயிரத்துக்குப் பின்படுத்துவருகின்ற நூலாரம்பத்தில் இஃது நூலின்கருத்தென்று அவதாரிகை யிட்டிருக்குமாங்கு கண்டுகொள்க. அன்றியும் இந்நூலை யறியவிரும்புவோர் எழுத்துமுதலிய வைவகை யிலக்கணவாராய்ச்சியுந் தருக்கவாராய்ச்சியு முடையவராயிருக்கவேண்டுமென்பது ஆவசிகமோ? ஆம். அற்றேல் அனேகர் வேதாந்த விசாரஞ்செய்பவர் அவற்றை யுபேட்சிப்பானேன்? யாம் பண்டிதர்கள் யாம் வித்துவான்களெனச் செருக்குமீக்குற் றவலமாயினு

ராகலினென்க. இஃதெங்கணுங் கண்கூடு. ஆயின் பாஷைவலி வேண்டாமோ வெனின்.

எல்லாம் படித்துணர்ந்தா ரிங்குமிலை யெங்குமிலை
யெல்லாம் படித்தோமென் றேமாப்பேன்—வல்லீர்
படித்தளவு கொண்டறிவைப் பாங்காகக் காண்மின்
எடுத்தவுடல் வீழ்மு னியைந்து.

எனச் சான்றோ ராட்சியிருத்தலின், சொல்வரம்பி னில்லாது பொருள்வரம்பின் முந்துவரேல் அஃது வேண்டுமென்க. ஈண்டு இவ்வரிய அர்த்தங்களை யெல்லா முலகப்பிரக்ஞை யொழிந்தவரா யுன் முகப்பட்டு நன்கு ஊகித்து சுபாவ சித்தமாயிருந்தபடி யிருந்து உபசாந்த சீலராய் விளங்குவது இவ்வரிய மக்கட்பிறப்பினராகிய நம்மனோர்க் குரித்தாகிய பெருங்கடமையாம்.

௸ - 37 - பிரிவுகளாவன.

பிரிவுகளினிலக்கம்.	பக்கம்.
1. முகவுரை....	*
2. பாயிரம்.	*
3. நூற்கருத்து.	5
4. நூலாரம்பம்.	5
5. எவ்வுயிருந் தன்மைப்பொருளெனல்.	7
6. விவேகாதியிலக்கணம்.	10
7. ஞானகுருவிலக்கணம்.	15
8. சற்குருவிலக்கணம்.	16
9. ஞானானுபவமூன்றாயிருத்தல்.	17
10. சத்பாவானுபவமூன்றாயிருத்தல்.	17
11. சமாதி.	19
12. சொருபநிட்டை.	20

13. சகசநிட்டை. 20
14. திரிபுடியிருவகை. 22
15. அபேதவாதமைந்து. 31
16. இவற்றிற்குத் திட்டாந்த தாட்டாந்தம். 32,37
17. சதுர்விழிப்பிலக்கணம். 41
18. துவிதமே மாயாவாதம். 59
19. உவமான வுவமேயவாபாசம். 61
20. விசிட்டாத்துவிதம். 70
21. அத்துவிதம். 72
22. ஷ துவிதமுதலிய மூன்றினுக்குந் திட்டாந்த தாட்டாந்தம். 73, 75
23. வஸ்துநிலை மூன்னிலை படர்க்கையற்றதெனல். ... 82
24. ஒருதலைத்தீர்ப்பு. 89
25. சர்மோபாசனவொழுக்கம். 91
26. பிராக்காயிருத்தல். 93
27. காண்டத்திரய மிருவகைச்சுருதி. 95
28. காண்டத்திரய மிருவகைமதி. 95
29. காண்டத்திரய மூவகைத்தவம். 96
30. உலகம்பலகூட்டப்பொய்ப்பொருட் பெயராதலால் ஆபாசமெனல். 99
31. துக்கநிவர்த்தி. 103
32. குறிகுணங்களிரண்டும் நானென்பானுக்கின்றெனல். ... 105
33. துவிதமாயாவாதத்தாற் சச்சிதாநந்த குணங்களிழிவடைவதெனல். 108
34. அகம்பொருள் சத்திசத்தனென்பதற்கு விலட்சணமெனல் 111
35. பேதநாட்டநீக்கம். 113
36. மானதன் பக்குவப்பட் டின்புறுதல். 125
37. வாழி. 127

உ

திருச்சிற்றம்பலம்.

இஃது

ஞானஞ்ஞானரகித

அகம்பொருள்விளக்கம்.

பாயிரம்.

(சொரூபவணக்கம்.)

நேரிசைவெண்பா.

ஏகமே வாத்வைத மென்னு மொளிநிறைவை
மோகமற வாராய்ந்து முன்னிலையற்—றேகமதாய்
நானிலகி யெஞ்ஞான்றும் நல்லுபசாந் தம்பெறவே
யீனமற நின்றிறைஞ்சி னேன். 1

(குரு வணக்கம்.)

நானெனலை நாடாது நானலதை நாடுவேதா
மீனமுறு மஞ்ஞான மேகுதற்குத்—தானுஞ்
சச்சிதா நந்தகுரு தாளிணைநா னெஞ்ஞான்று
முச்சிதமா கப்பணிவே னேர்ந்து. 2

(மகான்கள் வணக்கம்.)

தன்னி லனைத்தினையுந் தன்னை யனைத்தினிலு
முன்னியுனித் தேர்ந்தென்று மொன்றினோர்—மென்கழலை
யென்றுஞ் சிரத்திலணிந் தின்புறுவேன் கற்றுணராப்
புன்மையரைச் சாரேன் புகன்று 3

(அவையடக்கம்.)

தம்மை யுணர்வொளியாத் தாமுணர்வோ ரேற்கினுமே
தம்மை யுடலுருவாத் தாமுணர்வோ—ரிம்மையிந்நூல்
கற்றோரு மற்றோருங் கைக்கொள்ளார் யானுமிவர்க்
கற்பமுமிங் காகே னகம். 4

(நூற்பெயர்)

ஞானஞ்ஞா னத்தினுக்கு நற்சாட்சி யாயிலகுந்
தானு மகம்பொருளைச் சாற்றுவதா—லானவிந்நூ
லேற்குமே யப்பெயரை யெந்நூல்வல் லோரேனு
மேற்பதனு லென்னிழுக்கா மீண்டு. 5

(பிறர்தம்மதமேற்கோண்டு களைதல்)

என்னை யன்றி யோரணுவு மில்லையென நன்கிசைப்பே
னன்னியமாம் யாவுமென்ப ராய்ந்துணர்ந்த—வன்மதியோ
ரொவ்வொன்றுஞ் சோதனையி லுண்டாயி னீதேற்ப
னெவ்வமற நல்லோர்முன் பேய்ந்து. 6

(பிறிதோபேடாஅன் றன்மதங்கோளல்.)

என்னையன்றி யாதுமில்லை யேதுமல நானென்ன
லுன்னரிய விப்புதுமை யோதுவன்கா—ணிங்கிலதான்
கோணலுற மாறெதிர்க்கிற் குன்று தவரேனு
நாணமுற்றப் போவார் நலிந்து. 7

(இந்நூற்கதிகாரிக ளினையரேனல்)

தேக நனிசுமையாச் சிந்தை தனிற்றோன் றுஞ்
சோகத்தா லெக்கணமுஞ் சோர்வுறவோ—ரூகத்தா
லொத்தவதி காரியர்க ளோதலுறு மிந்நூற்குப்
பித்தரொன மற்றவரைப் பேசு. 8

இந்நூல்

கற்பனைக்கியைந்த நர்ஸ்திகாஸ்திகத்தைமறுத்து எதார்த்தமாகிய நாஸ்திகாஸ்திகத்தை யேற்றற்பாலதேனல்.

இல்லதென்று முள்ளதென்று மேற்கு முயிர்பரத்தின்
புல்லறிவைப் போக்குதற்குப் போந்தவிந்நூல்—தொல்லுலகா
லிங்கெவையு நாத்தியென்று மேய்ந்தநா ஞத்தியென்றும்
பாங்குடையோர் கட்குரைக்கும் பார். 9

இந்நூல்

துவிதமுதலிய மூன்று மினையவெனல்.

அனைத்துளொன்றுந் தானாகா தாங்கவற்றின் வேறா
யுணற்கரிதாய்க் குன்றா தொளிர்த—லனைத்தினைப்போ
லுற்ற துவிதமதா மோது மயலனைத்துஞ்
சற்றும் பொருளின்றித் தான். 10

தோற்றன் மயமாகத் தொன்மையா மெந்தன்பான்
மாற்றவரி தாயிலகும் வண்மையினாற்—போற்றுதற்கிங்
கேற்றவிசிட் டாத்விதமா மேய்ந்தவித் தோற்றமெலாஞ்
சாற்றரிய தன்மயமாய்த் தான். 11

என்று மிலங்குவதா மெவ்வெவரும் பற்றுதற்கு
நன்றாகு மத்துவித நாடேதற்கென்—பொன்றாத
தேகோக மற்றவர்க்கே செல்லுமிவ் வற்புதந்தான்
சோகமென்ப தெங்ஙனுண்டாஞ் சொல். 12

(இந்நூல் மததூடணையன்றெனல்)

உற்றமத தூடணமென் றோதிடுவா ரிந்நூலைச்
சற்று மிதிலழுந்தித் தாமுணரார்—வெற்ற
மதங்களல யாதும் வழிபடுத லாயின்
மததூ டணைநமக்கேன் வாய்.

திருச்சிற்றம்பலம்.

பாயிர முற்றிற்று.

உ

திருச்சிற்றம்பலம்.

ஞானஞ்ஞானரகித அகம்பொருள் விளக்கம்.

(நூற்கருத்து)

சுத்தாசுத்த சகலகேவல கற்பனைகளுன்கு மிறந்தொளிருந் தானே தானாகு மகமான்மசிவப்பிரம சைதன்னியத்தின்பாற் கயிற் றரவென நிகழு மதிட்டானாரோபங்கட்கியைந்த வறிவறியாமைக ளிரண்டுள், அறியாமையாகிய சீவேசுரசகத் கற்பனைகளை யநாதிசத் தென மயங்கி அதற்குறவாக விடாது பந்தித்து நிகழுமானதனை யறிவிற் கரைத் ததீத மாக்குவான் வேண்டி, அகம்புறவாராய்ச்சிக் கண்ணுதயமான விருத்திஞானமென்னும் விவேகன் சுருதி யுத்தி யனுபவங்கட்கியைய வற்புறுத்திவற்புறுத்தி யுணர்த்துதல்.

நூல்

(நேரிசைவெண்பா)

அறிவிற் சிறந்திலகு மன்புடைநன் னெஞ்சே
வறிதுற் றிருப்பதென்ன மாண்போ—சிறுமையென
வென்றுமிலா தின்பநிறை யென்கோ னரியபதம்
நன்றுணர்ந்தின் றெய்துதற்கு நாடு. 1

பதமடைந்தா லன்றோ பதியாதி மூன்று
மதிமயக்க மென்றுன்ன வாய்க்கு—மதியென்ன
வின்னபொரு ளிவ்விடத்த திப்பொழுத திச்சினைய
தின்னபண்ப திச்செயல தென்று. 2

உள்ளபடி நோக்கி யுணர்வையோ புன்னெஞ்சே
தள்ளி நிகழ்வதனாற் சற்குருவை—யுள்ளதுபோற்
காண்பவற்றிற் சிக்குண்டு கண்ணிழந்து நின் றனைக்
காண்மையதே துண்டா மவம். 3

பதத்தி னருமையினைப் பார்க்குங்கா லென்று
மதித்தபதி யாதிகட்கு மாண்பா—மதிட்டான
மான்ற வியாபகத்தோ டானமுபா தானமுநற்
சான்றுமொரு நித்தியமுந் தாம். 4

இவைபோல் வனபிறவு மேய்வனவா லென்று
நவையற் றிருப்பதற்கென் னாடி—யவைக்குதவ
வேறுபொரு ளுன்னுதற்கு மெய்ப்பொருளெங்கேனுமுண்டோ
தேறுதலெங் குண்டாகுஞ் செப்பு. 5

குருபரனார் நோக்கமது கூடாதே லென்றும்
பெருகியவஞ் ஞானமெனல் பேரா—தொருகணமும்
பாராட்டல் வேண்டாம் பகட்டினரைப் போலயலைப்
போராட்ட மாயுறுமிப் பூச்சு. 6

அஞ்ஞான மென்ப தகலா விடத்தான்ற
மெய்ஞ்ஞானச் சோதிநாம் வேண்டுபொரு—ளிஞ்ஞான்றே
யேகவணு வேனு மிலகுமோ நன்னெஞ்சே
யூகநினைக் கேணிலையிங் கோது. 7

தன்னை யயலுருவாத் தானாட லஞ்ஞானந்
தன்னை யியல்புருவாத் தான்கோடல்—பின்னமிலா
மெய்ஞ்ஞான மன்றேகாண் மேதையிலாப் பாழ்நெஞ்சே
யிஞ்ஞான்று மென்செய்தா யீங்கு 8

எவ்வுயிருந் தன்மைட்பொருளெனல்

நாற்கதியு நானெனலா னாட்டுவென்றன் மைப்பொருளா
யேற்பதெங்ஙன் முன்னிலையோ டெட்டுனையந்—நாற்கதியை
யுற்ற படர்க்கையுமா யோங்குமோ வன்னெஞ்சே
கற்றவரைக் காமுறற்கென் கண்டு. 9

நானெனலை நாடாது நாடலெவன் மூவிடமா
யூனுடனா னென்பதற்கிங் கொவ்வாதே—நானெனலை
யெங்கேநீ தேர்ந்தனைகொ லேமாந்த புன்னெஞ்சே
பங்கமிலாக் கற்றோரைப் பார். 10

எவ்வறிவு தன்மையென வேற்பதோ விப்புவிக்க
ணவ்வறிவு மற்றிரண்டு மாகாவே—யவ்வறிவே
யேற்குமெனி னெவ்வறிவுக் கெவ்வறிவோர் முன்னிலையா
யேற்கு மஃதுரைப்பா யீங்கு. 11

இந்தவுயிர்க் கந்தவுயி ரேற்குமேன் முன்னிலையா
யந்தவுயிர் தன்மையென லாகாமற்—சந்ததமு
முன்னிலையாம் பான்மையையே மூதறிவோ யேற்றிலகி
லுன்னுதலுக் கீதேநன் கோது. 12

அறிவுக் கறிவென்ன லாகுமேல் தோன்றல்
பிறிதாஞ் சடஞ்சடத்தைப் பேயோ—யறிந்துணர
வேண்டுமே யென்செய்வாய் வெற்றுரைதா னாகுமே
யீண்டுரைத்த நின்மொழிதா னேகு. 13

சடத்தினுக்கு வேறுசடஞ் சற்றேனுந் தோன்றில்
தடையின்றே நின்மொழிக்குச் சற்றுந்—திடமின்றே
சித்துதனை மற்றொன்றுஞ் சித்துணர லாகுமென்
றெத்திறத்தாற் சாதிப்பா யீங்கு. 14

தடவெளியே யெவ்விடத்துந் தானகலா நிற்கக்
கடவடிவின் மட்டாநாங் காண்டல்—திடமாமோ
வென்னி லறிவென்ப திந்தவுடன் மட்டாக
மன்னுவதிங் காமோ மதி. 15

உடறோறு நானென்ப தேர்க்குசித் தென்னி
லுடலனைத்து நீங்குழியிங் கொன்றாந்—திடமிதுவேல்
தன்மைப் பொருளிஃதாஞ் சாற்றலெங்ஙன் முன்னிலையோ
டுன்னும் படர்க்கையுமா வோது. 16

சித்தன் றுபாதியதேற் செப்பியவிம் மூன்றினுக்கு
மொத்ததென நாத்திகத்திற் கோதுதுமே—சத்தியமா
யீதுநன் கன்றே யியையாத புன்னெஞ்சே
வாதிடலே னந்தோ மதி. 17

ஒவ்வோ ருபாதியுமே யொன்றுமெனின் மூவிடமாய்
ஒவ்வொன்று முள்பொருளா வொவ்வாதே—யெவ்விதத்து
மின்மைதனை யுண்மையெனு மேமாப் புடைநெஞ்சே
நன்மைநினக் கென்றுண்டா நாடு. 18

தன்மைக்கே லாதெனினுந் தான்வேண்டு மேபடர்க்கைக்
குன்னுகின்ற முன்னிலைக்கிங் கொவ்வுமோ—புன்குரம்பை
யுண்மையன் றாதலினா லொவ்வவிலை யெவ்விதத்துந்
திண்மையிலா நெஞ்சேநீ தேர். 19

தோன்று முபாதிகளைச் சொல்லும் வினைமுதலென்
றான்றியதா லந்தோநீ யோதுகின்றாய்—மான்றவர்போற்
றன்மைமுதன் மூவிடமாச் சாராமற் கற்றோர்பா
லென்னவித மாய்நிலைப்பா யீங்கு. 20

கற்றவனா யன்றியென்றுங் காண்டற் கெளிதாமோ
உற்றசக மாதிகளி னுண்மையினைக்—கற்றும்
வெறும்வாயை மெல்லவரென வீணிற்பா ராட்டி
லறுமோவஞ் ஞான வகம். 21

அடுத்துமுயன் றாலன்றோ வசான்பா னீகேட்
டடுக்காது நீங்கிவிடு மல்ல—லடுக்காயே
லென்று நிலைத்தற் கியலாதே யித்தேகம்
பொன்றுதற்கு முன்னே புகு. 22

நானெனலுக் கேனிசைந்தாய் நன்னெஞ்சே நானென்னு
மூனமற நிற்றற்கிங் கொவ்வினையோ—வூனமெனல்
பெற்றமகன் றந்தைமுதற் பேராக் கிழமைகடா
முற்றிடுமீ தெப்பிறப்பு மோது. 23

எப்பிறப்பு மிவ்வாறே யேற்றதனா லிப்பிறப்புந்
தப்பாம லேற்றினைகாண் சந்ததமு—மொப்பற்ற
நானெனலை நாடுதற்கு நன்னெஞ்சே நேரயின்றே 24
லூனகன்று நிற்பதென்றோ வோது.

நானெனலை மேற்கொண்டு நாணமில் லாமையினா
லூனமக னாதிகளுக் கொவ்வினா—யீனமிதா
லென்று மெனதுருவை யேமாந்தா யீதன்றிப்
பன்றியுழைப் பேற்றென் பலன். 25

பன்றியுழைப் பாலன்றோ பாங்கிழந்தா யெஞ்ஞான்று
மென்னுருவைக்காண் டற்கேதெங்ஙனுண்,டா-மென்னுருவைக்
கண்டாற் பிறப்பறுமே காணாத பாழ்நெஞ்சே
விண்டிடா தேகுருவாய் வீண். 26

பன்றியுழைப் பென்னவெனிற் பல்லுருவை யானெனதா
யென்றுநனி பந்தித்திங் கின்பமுற—னன்றென்ப
தீதாமோ நெஞ்சே யினியேனுந் தேர்தலெங்ஙன்
வாதிடா தென்னுருவை வந்து. 27

எப்பிறப்பு நானானென் றேமாந் ததுபோல
விப்பிறப்பு மேமாந்தா யென்னுருவைத்—தப்பன்றோ
பல்லார் முனியப் பரகுரவ னாய்விளங்கே
னல்லாரைக் கண்டுய்ய நாடு. 28

விவேகாதி இலக்கணம்

சாதனையோர் நான்கினையுஞ் சாதிக்க வேண்டுமுதற்
சாதனையை யேனுநீ சாதித்திங்—கேதமின்றி
நின்றொடுங்கா தேபிறர்க்கு நீண்ட குருவாயிற்
பொன்றுங்கா லென்செய்வாய் போந்து. 29

ஒத்திலகுஞ் சாதனைநான் கோதிடுவங் கேணித்யா
நித்யவத்து ஞானமொடு நீக்கமிலா—வுத்தரத்து
மிம்மையினு முண்டாகு மேற்கும் விராகமுமே
வம்பில் சமாதிகளு மற்று. 30

ஓது முமூட்சுவுமா யொன்றுமே யீங்கிவைகட்
கேதம் வரற்குறுமோ வெஞ்ஞான்று—நீதமிலோ
யுற்றிலகு மிந்நான்கு ளொன்றைமுதற் சொல்லுதுங்கேள்
சற்றேனு மையமின்றிச் சார்ந்து. 31

நித்யமென்ப தெங்ஙனெனி னின்றிலகு நாற்பொழுது
மொத்த வநித்தியமோ வுண்மையின்றிப்—பித்தோயந்
நாற்பொழுது மேயிலகு நன்காகும் பிர்மநித்ய
மேற்குஞ் சகமநித்ய மீங்கு. 32

என்றுமுண்மை யாற்பிரம மேற்குமே நித்தியத்தை
யென்றுமின்மை யாற்சகந்தா னீங்கநித்ய—நன்றே
யநித்தியத்தை யேற்பதனா லானவுல கின்றோ
வநித்யநித்ய முள்பொருளுக் காம். 33

உள்ளபிர மத்தைப்போ லுள்ளதெனி லிவ்வுலக
முள்ளதெங் கேயழிதற் கொன்றிடுமால்—கள்ளமுளோ
யுள்ளதுபோ காதென்று முள்ளலவா ராவென்று
முள்ள பழமொழியை யோர். 34

உள்ள சகமழிதற் கொன்றுமெனிற் பிர்ம்மமெனு
முள்ள பொருளழிதற் கொவ்வாதோ—வுள்ளவையு
மொன்றழிதற் கொன்றிருத்தற் கொன்றுந் திடமுண்டேற்
பொன்றாதே நின்மொழிதான் பூ. 35

ஒன்றழியு முண்மையென்று மொன்றழியா வுண்மையென்று
நன்றுணரா தெங்கேநீ நாடினைகொல்—என்றென்று
முள்ளதென்ப திந்நிலையென் றுள்ளதல திந்நிலையென்
றுள்ளபடி யோர்தற்கெ னுற்று. 36

என்று மழிபொருள்க ளேற்கு மலதிலதென்
றென்றுமழி யாப்பொருளோ வேற்பதெவை—யொன்றுமிலோ
யாமுண் டெனலையெனி னப்பாலென் சொல்விடுவா
யாமுண் டலதிலதி லாழு. 37

நித்தியமா முண்டெனலை நீங்காதிங் கேற்றிடுமேல்
நித்யமுறா தல்லிலதை நேர்ந்திடுமே—சத்யமிதா
மிந்தவிரண் டிற்கினுந்தா னேற்குந்திட் டாந்தங்கேள்
சந்ததமுந் தாக்கறற்குத் தான். 38

திஷ்டாந்தம்.

மண்ணினது காரியமாய் வந்திங் கிலங்கிடினு
மண்ணையன்றி யில்லையெனல் வாத்தவமே—பண்ணுகட
மிந்தமண் ணல்லவென்றே யேற்பமிங் கானதினாற்
சிந்தையிலோ யிக்கடம் பொய் தேர். 39

மண்கா ரியமின்றேல் மன்னுமே யுண்டெனவு
மண்கா ரியமன்றேல் வாய்ச்குமே—மண்ணென்ப
தாமெனவு நன்னெஞ்சே யானவித்திட் டாந்தம்போல்
நாமுரைக்குந் தாட்டாந்த நாடு. 40

தாஷ்டாந்தம்.

இவ்வுலகை யாராயி னென்று மெனையன்றிக்
சவ்வுதற்கிங் கொன்றேனுங் காணுதா—லிவ்வுலக
மில்லையென லாகுமே யீங்குண்மை நானெனலாற்
சொல்வதெனீ சத்யமெனத் தோய்ந்து. 41

இல்லையெனற் கிவ்வுலக மேய்ந்ததுபோ லெஞ்ஞான்று
மல்லவெனற் கும்மீதே யாய்ந்துணரி—னெல்லையிலா
னிந்த விரண்டினையு மேற்பதுண்டோ வெங்கேனு
மந்தமுளோ யீங்கிவற்று ளாழு. 42

இன்றெனற்கு மன்றெனற்கு மிந்தவுல கேலநித்ய
மென்றுமுண் டாமெனலை யேற்பதெதோ—பொன்றாத
நானுத லானித்ய நாடியெனை நில்லாது
நானுனென் றேகுவதே னுள். 43

இந்தமுதற் சாதனையே யெய்தா திருக்கநீ
முந்துவதென் னேகுருவாய் மூர்க்கமே—யிந்தவுல

கத்தி லிருப்பவர்கள் கண்ணிலரென் றுன்னுதே
பித்தனென்றிங் கேசுவர்காண் பேண். 44

மற்றதிரி சாதனமும் வாய்த்திடினு நன்கொருங்கே
யுற்றிடுதற் காரியனு யொவ்வாதே—யிற்றைவரை
யென்செய்தோ மென்றுணரா தேமாந்தா யென்னுருவை
யுன்னுவதென் ஞேவினிமே லோது. 45

அரியமொழி கேட்டதற்கிங் கான்றவுழைப் பெய்திப்
பெருமையினைத் தேடாமற் பித்தா—முரிமையினை
மேற்கொண்டே மற்றோர்க்கு மேலாங் குருவாயி
லேற்பதெங்ங னென்னுருவை யீண்டு. 46

குருத்தனத்திற் கொவ்வாதே குன்று மயலை
யொருகணமு நீதா னொழிக்க—விரகில்லை
யென்றே நிலைத்திருப்பா யேமாப் புடைநெஞ்சே
நன்றாக வீங்கிதனை நாடு. 47

அடுத்தவரைக் காக்க வகம்விளங்கா நெஞ்சே
யெடுத்துரைத்தற் கிச்சித்தா யென்னை—யிடுக்கணதை
விட்டிருத்தற் காகாதேல் மேலா மெனதுருவிற்
கட்டுப்படற்கெங்ஙன் கண்டு. 48

ஆன்ற வநுக்கிரக மானபத மூன்றினையு
மூன்றினனி கேட்பவர்கட் குள்ளகுறி—மூன்றாகு
முத்தமமு மத்திமமு மோது மதமமுமாஞ்
சித்தநிலை யில்லாதோய் தேர். 49

முப்பதமாம் வாக்கியத்தை மூதறிவோ ருத்தமர்கள்
செப்பியவா றுட்கேட்டுத் தேகோக—மப்போதே

சற்று மிருப்பின்றித் தானொழிய நிட்டைதனிற்
பற்றின் றிலங்குவராற் பார். 50

உற்றிலகு மத்திமர்க ளுட்கொண்டு வாக்கியத்தைப்
பற்றுமித் தேகோகப் பான்மையினை—முற்று
மிழப்பதற்கு நீடித்திங் கெய்துநிட்டை மெல்ல
மழுக்கமுறா தேயொளிர்வர் மற்று. 51

ஒவ்வுமவ் வாக்கியத்தை யுட்கொண்ட பின்பதம
ரெவ்வமுறுந் தேகோக மீங்கிழக்கா—தொவ்வி
லுடலுள் ளளவு மொருகணமும் போகத்
துடன்படா தோன்றுவர்கா ணோர்ந்து. 52

உற்ற வதமரிலு மொவ்வா திருக்கின்றாய்
சற்றேனுந் தேகோகந் தானிறந்து—வெற்றவெளி
யாகநிட்டை யெய்தி யடர்நாம ரூபமெலா
மேக வொளிர்வதென்றோ வீங்கு. 53

அனுபவம்வந் தாலன்றோ வாசிரிய னாத
லனுபவமில் லாநீயோ வாவா—யனுபவிபோல்
வன்னெஞ்சே யாரையுமே மாற்றுவதா லென்றென்றும்
புன்மையீ தன்றோ புகல். 54

உற்றகுரு நீபிறருக் கோதுவியென் றோதாமுன்
முற்றுமுணர்ந் தோனைப்போன் முன்னினாற்—பற்றகற்றி
யென்னை யுணர வியையுமோ புன்னெஞ்சே
முன்னிலையை நன்கொழிக்க முந்து. 55

குன்றுதலி லாசான் குறிக்கா திருந்தாலு
நின்றநின்போ லாரேனு நேசிக்க—வொன்றினைகொல்

தான்றோன்றித் தம்பிரான் றானா னென்றுரைப்பா
றான்றாதே யிவ்விருப்ப மோது. 56

நம்பி யடுத்தவர்க்கு நானெனலை நன்குணர்த்த
நம்பியுழைத் தென்னநீ நாடினாய்—வம்பிடுதற்
கேற்ற குருவாகி லென்னையினிக் காண்பதென்றோ
வாற்றலீ தன்றென் றறி. 57

குருக்கோலந் தான்கொண்டு கூசாது வந்த
வருத்திரா காதிசளில் வல்லோய்—மரிக்குங்கா
லிக்கோல மென்செய்யு மேனோ வபேட்சித்தாய்
நெக்குவிடு மோமயல்க ணோர்ந்து. 58

குறிக்கா திருக்கக் குருவுக்கிச் சித்தல்
பறிக்கப் பொருள்களைத்தான் பாரி—லொறுக்கும்
புலிபசுத்தோற் போர்த்தற்றுப் பொய்ந்நிலைகள் கூறி
வலியிலரை யாள வரும். 59

குன்றியிருத் தற்கன்றோ கோடல் குருக்கோல
மென்றுந் திரிகரண மேழையே—சென்று
திருக்கூட்டஞ் சேர்த்திட்டுச் சிந்தைசிதைத் தற்கோ
வருத்தமுற்றிங் கிச்சை வரல். 60

குருபரனென் றாலெளிதோ குன்றாத ஞானக்
குருவொன்று சீர்சற் குருவொன்—றிருகுருவை
யுற்றறியுஞ் சற்குருவென் றோன்றெனவே மெய்ம்மறைகள்
சற்றுமுர ணாதுரைக்குந் தாம். 61

(முன்னர் ஞானகுருவி னிலக்கணங்கூறல்)

சற்குருவென் றோன்றினையே சாற்றாதிங் கேஞான
நற்குருவு மென்றேனோ நாட்டியது—முற்சுருதி

யென்னிற் சிலகுருக்க ளேற்குஞா னாப்பியாச
முன்னாசற்கு மாகார்க ளூற்று. 62

ஞானமனுட் டித்தற்கு நண்ணா தொழிந்திடினும்
ஞானவிசா ரத்தினுக்கு நண்ணாதே—யீனமிலா
துற்ற சரியைமுத லோர்மூன் றுஞ் செய்வதற்குச்
சற்று மிளையாது தான். 63

ஞானகுரு தாமென்றே நாடோறுந் தான்மயக்கி
மோனமுறு விப்பனென மோசமே—யேனையர்க்குச்
செய்துவருங் கள்ளருமுன் செப்பியவை செய்யாத
பொய்யர்களு மாய்நிகழ்வர் போந்து. 64

இத்திறத்தோ ரைநீக்க வேனையர்க்குச் சொல்லியதிங்
கத்திரமாம் ஞானிகளை யாளுதுங்கேள்—மித்தையதா
யாக்கியபி னீங்கெவையு மாகுமே தோற்றமதாப்
பாக்கியொன்று மில்லாமற் பார்த்து. 65

தோற்றன் மயமாகத் தோன்றுதென்றெவ் வொன்றினையுஞ்
சாற்று முணர்வொளியாத் தானாக்கி—யாற்றலினா
னிதுநா னீதென்றே நாடிப் பழகுவர்கள்
ஞானகுரு வென்பதற்கென் னாடு. 66

(2-வது. சற்குருவினிலக்கணம்)

ஞானகுரு வொன்றினையே நாட்டாது சற்குருவென்
றேனை வெடுத்தாள்வ தீங்கிரண்டாய்—ஞானநூ
லென்னி லிதன்பிரிவை யேற்க வுரைக்குதுங்கே
ளுன்னித் தெளிந்திடுதற் குற்று.

உத்தி யனுபவங்க ளோராதிங் காரணத்திற்
கொத்திலகுஞ் சொல்வாத வூகத்தாற்—பத்தர்க்குப்

போதிக்கு மையமதைப் போக்காதிங் காரியர்போற்
சாதிப்பார் தங்களையுந் தான். 68

இத்திறத்தர் போலுமின்றி யெல்லாந் தெரிந்தவராய்த்
தத்தமையுஞ் சாமிகளாத் தானடிக்கும்—பித்தரைய
மாத்தரல ரென்றிங் ககற்றுதற்குச் சற்குருவே
யாத்தரெனும் வேத மது. 69

ஊற்றமெனுஞ் சற்குருவுக் கோதுநிலை யாதென்னிற்
சாற்றியசீ வேசர்க்குச் சாக்ஷியெனு—மாற்றலிலோய்
கூடத்த பிர்மைக்யங் குன்று வனுபவமாம்
வேடத் தவர்க்காமோ வீடு. 70

அத்துவித மாயிலகு மான்றவைக்ய மெய்தவரே
யொத்திலகுஞ் சற்குருவென் றோதிடுமே—நித்தியமாம்
வேதத்தி னந்தம் வெளிற்றுரையா ரீங்கிவர்போ
லோதிடுதற் காவாரோ வுற்று. 71

(முன்னருரைத்த ஞானனுபவம் மூன்றுமியையந்திருத்த)
(வினையவேனல்)

நான்சர் வமுமேயாய் நான்சர்வத் திற்கிடமாய்
நான்சர்வ சாட்சியுமாய் நண்ணுவதே—யானவிதை
ஞானநிலை யென்பார்க ணன்மையுளோய் நன்குணர்ந்தே
யீன மதியொழிப்பா யீங்கு. 72

(பின்னருரைத்த சத்பாவம் மூன்றுமியையந்திருத்த வினைய)
(வேனல்)

உற்றநிரா தாரமுமோ டோது நிரந்தரமாய்ச்
சற்றுமுரா னுதிலகுந் தானகச்—சொற்றமுனஞ்

சத்துநிலை யென்பதற்குச் சங்கையினி யுண்டோகா
ணொத்ததென நின்றிடுவா யோர்ந்து. 73

இந்நிலைய னாகி யிலங்குபவன் சற்குருவா
மன்னவனற் பொன்னடியி லார்ந்திறைஞ்சி—யென்று
முறைந்துநான் யாதென்றிங் குற்றுணர்த லின்றி
மறைந்தொழுக லென்னோநின் மாண்பு. 74

அடுத்தவரைக் காக்குமோ வானகுரு வேட
மடுத்தவரைப் பாழ்படுத்து மந்தோ—வெடுத்துரைத்தற்
கெங்ஙனந்தா னிச்சித்தா யேமாந்த புன்னெஞ்சே
பங்கத்துக் காளாவாய்ப் பார். 75

சிந்தை யமைதிக்குச் செய்ததொன்றுங் காணோமே
சிந்தைநா னாகவெங்ஙன் நேர்ந்திடுவாய்—சிந்தையென
லென்னம்ச மாதலினா லேனோவிங் கிச்சித்தா
யுன்னுதற்கு நேரமின்றோ வோது. 76

சிந்தையென வீதெனவே தேராது நற்குருவாய்
வந்திருந்தா னின்றனக்கென் வாய்க்குமோ—சிந்தைப்
பிரத்தியேக கூடஸ்தன் பிர்ம்மமிது வாகு
மருத்தியுறு தேனிதற்கிங் கார்ந்து. 77

சிந்தையெனச் செப்பிடுதல் செல்லுந் தனிச்சாட்சி
யந்தமில்கூ டத்தனிஃ தாகுமே—பந்தச்
சுசாதிமுத லேலாச் சொலுஞ்சர்வ சாட்சி
நிசாநுபவப் பிர்ம்மமிதா நேர். 78

இவ்விரண்டி னேகமன்றோ வெங்குமொளிர் நானென்னல்
கவ்வுதலுக் கேனென்னைக் காத்திரந்தா—னெவ்வமிலோ

யிந்தப்பேர் வஞ்சனைக்கோ விச்சித் திருக்கின்று
யந்தத்திற் கென்செய்வா யால். 79

(சமாதிநிலை)

நானெனலைக் கண்டன்றோ நானெனலி லேமறைத
லீனச் சமாதியன்றே யீதென்று—மூனுடறா
னிந்நிலனி லேமறைத லென்றாய் சமாதியென
நன்மையிலோ யெங்குணர்ந்தாய் நாடு. 80

தேகநா னுக்கொணர்ந்த தேர்ச்சியினு லன்றோநீ
யேகுவே னென்கின்று யிந்நிலனிற்—சோகமிதால்
விட்டிடுமென் றெங்குணர்ந்து வேண்டினு யிந்நிலையை
நட்டமதிற் காளாவாய் நாடு. 81

உற்ற விடமெனலு மொன்றும் பொருளெனலுஞ்
சற்று முணராமற் சந்ததமு—முற்றவிட
மிந்நிலனென் றெய்துபொரு ளித்தேகந் தானென்று
முன்னுதற்கிங் காளானு யுற்று. 82

அறிவிற் சமாதியென லாய்ந்துணரா தென்றும்
வறிதுற் றிருப்பதென்ன வாய்மை—யறிவிலோ
யிந்நிலனை முன்னதா யேற்கு மளவிட்டிங்
குன்னியுனிப் பார்ப்பதெனே வோது. 83

அடுத்தவர்க ளாங்காங்கு மாசான்றே கத்தை
யெடுத்து விதியுடனே யேற்கப்—படித்தலத்தில்
வைத்து வழிபடற்கு மாறுது பூசிப்பர்
பித்தமிஃ தாமோநீ பேசு. 84

உற்ற வடியவர்க்கிங் கொக்குமே யிந்நெறி
முற்று முணர்ந்திலகு மூதோய்பொய்ப்—பற்றுள்வ

வுந்தனுக்கே னிவ்வனர்த்த மூரார் புகழ்தற்கோ
வந்ததென்ன லாப மதி. 85

(சோரூப நிட்டை)

உழைப்பின் வகையறியா தோதுதற்கு நச்சிற்
பழிப்பினையே நீயேற்பாய் பாரி—லுழைப்பென்னல்
தோன்று மயலனைத்துந் தோற்ற மயமாக்கி
யான்றவெனை யாதரித்த லாய்ந்து. 86

(சகசநிட்டை)

ஆதரித்த பின்னிவ் வனர்த்தமாந் தோற்றங்க
ளோது மெனதுருவா யோர்ந்திலகி—யேதமிலாத்
தானேதா னுயிருத்தல் தக்கோயிந் நால்வகையா
லூனமிலா தாகுமே யோர். 87

இந்நான் குழைப்பினுக்கு மேய்ந்தவர்க ளாரென்னி
லெந்நாளு நானெனவிங் கேற்குமுடல்—பன்னாளும்
விக்கியுமிழ் சோறென்ன வேண்டா திருப்பால்
மிக்குணர நல்லோரை மேவு. 88

உழைப்பிங் ஙனமிருக்க வோராத நீயேன்
பழிப்பதனை யேற்பதென்ன பாங்கோ—வுழைப்பிதனை
நின்னையன்றி யாருழைக்க நேர்ந்திடுவ ரந்தோநீ
யென்னுருவாய் நிற்பதென்றோ வீங்கு. 89

என்னைச் சகமுதலா யேமாந் துணருதலே
மன்னுமஞ் ஞானமதாம் வாய்மையிலோய்—பின்னுமிவை
யுள்ள பொருளென்று மொன்று மநாதியென்று
முள்ளுதற்கோ விண்டுவந்தா யோது. 90

ஒன்றினைமற் றொன்றாக வோரு முணர்வெனறா
னென்றுமஞ் ஞானமதே யீங்கிதனை—யொன்றுமிலா
யற்பமும்போக் காவிடினு மான்றோ ரடிபணிந்து
சொற்கடங்கி நின்றிடுவாய் தோய்ந்து. 91

உலகிருப்பு மென்னிருப்பு மோரா நினக்கே
னுலகிற் பெரியோனென் றோங்கல்—பலனில்லோ
யிந்தவறி யாமைதனக் கென்சொலினு மென்னுருவிற்
பந்தப் படுவையோநீ பார். 92

பந்தித்தற் குற்றபொருள் பார்க்கிலிரண் டாகுமிவை
யந்தமில்சீர் நானெனலு மார்ந்திருக்கு—மிந்த
வுலகெனலு மாமிவற்றி லொன்றுதனைப் பந்தித்
திலகுவதே னெஞ்சே யிவண். 93

ஒன்றைநீ பந்தித்திங் கூக்கமுற்றாய் நெஞ்சேமற்
றொன்றினையார் பந்தித் தொளிருவர்காண்—பொன்று
முலகபந்தத் தாலென்று முற்றதெவன் துக்க
மலகிலெனை யெய்துவப்பா யாய்ந்து. 94

உற்ற வுலகிதனை யொன்றினோ ரிஞ்ஞான்றும்
பெற்றதுண்டோ நித்யதிர்த்திப் பேய்நெஞ்சே— சற்றேனுந்
துன்பமில்லா வின்பமதைத் துய்த்தலுண்டோ நீயேனு
மென்னுருவைக் கண்டுவப்பா யீங்கு. 95

என்னையிங் கெய்துவக்கா தீன மடமையினா
லுன்னியுனி யெவ்வுடலு முற்றிழந்தா—யன்னியமா
யின்னும் வருமுடலை யெய்திழத்த லேனவச
மன்னுவதென் றென்னுநவை வந்து. 96

திரிபுடை இருவகை.

காண்பானுங் காட்சியுநற் காணும் பொருண்மூன்று
மாண்போய் திரிபுடியாய் மன்னுமே—காண்பானேல்
ஞாதுருவாங் காட்சியெனல் ஞானமதாங் காண்கையென
லோதலுறும் ஞேயமதா மோர். 97

இந்தத் திரிபுடிக ளொன்றுமிரண் டாகுமே
சந்தமுளோ யிவ்விரண்டின் றன்மையைக்கேள்—பந்தித்தற்
கொன்றநித்த மொன்றுநித்த மென்ன வுரைப்பவையி
னன்றுணர்ந்து நிற்பதற்கு நாடு. 98

உற்றவநித் தத்திற்கிங் கோதுந் திரிபுடிகேள்
பற்றுஞ் சிதாபாசப் பான்மையே—சொற்றலுறும்
ஞாதுருவா நாற்கரணத் தோடிந் தியங்கடா
மோதியமுன் ஞானமென வோர். 99

ஆன வுடலாதி யாகுமே நேயமென
லீனத் திரிபுடியா மிம்மூன்று—மூனமுளோ
யொன்று மநித்தியமா யொப்புதற்கென் னுட்சேப
நன்றாகா தீங்குனக்கு நாடு. 100

மற்றோர் திரிபுடியின் வாய்மையா தென்றிடினே
யுற்ற வெளியொளியா யொன்றிலகும்—பற்றுதற்கு
ஞேயமென்ன லாகுமே நித்யமெனற் கென்னைய
மாயவுரு வீதன்றே மற்று. 101

உற்றறிவு யாதெனின்மற் றொன்றினையு மோராமற்
பற்றில்லா ஞேயமதைப் பார்த்திருக்கு—முற்றுணர்வா
மிந்தநன் மெய்யுணர்வே யென்றுமறி யாமைக்குத்
தொந்தமுறா நித்தியமாஞ் சொல். 102

உற்ற வெளியொளியா யோங்கியநன் ஞேயமதைப்
பற்றிவிடா தின்புறும்பார்ப் பானென்னுங்—கற்றுணர்ந்தோய்
கத்தாவே ஞாதுருவாங் கற்பனையில் லாவிதுவே
சித்துத் திரிபுடியாந் தேர். 103

இந்தத் திரிபுடியை யேற்பவர்க ளெங்குமிலை
யந்தத் திரிபுடியோ ரார்ந்திருப்பர்—மந்தமுளோ
யிவ்விரண் டிற்கு மியைந்தவிட மேதென்னி
லவ்விடந்தா னானாகு மால். 104

இவ்விரண் டிற்குமிட மென்னையன்றி யின்றெனினு
மிவ்விரண்டு மாநிகழ்த லென்னுருவே—யிவ்விரண்டு
மின்றா மெனையன்றி யென்றுமல நானிவைக
ணன்றாய்நீ தேர்ந்துய்ய நாடு. 105

இவ்விரண்டு மல்லதில தேற்றிடினு மெந்தனுக்கிங்
கொவ்வியதிங் கேதென்னி லோதுதுங்கேள்—செவ்விதாஞ்
சித்துத் திரிபுடியே திண்மையிலோய் மற்றொன்றிற்
சித்தம்வை யாதிருப்பாய் தேர்ந்து. 106

இவ்விரண் டாநிகழு மேய்ந்த திரிபுடிக [முளோ]
ளொவ்வொன்று மொன்றினிலொன் றுண்மையின்றி—யெவ்வ
யன்னியோன் யாபாவ மாகுவதா னானென்று
முன்னு மிரண்டிலுமுண் டோர். 107

சித்துச் சடமிரண்டாச் செப்புந் திரிபுடியிற்
சித்தென்ன லென்றெருளாச் செல்லுமே—பித்தோய்
சடமென்ன லென்மருளாத் தங்கிடுமே யென்றுந்
திடமுறநீ நன்குணர்வாய்த் தேர்ந்து. 108

என்றெருளே மெய்ஞ்ஞான மென்மருளே பொய்ஞ்ஞான
மென்றெருண்மெய்ஞ் ஞானமே யெய்துமுத்தி—நன்மையில்
ஞானமே நண்ணுபந்த நாடு யிவைவிபர பொய்ஞ்]
மூனமுளோய் சொல்லுதுங்கே ளாற்று. 109

உற்ற கிழமையிரண் டொன்றாகுந் தற்கிழமை
மற்றோர் கிழமையது வன்பிறிதா—முற்றுணர்ந்தோய்
முன்னுரைத்தல் சுத்தமதாய் முற்று மசுத்தமெனல்
பின்னுரைத்த தாகுமே பேசு. 110

என்றெருளே நன்கிருப்பா மென்மருளே தோற்றமதா
நன்னெஞ்சே தோற்றமதை நாடாம—லென்றென்று
நின்று நடுநிலையி னீங்கா தெனதுருவா
யொன்றியொளிர் நாளென்றோ வோது. 111

இந்த விரண்டினிலொன் றென்மருள தாயிருக்க
வந்தமில்சார் பென்றிதனி லாழ்வதெவன்—மந்தமுளோ
யுற்றிலகு மென்மருளை யொப்புவரார் சார்பாகப்
பற்றுவது நீயலவோ பார். 112

சார்புணர்ந்து சார்பு கெடவொழுகின் மற்றழித்துச்
சார்தரா சார்தரு நோயென்றார்—சார்பெய்தோ
ரிந்த மொழியேனு மேனின்னு நாடவிலை
மந்தமதி யாய்நினக்கென் மாண்பு. 113

இந்த மருள்வசத்தி லெய்திருக்குங் காறுநீ
யந்தத் தெருள்வசத்தி லாழ்ந்திடலின்—றந்தோ
குருவா வெழுந்துவந்து குன்றா விரைவில்
பெருவாய் திறப்பதெவன் பேசு. 114

இருவகையாஞ் சார்புகளி லிந்தமருட் சார்பி
லரிதா யுபேட்சையுற்றிங் கன்பாங்—குருவாதி
மூன்றினையும் பூசித்து மூதோயா றாறினுக்குஞ்
சான்றாகு மென்றெருளிற் சார்ந்து. 115

ஈதுநா னல்லலவென் றிச்சார்பி னின்றகலுஞ்
சாதகமுற் றென்றெருளிற் சாகாது—போதமுற்றிங்
கோதற் குருவாகி லொன்றுமோ வென்னுருதான்
பாதகத்துக் காளாவாய் பார். 116

இம்மருளு மித்தெருளு மெந்தமுதற் றன்மைகளென்
றம்முதலைத் தேடா தபேட்சித்தல்—நம்பிவரு
மன்புடையோர் யாவரையு மாங்காங்கு மேமாற்றிப்
பொன்பறிக்க வோநீ புகல். 117

இவ்விரண்டு மந்தமிலா தெய்திலகி னும்மென்று
மொவ்வுமுத லீதெனநீ யோராயேல்—செவ்விதாய்
மூத்தாபமென்கின்ற மூதோயனலின்கட்
டத்தளித்து நைந்திடுவாய்த் தான். 118

ஓர்முதலை யன்றியென்று மொன்றுமோ விவ்விரண்டுந்
தேர்தலின்றி யென்செய்தாய்த் தின்றுநனி—பார்மிசையே
யீதிரண்டி லொன்றினிலு மெய்தாது நிற்றற்கிங்
காதரவு கண்டுணர்தற் காழு. 119

மருள்வசத்தி னின்றகல மாண்பில்லா நீயோ
தெருள்வசத்தி லுற்றிலகத் தேர்வாய்—தெருள்வசமு
நீங்கி நடுநிலையி னீயிறக்க லாகுமோ
பாங்கில்லா வன்னெஞ்சே பார். 120

என்மருளே நாஸ்தியதா மென்றெருணன் காஸ்தியதா
மென்மருளு மென்றெருளு மென்னியல்பன்—றென்றென்று
மென்னுருவாய் நின்றிலக வேழைமதி யோய்நினக்காங்
கென்னோக்கும் வாய்ப்பதெங்ங னீங்கு. 121

சார்புணர்ந்து சார்பு கெடவொழுக வேண்டுமெனச்
சார்புற்ற வள்ளுவருஞ் சாற்றினார்காண்—சார்பென்ன
லென்னையன்றி யின்றதனா லென்கிழமை யீதிரண்டு
முன்னற் கெதுமுதலோ வோது. 122

தேடுதலுக் கேய்ந்த திகழாஸ்தி நானாயி
னாடுதற்கும் பாடுதற்கு மாகுமோ—தேடுமென்னை
யற்றிருக்குங் காறு மறைந்த கிழமைகளி
லுற்றிருக்க வேண்டுமென்றோ வோது. 123

உற்றாலுந் தற்கிழமை யென்னுமதி லூற்றமதாய்ப்
பற்றிருக்க வேண்டுமே பாழோய்நீ—பற்றியதோ
விந்தமரு ளாங்கிழமை யீங்கிதனா லெப்பிறப்பும்
வந்துவந்து தாக்கிடுமே மற்று. 124

இருப்பில்லாப் புன்மருளை யெய்ததனா லன்றோ
விருப்பாகு நற்றெருளை யெய்தா—திருக்கின்றாய்
அப்புன்மை யாமருளுக் காட்பட் டிருப்பதினா
லிப்புலமை நீயடைவ தென்று. 125

நான்ஞானி யென்கின்றாய் ஞானியென லெற்கன்றி
யூனமுளோய் நாளுமுனக் கொவ்வுமோ—வேனென்னி
னானலதை நானென்று நாடிநா டிப்பழகி
யீனமுற்று நிற்பதனா லீங்கு. 126

போதமென வீதெனவே பொல்லா மடநெஞ்சே
நீதமுடை னுராய்ந்து நில்லாதென்—போதமெனல்
சாட்சி யிரண்டினுக்குஞ் சங்கையிலாத் தானேதான்
மாட்சிமைவே றின்றிதற்கு மற்று. 127

சாட்சித் துவிதமெனல் சாரமில்சீ வேசர்க்கு
மாட்சிமைய தாயொளிரும் வன்னெஞ்சே—காட்சிகளாய்க்
கூறியகூ டஸ்தனெனக் கோதில் பிரமமெனத்
தேறுவர்க ணல்லோர்க டேர். 128

இந்த விரண்டையைக்க மேகமே வாத்வைத
மந்தமிலாத் தானேதா னுமே—முந்த
வுரைபோத மென்னவிதற் கொக்குமே யீதன்றித்
திரஞானம் வேறின்று தேர். 129

நானெனலை யன்றியிலை நற்போத மென்றுரைத்த
நானென்னற் கன்னியமாய் நண்ணியநீ—நானெனற்கு
வெட்கமிலா துட்பட்டாய் மேன்மையிலாப் புன்னெஞ்சே
யொட்பமுடை யோர்நகைப்ப ருற்று. 130

நல்லோர் நகைப்பதற்கு நானென்ற நெஞ்சேநீ
பொல்லோர்க் குதவுதற்கோ புண்பட்டாய்—மெல்ல
வெதுநானென் றெட்டுதற்கிங் கென்செய்வாய் நாளும்
பதியாகு மென்னுருவைப் பார். 131

என்னுருவ மல்லா லெதுநானென் றுய்நினக்கிங்
கன்னியமாக் காணுமுட லாதிகளே—லன்னியமு
மென்னையன்றி யுண்டோகா ணென்னையக லாதிருந்து
மென்னுருவை யேனுட லின்று, 132

என்விகற்பு நானானென் றென்று மிலகுவபோ
லென்னியல்பு நானானென் றேற்கவே—நின்றனக்கிங்
கெப்போ திலகுங்கா ணேனின்னு நாடவிலை
யொப்பில்லாக் கீழ்நெஞ்சே யோது. 133

சொற்ற விகற்பமென றோன்று மருவுருவாஞ்
சற்றுமுணா ராதுருவைச் சாருவதென்—முற்றுந்தா
னானென் றேயருவை நாடுதற்குக் கைப்பென்னோ
மானமிலா நெஞ்சே மதி. 134

நானல்ல தாயிருக்க நன்கி லுருவருவ
மேனிலகு மிவ்வுருவ மேற்கவே—நானாக
விந்த வுருவுக்கோ வென்று முறிப்பட்டா
யந்தமுடை நெஞ்சே யறி. 135

உள்ளும் புறம்பிடையு மொன்று மருவெனலைத்
தள்ளிலணு வேனுமுரு சத்தாமோ—கொள்ளுதற்கிங்
கென்று மடநெஞ்சே யேலாதெ னிவ்வருவை
நன்றாமோ நின்னொழுக்க நாடு. 136

இருப்பதனைக் கண்டிங் கிருந்தபடி நிற்றற்
குருப்பலமோ வென்றுமிருப் போதா—யிருப்பன்றே
யுற்ற வெளியன்றி யொன்றா ததோமுகத்தில்
கற்றறிவி லாமனமே காண். 137

உருவநா னாமளவு மோயா வதையா
மருவநா னாவொளிரி னாமோ—வுருவெனற்கே
யென்றுமுறிப் பட்டனைகொ லேழையே நின்றனக்கு
நன்றன்றே யிவ்வனர்த்த நாடு. 138

உற்றவுயிர்ப் பாவமதா மோதுமூட னானென்னல்
பற்றிலிறைப் பாவமோ பாழ்நெஞ்சே—வெற்ற
வெளிவடிவ நானென்னல் வேற்றுருநா னாகி
விளியுதிப்புக் காளானாய் விண்டு. 139

வெற்றவெளி பாவம் விளியுதிப் பின்றாமே
சற்றுமுண ராதெதைநீ சாதிப்பாய்—முற்றுணர்ந்த
மூடமே நின்னையொரு மூதோ னெனவடுப்பார்
கேடுறுவா ரில்லை கெதி. 140

உற்றவுயிர்ப் பாவம்போ லோதுமிறைப் பாவமுந்தான்
முற்றுநிலைத் தாலன்றோ மூதோய்பின்—பற்றில்லா
வென்று மெனதுருவ மெல்லையிலா வின்பமதாய்
நின்றொளிரு மன்றோ நினக்கு. 141

நினக்கெனவிங் கோருருவ நீங்கா மனமே
யெனைத்தவிர வின்றேகா ணென்று—நினக்குருவ
முள்ளதென நம்பியன்றோ வோதுகின்றாய் நானென்
றெள்ளுவா ரின்றோ விவண். 142

என்னுருவை யெட்டாதிங் கென்செய்தா யிஞ்ஞான்று
முன்னியதெல் லாம்பொய்யே யோர்ந்திலைகொ—லெந்நாளு
நின்போ லொருபேதை நீங்கா வுலகிலுண்டோ
வென்செய்வே னிக்கெடுதிக் கீண்டு. 143

தன்னைத்தான் றேடாச் சதிகார ரேன்பிறந்தா
ரென்றழுங்கி னார்பெரியோ ரேழையே—யென்னையன்றி
யின்றே யயலுளதா யெங்கெங்கு மாய்ந்திடினு
நன்றோநீ நானென்னல் நாடு. 144

சாயை யெனுமுலகந் தன்னை யொருமுதலா
வாயாட லாலறுமோ வன்னெஞ்சே—மாயையெனு
முண்டமாந் தன்மையெனல் முந்துவையோ வென்னுருவைக்
கண்டு கரைந்துருகக் காண். 145

சாயையென லெங்ஙனெனிற் சாற்றுதுங்கே ளிவ்வுலக
மாயவுரு வாதலினுன் மன்னுமே-மாயையெனல்
தோற்றன் மயமாயுஞ் சொன்மாத் திரமாயு
மேற்ற தெனவுணர்வா யீண்டு. 146

இவ்வுலகை மாயவுரு வென்றுரைத்த லொக்குமோ
விவ்வுலக மைம்புலற்கு மெட்டுவதா—லெவ்வமன்றே
நின்மொழிதா னென்னி னிலையின்றிப் போவதெவ
னுன்னும் விசாரணையி லோது. 147

இவ்வுலகை யாராய்த லெங்ஙனெனிற் சொல்லுதுங்கேள்
செவ்விதாம் வாதமைந்தாற் றேறுதலா—மிவ்வுலகஞ்
சத்தெனலு மன்றுகுஞ் சாற்றுமசத் தன்றுகு
மொத்தசத சத்துமன்று மோர் 148

சத்து மசத்துஞ் சதசத்து மன்றாகி
லொத்தநிலை தானியாதோ வோதுமெனிற்—சத்தசத்துக்
கன்னிய மான வனிர்வசன நீயமா
முன்னுதற்கென் பேய்த்தேர்போ லுள். 149

கானனீர் சத்தலதேற் காணுமோ கட்புலனுக்
கீனமில் சத்தென்னி லீங்கிருத்தற்—கூனமுறு
வீதிரண்டு மேற்பதெனி னேலா தெதிர்மறையை
யாதலின நிர்வசன மாம். 150

அபேதவாதம்.

ஐவகைய வாதமென லாகு மபேதந்தா
னைவகையு முய்யுநெறி யாய்ந்துணரி—னைவகையுங்
காரண காரியமுங் காணுங் குணிகுணமுஞ்
சாரமிலோ யின்னமுங்கேள் சார்ந்து. 151

பிம்பப் பதிவிம்பம் பேசுமம் சாம்சிகமும்
வம்பாம் விகாரமென வாய்க்குமே—நம்புதலுக்
கிவ்வைந்தின் வேற்றுமையை யேற்க வுரைப்பேன்கே
ளெவ்வமிலா தேநிலைப்பா யின்று. 152

(இவ்வைந்தின திலக்கணங்களையுந் தோகுத்துக்கூறல்)

உற்ற வொருபொருடா னேதுமிரு வேதுவினான்
மற்றோர் முதலென்ன வந்ததற்குக்—கற்றுணர்ந்தோர்
காரண காரியமாக் காட்டினா ரையமற
ஈரமிலா நெஞ்சே யிவண். 153

உற்றிலகு மொன்றின்க ணேதும் பலதன்மைச்
சற்று மகலாமற் றுநிகழ்வாற்—பற்றுங்
குணிகுணவா தம்மென்றே கூறினார் மேலோ
ரிணையிலா நெஞ்சகமே யீங்கு. 154

ஓர்பொருளி னீழல்வே றோர்பொருளி னுற்றிலகிப்
பாரி விருபொருளாய்ப் பாங்குறலாற்—றேர்வறியாய்
விம்பத் துடன்பிரதி விம்பமெனப் பேசினார்
நம்புதலுக் கையமிலை நாடு. 155

ஒன்றே யனந்தமதா யொன்றியது போற்றோன்றற்
கென்றுமம் ஸாம்சிகமென் றேயுரைத்தார்—சென்றோர்க

ளோர்முதலே வேறாக வுற்ற திரிதலுக்குப்
பார்மிசைவி காரமதாப் பார். 156

(இவ்வைந்தினுக்கும் நிரைநிரையே யுதாரணங்கூறல்)

இந்தநன் கைந்தினுக்கு மேற்ற வுதாரணங்கேள்
பந்தமுறு மட்கடமும் பாரின்கட்—சந்ததமு
நீலோர்ப் பலமு நிகழ்கின்ற வான்கதிரு
மாலோய்கேள் நீர்க்கதிரு மற்று. 157

நீரினலை யாதிகளு நீக்கமறும் பாற்றதியு
மோரி னிவையைந்து மொன்றுமே—சீராக
விவ்வுலகுக் கென்று மியைந்த வுதாரணங்கள்
செவ்விதாக் கேட்டுணர்ந்து தேர். 158

இவ்வுலக மேற்குமா றிவ்வைந் தபேதங்கள்
செவ்விதா யோர்பொருளிற் செப்புதுங்கா—ணெவ்வமென
லேலா திருத்தற்கு மெண்ணு மிவையனைத்தென்
பாலார்ந் திருத்தற்கும் பார். 159

(க - வது, காரணகாரியவாதம்)

மட்கட மென்னுங்கான் மன்னும் பொருளிரண்டாந்
திட்பமெனல் யாதென்போந் தேர்ந்திடினே—யொட்பமுளோ
யுற்ற கடமென்னி லொன்றுவதா லந்தமுதல்
சற்றும் பொருளாமோ தான். 160

இருகாலத் தின்றேனு மீங்கிடைகா லத்துண்டே
லிருகாலு மிம்மண் ணிருப்பா—மொருகாலஞ்
சொல்லுங் கடமுண்டேல் தோன்றுமிஃ துள்ளளவு
நல்லமண் ணின்றுமே நாடு. 161

ஆதியந்த மண்ணிருப்பி லாளுகட மின்றெனல்போ
லோதுமிடைக் கண்கடத்தி லுண்மையன்று—நீசமிலோ
யுற்றிலகு மண்ணென்ன லொக்குமெனி னிக்கடமாச்
சற்றேனுந் தோன்றலெது சாற்று. 162

உற்றகட மாவொளிர்த லோதுமண் ணன்றென்னிற்
பற்றுதற்கிங் கேதுமுதல் பார்க்குநா—முற்றும்
வெறுவாயை மெல்வரென வீணிற்சொல் லாடே
விறுதியிலென் செய்வா யிசை. 163

எக்கடந்தா னெஞ்ஞான் றிருக்கின்ற தஞ்ஞான்று
மக்கடந்தா ளுமெடுத்தே யாள்வதற்குத்—தக்கதெனி
லிக்கடத் தைப்பிடிக்கி லேன்மண் ணகப்படுவ
தொக்குமெனி லிக்கடம்பொய் யோது. 164

மண்ணினது தோற்றமெனின் மண்ணுபா தானமதாய்
நண்ணுமே யிக்கடந்தா ளுடுங்கான்—மண்ணினுக்கு
வேறுபோற் றோன்றிடினு மெய்ம்மையன் றேயென்று
மாறிற்சத் தாகுமே மண். 165

(உ-வது, குணிகுணவாதம்.)

காரிய மாயினுமே காணுங் கடத்தோற்றம்
பாரிற் பலவடிவிற் பாங்கொன்றும்—யாரும்
வடிவமென் றேலாதார் வன்னெஞ்சே யுண்டோ
தடையின்றே யீங்கிதற்குச் சாற்று. 166

உற்ற கடத்துவமென் றேதுகல சத்வமுமென்
றிற்றை வரைவழங்கு மிந்நிலத்திற்—பற்றுதற்கிங்
கெல்லார்க்குந் தர்மமதா நியற்குமே நெஞ்சீமெனு
நல்லோய் கடகலச நாடு. 167

கடத்தன்மை யென்பதற்குக் கட்டுரையே தென்னிற்
கடமா கியதர்மங் காண்பாய்—திடமதுற
வோதுங் கடத்தினதிங் கொன்றுமேற் றன்மையதா
யேதுகடத் திற்குருவ மே. 168

மண்ணினது தன்மையெனின் மன்னுங் கடமென்னல் [லோ
பண்ணுகடத் திற்குமுண்டோ பண்பெனரூன்—றிண்மையி
யின்றே கடத்தன்றி யென்றுமிது தன்மையென
னன்றுமே யிவ்வுறுதி நாடு. 169

பல்வடிவ மைவன்னம் பாங்கா மிருநாற்றஞ்
சொல்லுமூ றெட்டுச் சுவைபேத—மெல்லாங்
குணபேத மென்றன்றே கூறினர்காண் மேலோர்
குணமெனவே நீயெண்ணித் தேர். 170

பல்வடிவி லேயொன்றுப் பாங்குற் றிடுங்கடத்தைச்
சொல்லலா மேகுணமாத் தூய்மையிலோ—யெல்லோரு
மேற்பரே யிந்நிலைமை யென்னும் வழக்கமதா
வேற்பதிலெ னைய மிசை. 171

(௫ - வது, பிம்பப்பிரதிபிம்பவாதம்.)

காரியமே தன்மையதாக் காண்கின் றதுபோலக்
காரியமோர் விம்பமதாய்க் காணுவதால்—சீரில்லோய்ப்
பிம்பமென லன்றிவே றோர்பிம்ப மென்பதெனப்
பிம்பமதிற் றோன்றியதாற்பேசு. 172

வான்கதிர்போற் பிம்பமெனல் வந்துதிச்கு நீர்க்கதிர்போன்
மேன்மையிலா வேறுபிம்ப மெய்மையிலோய்—நான்கமையத்
தும்முண்மை யேலாதிங் குள்ளமண்போற் றோன்றகினுஞ்
செம்மையது வாகுமோ தேர். 173

வான்கதிர்போ னீர்க்கதிரும் வாய்மையதாக் காண்பதெனப்
பான்மைகட மெய்மண்போற் பார்ப்பவர்க்குத்—தோன்றுதலா
லென்றுரைத்தார் மேலோர்க ளேற்றுபதி விம்பமென
நன்றுணர்தற் கையமுண்டோ நாடு. 174

உற்ற விருகதிரி னொன்றுமெய் யொன்றுபொய்
யற்றதுதான் மாறு தவிர்தலைப்போற்—பற்றுள்ளோய்
மட்கடங்க ளிங்ஙனமே வாய்மைபோற் றோன்றிடினுந்
திட்பமெனன் மண்ணொன்றே தேர். 175

தோற்ற மதற்கிரண்டாய்த் தோன்றுகினு மக்கதிர்க
ளேற்றிங் கனுபவித்தற் கேகமே—யாற்றலிலோ
யிந்தக் கடமண்ணி லேற்கவெடுத் தாளினுமே
யந்தமில்மண் ணொன்றேமெய் யாம். 176

சத்தாகத் தோன்றிலகுஞ் சார்ந்தமண் போற்கடமுஞ்
சத்துப்போற் றோற்றுதலாற் சாற்றினர்காண்—முத்தரவா
பிம்பமதில் வேறும் பதிபிம்ப மென்னவே
நம்புதற்கிங் கென்னைய நாடு. 177

(௪ - வது,அம்சாம்சிகவாதம்)

ஓதியவம் சாம்சிகந்தா னொன்றே பலவாகு
மீதலைமொக் குள்ளாதி யீங்கிலகுஞ்—சீதநீர்
போலுமண் ணொன்றே புகலுகட மாதிகளாய்
ஞால மதிலிலகு நாடு. 178

மண்ணொன் றறுவகைய மாணுப் பிறப்பாயு
நண்ணுமிதி லொவ்வொன்று நாடுங்கா—லெண்ணுதற்கிங்
கோதுமென் பாதியுமா யொன்றி யிலகுவதா
லீதுமண்ணொன் றேபலவா மெண். 179

மண்ணம்ச மாதலினால் வாய்மையல மற்றனைத்துந்
திண்ணமம் சாம்சிகத்தின் தீர்ப்பென்ன—லெண்ணாதென்
னொன்றே பலவாகா வொன்றும் பொருளுமுண்டோ
வென்றுமியல் பேமண்ணுக் கீங்கு. 180

(ரு - வது, விகாரவாதம்.)

தோற்றுங் கடமனைத்துஞ் சொல்விகா ரம்மெனினு
மேற்றல் விகாரமென வீங்கரிதே—சாற்றுமிவை
மண்ணுருவ மாய்விளங்கல் வாய்ப்பதுமுண் டோவெவர்க்கு
முண்மையதாக் கொண்ட வரம். 181

உற்ற முதற்றிரிவே யொன்றும் விகாரமெனிற்
சற்றுந் திரியவின்றேல் சாற்றியமண்—சொற்ற
விகற்பமெனற் கெங்ஙனுறு மேவுங் கடங்கள்
விகற்பமில்மண் ணோதான் விளம்பு. 182

மண்ணா மெனினிவைகண் மாண்பிலோய் மற்றென்று
மண்ணினுக் கிச்சொருபம் வாய்மையதோ—திண்ணமெனி
னிவ்வடிவ மாறியக்கா லின்றாமோ மண்ணென்னல்
செவ்விதாப் பார்த்துணர்தி தேர்ந்து. 183

ததிவடிவ மாறியபின் சாற்றிடுமுன் பாலே
முதலா விருப்பதுண்டோ மூதோய்—ததியென்ன
லுற்றமுதல் கெட்டதனா லொக்குமே யிக்கடமோ
பற்றுமண் கெட்டதன்றே பார். 184

உற்ற முதறிரியா தொன்றுவதென் றாலீது
வெற்ற விகாரமெனன் மேவாதோ—கற்றுணர்ந்தோ
யிக்கடமா றீவளவு மெங்கேனு மண்ணியல்பு
துச்சமறத் தோன்றலுண்டோ சொல். 185

சொற்றகட பேதமண்ணுத் தோன்றுதிங் கேனுமிதை
வெற்றமணு யுன்னற்கு மேவுமோ—சற்றேனு
மெவ்வி தத்தானு மெவரானு மெஞ்ஞான்று
மெவ்வமுளோ யேற்க விசை. 186

காண்டற் கரிதாயிற் கண்ணிழந் தார்க்கெல்லாங்
காண்பரான் ஞேர்களெனக் கண்டுரைத்தார்—மாண்புடையோ
ரெப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு. 187

காரணமே காரியமாக் காண்பதனை யுன்னுமற்
காரியத்தை யேமுதலாக் காண்பதனுற்—காரியமா
நாட்டந் தவிர்ந்துமுத னுடற் கருமையினுற்
றீட்டினர்வி காரமெனத்தேர். 188

(இவைகள்-தாட்டாந்தம்-க-வது, காரணகாரியவாதம்)

இவ்வுவமை போலிங் கிசைக்கு முவமேய
மிவ்வுலக னெப்தியுமே யீங்காகு—மிவ்வுலக
மென்பா லுதித்தொடுங்கற் கேய்ந்ததனுற் காரியமு
நன்காகுங் காரணமு நான் 189

(உ-வது குணிகுணவாதம்)

என்பா லுதித்தொடுங்கு மிவ்வுலகு தோற்றமதா
லென்னுடையஞ் ஞானகுண மீதனைத்து—மென்னியல்போ
வென்னுமித் தோற்றங்கட் கேய்ந்தமுத லானதினு
னன்றே குணியென்னல் நான். 190

(௩-வது. பிம்பப்பிரதி பிம்பவாதம்)

தோற்ற குணமுலகந் தொன்மையாஞ் சத்துப்போற்
றேற்றபதி விம்பமெனச் சொல்லுதுமே—தோற்றமிதற்

கென்னை யலாவிடமு மென்னையலால் பிம்பமுந்தா
னுன்னுதற்கு வேறிலையென் றோர். 191

(௪-வது, அம்சாம்சிகவாதம்)

ஒதிடுமம் சாம்சிகமே லொன்றே பலவடிவாந்
நீதிலிவை கட்கர்த்தஞ் செப்புதுங்கே—ளாதியிலா
நானேசீ வாதிகளாய் நாடினமை யாலென்னை
நானேயம் சாம்சிகமா நாடு. 192

(௫-வது, விகாரவாதம்)

ஈனமுறுந் தோற்றங்க ளேய்ந்திடினு மம்சிகமா
யான வெனதுருவீ தாகாதா—லூன
விகாரமெனற் கையமிலை மெய்ம்மையிலோய் நானே
விகாரமிலாச் சிற்பரமா மேல். 193

காரண மாதிகளுங் காணுமதிட் டானமதாய்க்
காரிய மாதிகளோ காணுமே—சாரமிலா
வாரோப மாக வமைந்தவிப் பேதங்கள்
சீராயொவ் வொன்றினையுந் தேர். 194

ஒவ்வோர் விடயமுந்தா னென்றுவதா லிவ்வகுப்பாய்க்
கவ்வுதற்கிங் காகாதே காட்சிகளை—யெவ்விதத்து
மார்ந்தவெனைக் கண்டபின ரந்தமிலா வென்னுருவிற்
சேர்ந்தைக்ய மாவதென்றே தேர். 195

தோன்று முலகனைத்துஞ் சொல்வமே லின்மையதாத்
தோன்றுவதுண் டோமலடி தோன்றருன்—மான்ற
கருத்துடையோய் கேள்கயிற்றிற் காணுமர வென்ப
திருப்பென்ன லாமோ விசை. 196

கயிறாயிற் பாம்பெனலைக் கண்டதுண்டோ கண்ணிற்
கியையா வொருகணந்தா னேற்க—வியனுலக
மாராய்ந்த காலத்து மக்கண்ணுக் கேதோன்றச்
சிராகா தென்னிலிந்தத் தீர்வு. 197

தோற்றுகினு மிவ்வுலகஞ் சொல்லுமா ராய்ச்சியினி
லேற்றற் கியையுமோ வெஞ்ஞான்றுஞ்—சாற்றுநீர்
கானலையீங் காராய்விற் காணா தொழிந்ததோ
வேனிதனை யாயவிலை யேகு. 198

சொன்மாத் திரமாயுந் தோற்றன் மயமாயு
மின்மை யெனவிலக லேலாதோ—நன்மையிலோ
யீதிரண் டிற்கு மியைந்ததுல கத்தோற்ற
போதுவதென் னுண்மையென வுற்று. 199

தோற்றன் மயமாகத் தோன்றலெனி லிவ்வுலக
மேற்றிங் கனுபவித்தற் கின்றாமோ—சாற்றியமுன்
கானற் பெருநீரைக் கண்டுசுகித் தோரில்லை
யேனுல கத்திற்கிவ் வீடு. 200

இன்மையெனல் சொற்றோற்ற மென்னிலனு போகமெனுந்
தன்மையையே லாதவெதிர் தானுளதோ—வின்மையென்ப
தெங்ஙனந்தா னென்னி லியைந்தகன வெங்ஙனமோ
வங்ஙனமீ தாகுமென் றாழு. 201

விழித்தவிடத் தின்றாமே மேவுகனாக் காட்சி
விழிக்குமட்டு மின்றாமோ மெய்யே—விழிப்பிலுந்தா
னிவ்வுலக முண்டாமே லெனின்றா மாராய்விற்
கவ்வுமனத் தோற்றமே காண். 202

இவ்விழிப்பி லிவ்வுலக மென்று மிருப்பென்னி
லிவ்விழிப் புண்மையென்போ மேற்றற்குத்—திவ்வியமிற்
சங்கற்ப மாங்கனவைச் சார்ந்து விழிப்பதுபோ
லிங்கற்ப மாயையிலே னின்று. 203

கனவில் விழித்தோர்க்குக் கண்டதிலொன் றுண்டே
னனவில் விழித்தவர்க்கு நண்ணு—மனையவுந்தா
மின்றா தலினாலிங் கிவ்விழிப் புண்மையதோ
குன்றாத சொப்பனமிக் கூத்து. 204

சொப்பனமென் றான்மயக்கஞ் சொல்லலா மிவ்விழிப்பை
யப்படியிங் கேற்பரோ வாரேனுந்—தப்பாமே
யென்றாலச் சொற்பனந்தா னிந்தவவத் தானோக்கி
லின்றாப்போ லீதுமெதி லின்று. 205

இந்த வவத்தையினின் றேவிழிக்கி னிவ்விழிப்பா
மந்த மயக்கமற்று வாய்மையெனு—மெந்தனிலை
நன்றிலகு மக்கணமே நாடற் கிரண்டின்றி
யென்றும் பிறப்பிலதா மே. 206

பொருளல் லவற்றைப் பொருளென் றுணரு
மருளான விவ்விழிப்பை மாலோய்—தெருளன்றென்
றெவ்வமிலா வள்ளுவரு மேற்றிருக்க வெஞ்ஞான்றும்
பவ்வியமென் றேன்மருண் டாய்ப் பார்த்து. 207

எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொரு
ளப்படியே காண்ப தறிவலவென்—றொப்பில்லார்
மெய்ப்பொருள் காண்ப தறிவென் றுரைத்திருக்கப்
பொய்ப்பொருளைத் தாவுவதென் போந்து. 208

இவ்வவத்தை யைத்தீர்க்க சொப்பனமென் றேய்தலுற
வெவ்வமில்நல் லோர்மொழிந்த வித்தீர்ப்பைச்—செவ்விதா
யாய்ந்தாய்ந் துணராதிங் காளாகிப் பொய்ப்பொருட்கு
மாய்ந்திடுத லென்னோ மதி. 209

உற்றகண சொப்பனமு மோதுநெடுஞ் சொப்பனமும்
பற்றுதற்கிங் காகுமோ பவ்வியமாய் —முற்றுணர்ந்தோர்க்
கிவ்வுளவு தோன்றுமல்லா லேழையே நீயுணர்தற்
கெவ்விதத்தாற் றேன்று மிசை. 210

கணசொப் பனத்தைநிதங் கண்டுவிழித் தாற்போற்
கணமாறு விக்கனவைக் கண்டும்—பிணநெஞ்சே
யாய்ந்துவிழிக் காதென்னோ வான்றவர்பாற் கேட்டடங்கி
மாய்ந்திடுதல் நன்றோ மதி. 211

இவ்வுலக சொப்பனந்தா னென்மருளை யன்றியுண்டே
லெவ்வமிலா வென்றெருடா னெட்டாதே—செவ்விதாய்
நின்று விழித்தற்கு நீர்மையின்றே நீயோர்ந்திங்
கென்று நிலைத்திருப்பா யேய்ந்து. 212

விழிப்பென்னல் யாதெனிலோ மெய்யுணர்வே தானு
யுழைத்துத் தெளிந்திலக லுண்மை—குழப்பின்றி
யிந்தவிழிப் போர்நான்கா யேய்ந்திருத்த லாலென்று
மந்தநலஞ் சொல்லுதுங்கே ளார்ந்து. 213

(இஃது, க வது, விழிப்பு. சர்வமும் மித்தையானுபவம்.)

தனக்கனிய மாயிலகுந் தங்குபொருண் மூன்றுந்
தனக்கென் றுருவிலெனச் சாற்றும்—நினைத்திவைதான்
சொன்மாத் திரமாயுந் தோற்றனவா யும்மிலக
நன்மையுள் ளோர்விழிப்பர் நாடு. 214

(இஃது, ௨ வது, விழிப்பு. துவிதானுபவம்.)

தோற்றன் மயமாகத் தோன்ற விழித்திருத்தல்
சாற்றுமுத லாயினுமே தக்கோயித்—தோற்றமெலாந்
தோன்றலெதற் கென்னிலோ சொல்லு முணர்வுக்கே
லான்றவது வாவிழிப்ப ராய்ந்து. 215

(இஃது, ௩ வது, விழிப்பு. விசிட்டாத்துவிதானுபவம்.)

தோற்றமெலா நீங்கிடவே தோன்ற விழித்திலக
லாற்றலினா லீங்குவிரண் டாயினுமே--தோற்றமெலாந்
தன்னிடத்தி லேயிலகச் சற்றுமைய மில்லாமல்
நன்கு விழித்தொளிர்வர் நாடு. 216

(இஃது, ௪ வது, விழிப்பு. அத்துவிதானுபவம்.)

ஆன்ற தனதடத்தி லாகா வுலகிலக
லூன்றியமூன் றும்விழிப்பா வொன்றிடினுந்--தோன்றுமுல
கெல்லாமுந் தன்மயமா யென்று நிலைத்திலக
நல்லார் விழித்திருப்பர் நாடு. 217

நன்றுணராப் புன்னெஞ்சே நன்மையுறத் தாபிக்க
வொன்றுமிந் நான்கினுக்கு மோர்கரியா--யென்று
மிருந்த படியிருக்கு மென்னையன்றி யின்றேல்
திருந்துதிர மெங்கவைகள் செப்பு. 218

இந்நான்கு மென்னையன்றி யின்றெனினும் வன்னெஞ்சே
யிந்நான்கு நானலவென் றேற்பதனாற்—பன்னாளுந்
சானேதா னாயிருத்தல் சங்கையிலா நானன்றே
வேனோ வெனைமறந்தா யீங்கு. 219

முதல்விழிப்புக் கேனுமே முந்தா திருக்கி
லெதற்குத்தா னாளாவா யேற்ற—மதியில்லோ

யுற்றதே கோகமென லோடிடுமோ வாதலினால்
நற்றவத்தர் கூட்டுறவை நாடு. 220

கனவினின்று நீவிழிக்கக் கற்றதைப்போ னாளும்
நனவினின்றிங் கேன்விழிக்க நாடாய்—தினையளவு
மோர்விழிப்புக் கொத்ததென்மற் றோர்விழிப்புக் கொவ்வாதென்
பார்மிசைக்கண் வந்ததெவன் பார். 221

உற்றகன வின்விழிப்பா லொன்றுமிலை யேயென்று
மற்றநன வின்விழிப்பா மன்னுமே—பற்றில்லாத்
தானேதா னாகுநிலை சந்ததமு மையமின்றே
நானா மறிவொளியை நாடு. 222

நன்குவிழித் தற்குழைப்பை நாட வகையின்றி
யின்மைமய மாமுலகை யின்புருவாய்—வன்மனமே
யேற்றதனா லென்னுருவை யேமாந்தா யிஞ்ஞான்று
மூற்றநினைக் கென்றுண்டா மோர். 223

சொற்பனம்போற் சாக்கிரமுந் தோற்றன் மயமென்றிங்
கற்பமுமூ கிக்காம லாழுவதென்—சொற்பனத்தில்
பந்தமுத்திச் சாதனங்கள் பற்றுறுதற் காகுமோ
சந்ததமீ தேற்றுமன்றோ தான். 224

எற்பதனாற் சாக்கிரமென் றெட்டிப் பெயரீந்தா
ரேற்பதற்கிங் காட்சேப மின்றெனினு—நாற்பொழுது
முண்டோகா ணிவ்வவத்தை யோர்காலந் தோற்றமலாற்
றிண்மை யெனப்படுமோ தேர். 225

உற்றவொரு நாட்கனவி லோரும் பொருட்காட்சி
மற்றொருநாட் காண்கனவில் மன்னுமோ—சொற்றவுல

கென்று மொருபடித்தா யேற்க விளங்குவதா
வின்றென்ப தெங்ஙனமா மீங்கு. 226

புத்தியுடைத் திவ்வுலகு புத்தியிலாப் பூர்வமதா
மித்தையுண ராதிக்நா ளென்கற்றுய்—சத்தமுத
லென்று மொருபடித்தா யேய்ந்திருக்கி னும்மிவற்றை
நன்கனுப விக்கினுமென் னும். 227

கானனீ ராதியெலாங் காணுகினு மெய்போலக்
கானனீ ராதிகளுங் கட்புலன்மட்—டானதினல்
மற்றவோர் நாற்புலற்கும் வாய்மையன்றே யெக்காலும்
பற்றுதற்கிங் காகுமோ பார்த்து. 228

நாற்புலற்கு மொவ்வாம னன்கோர் புலனுக்கே
யேற்பதனு லின்மையே யெஞ்ஞான்று—நாற்புலனே
டொத்திலகுங் கட்புலற்கு மொன்றுவதா லிவ்வுலகஞ்
சத்தெனற்கிங் கையமுண்டோ தான். 229

ஓர்புலனுக் கெட்டுவபோ லோரைம் புலனுக்குஞ்
சீர்மையுறத் தோற்றுகினுந் தேர்தலின்க—ணீர்மையிலோ
யுண்டோ விறையேனு மோர்ந்துணரா தென்கண்டாய்
கண்டவர்பாற் கேட்பதென்றே காண். 230

ஆராய்வி னந்தத்தி லான வறிவன்றே
சீராக நின்றிலக நிண்ணமதாய்—பேராத
விவ்வறிவி னுக்கிங் கியையாவோ ரைம்புலற்கு
மொவ்வுமெனி னுண்மையதோ வோது. 231

இன்பவுரு வாமறிவுக் கில்லாத விவ்வுலக
மைம்புலற்கு மெட்டிலுண்மை யாகுமோ—புன்மையுளோ

யிவ்வளவு தோன்றாதா லென்னாகு நின்றீர்ப்புச்
செவ்விதா யாய்ந்துணர்வாய் சென்று. 232

தேர்தலின்க ணின்றாலென் செப்பு மிவையனைத்து
மோர்ந்தனுப வித்தற்கிங் கொவ்விலையோ—யார்க்குமெனி
னாற்புலனுக் கின்றேனு நாடிமயங் கற்கின்றோ
வேற்கும்பேய்த் தேராதி யெண். 233

கட்புலனுக் குண்டெனினுங் கண்டனுப வித்தற்குத்
திட்பமின்றே யெவ்விதத்துஞ் செப்புநீர்—கட்புலனோ
டொத்தபுல னைந்தினுக்கு மொவ்வுமெனி விவ்வுலகஞ்
சுத்தவா ராய்விலுண்டோ சொல். 234

அனுபவமே சாலுநீ ராராய்த லெற்றுக்
கனுபவந்தா னீங்கிரண் டாமே—தினமெவர்க்குங்
கற்பிதமெ தார்த்தமெனக் காணு மிவற்றினீ
கற்பிக்கப் போந்ததெது காண். 235

எதார்த்த வனுபவமே லெங்கேநீ தேர்ந்தாய்
நிதானமிலோய் கற்பிதத்தை நேரே—யிதுவெனநன்
கோர்ந்துரைத் தாயாகி னேதுலகை யுண்மையென
வோர்ந்துரைத்த தாகுமே யோர். 236

ஒன்றைமற் றொன்றாக்கொண் டோர்ந்துழறல் கற்பிதமே
லென்றுமிருப் பைக்கொண் டிலங்கிடுதல்—நன்றாக
வேய்ந்த வனுபவமா மேதோ விருப்பென்ன
லாய்ந்துணர்ந்து சொல்லிடுவா யால். 237

தோன்றுமுல கென்பதனைச் சொல்லலா மென்னிலோ
வூன்றியுனி யாயுங்கா லொவ்வொன்று—மேன்மையிலாப்

பண்புந் தொழிலுமன்றிப் பார்த்தனுப வித்ததுண்டோ
யுண்மையிலை யெங்கேனு மோது. 238

பொருளலவிங் கேனும் புகலுமீ தெல்லா
மிருந்தனுப வித்தற் கிழுக்கேன்—தெரிந்தவுமக்
கென்னிற் கயிற்றரவா லெய்திடினுந் துக்கசுக
முன்னுதற்கா மோவுளதா வோது. 239

கயிற்றரவு சோதனையிற் காணுமோ தோற்ற
மியைந்தவா றாய்தலின்க ணின்றே—வியனுலக
மென்னிலா ராயுழியிங் கேய்ந்தபேய்த் தேராதி
யுன்னுதற்கின் றேபுலனுக் கோது. 240

தோன்றுவதா லுண்டெனலோ சொல்லும்பேய்த் தேராதி
தோன்றுமுல கங்ஙனன்று தொட்டறிதற்—கூன்றிலையோ
வென்னிற் பரிசித்தற் கேதுமுத லோவதனை
நன்குணர்ந்து சொன்னால் நலம். 241

கடபேத மென்னிற் கருதுதொழில் பண்பாந்
திடமாகா வோர்முதலாச் செப்ப—மடநெஞ்சே
காணுமண் ணென்னிலோ காண்பதெது மண்பொருளாக்
காணப் புகன்றிடுவாய்க் கண்டு. 242

மகத்துருவ மாமென்னின் மாநிலத்தா னென்போ
மகத்துசய மாயிருக்கின் வாய்மை—பகைப்புள்ளோய்
தோன்றுவதே சாலுமெனிற் சொல்லுங் குணந்தொழிலா
மான்றமண் ணெங்கே யறை. 243

சேர்க்கையினாற் பண்புருவாஞ் சேர்க்கைக் கணுத்திரளாம்
பார்க்கிலெவ் வோரணுவும் பண்புருவே—தீர்க்கமிலோ

யொவ்வோ ரணுவுமிங்ங னோதியபண் புந்தொழிலேல்
பவ்வியமா மண்ணெதுவோ பார். 244

பரமாணு வாமென்னிற் பண்புந் தொழிலும்
பரமா ணியற்கையெனிற் பாங்கே—திரமில்லா
வெற்றகுண பேதமலான் மெய்யன்றே யவ்வணுவும்
பற்றுதற்கிங் காமோரீ பார். 245

அணுத்திரளை யாராய்ந்த வந்தமவை யின்றே
லணுத்திரளாய் நிற்பதெஃ தந்தோ—நுணுக்கமிலோ
யாய்தலுக்கு முன்னொன்று மானமண் ணன்றோகாண்
மாய்தலின்பின் னும்முளதே மண். 246

குணபேத மெல்லாமுங் கொள்பொருடா னன்றேற்
குணபேத மெக்குணியைக் கொண்டோ—விணங்கிலக
லுற்றகுணி யீதெனவே யோதுதற்கிங் காகுமேல்
முற்றும் விவேகியென்போ மூந்து. 247

அக்குணிதா னன்றோ வனுபவத்துக் கொவ்வியதிங்
கெக்குணியோ வென்றழுங்க லேனின்றா—மக்குணியோ
வென்னையலால் வேறின்றே யேனோ திமிர்கொண்டாய்
நன்காமோ நின்புரளி நாடு. 248

குணியைநன் காராய்ந்து குன்றா திலகி
விணங்குமோ நின்றீர்ப்பிங் கேற்கப்—பிணநெஞ்சே
யிந்தவறி யாமைக்கோ வென்றும் புலமையுற்றாய்
மந்தமதி யோருவக்க வந்து. 249

நல்லவர்பா னண்கடுத்து நன்மொழியைக் கேட்டுணர்ந்து
செல்லுநெறி யீதெனவே தேராமல்—வல்வழக்கிட்

டேதிலரை நீயிகழ்ந்தே யேமாந்தா யென்னுருவை
பாதகத்தை யென்சொல்வேன் பார். 250

தன்னை யுடலளவாத் தானெனன் றெனுமளவு
நின்னை யிழிந்தோனாய் நின்றுணர்வாய் - தன்னை
யுயர்வுறக் காண்பதெலா மொவ்வாதான் றோர்க்கேல்
மயலறுமோ நெஞ்சே மதி. 251

உற்ற குணியெனலை யோர்கணமுந் தேடாமற்
பற்றுவதேன் யானெனதாப் பாழுருவை—முற்று
மடமையதா மீதுன்னை மாண்போனென் றுன்னத்
திடமென்னே நெஞ்சேநீ தேர். 252

நானெனலை யன்றிகுணி நாடுதற்கு வேறிலதா
ஞனெனலைக் கண்டன்றோ நாங்கணிப்ப—முனமுளோ
யுற்றசீ வேசரென வொவ்வு மறிவின்றிப்
பற்றுதற்கில் லாவுலகைப் பார்த்து. 253

பரசிவ ருண்டெனவே பாங்காய்க் கணிக்கிற்
றிரமுறுமோ விக்கணிதந் தேரிற்—றிரமில்லாத்
தோற்றன் மயமாகத் தோன்றுவதா லிவ்வுலக
மாற்றுதற்கே னின்றும் வலிந்து. 254

அயலை யயலைக்கொண் டந்தோ கணிக்கின்
மயலறுமோ பேதாய் மதித்தற்—கியைந்தவெனைக்
கொண்டு கணித்திங்கே கூறத் தெரியாத
துண்டமதி யேனினக்குச் சொல். 255

எதைக்கொண் டெதைக்கணித்தா யென்று பிறர்கேட்கி
லிதைக்கொண் டிதைக்கணித்தே னென்று—மதித்தென்னைக்

கூறவகை யுண்டாயிற் குன்றா வெனதயலைக்
கூறுவதே னுண்மையதாக் கொண்டு. 256

எவ்வயலைக் கொண்டிங் கிசைப்பதனுக் காளானா
யவ்வயலோ வாதியந்த மாகுதே—யெவ்வமறப்
போதித் தடைவதெனோ பொல்லா மடநெஞ்சே
சாதனினைக் கென்றுறுமோ தான். 257

ஆசான்பா லெய்தி யகமெனலைக் கொண்டளக்கா
தேசுதற்கே யாளானா யெஞ்ஞான்று—மாசகலா
வல்லவிலை யென்பதைக்கொண் டாங்காங் களப்பானே
னல்லலறு மோவிதனா லாழு. 258

அறிவைக்கொண் டன்றோ வயல்கணித்தல் வேண்டும்
வறியவய லைக்கொண்டு வாளா—வெறியோய்க்
கணிப்பதற்கோ கற்றோனாய்க் காட்டுகின்றாய் விட்டுத்
தணிப்பையோ முத்தாபத் தாக்கு. 259

உருவாக நீயிருந்தே யோதுதற்கிங் கானாய்
பரிபாகஞ் சற்றுமில்லாப் பாழோய்—இரும்புவியி
லேதிலனை யேமாற்றற் கெட்டியெட்டித் தாவுதலா
லேதமுனை நீங்குதருனென்று. 260

அயலையசத் தாக்கணித்தற் காசான்பா லெய்தா
தயலைமுத லாக்கொணர்ந்திங் கந்தோ—மயலைக்
கணிப்பதற்கே யாளானாய் கற்றுணர்ந்து நெஞ்சே
நுணுக்கமதி யுண்டோ நுனக்கு. 261

கணிப்பதற்கிங் காளானாய் கட்டுபடா தென்றும்
பிணித்தநோய் மூப்புசாப் பேதந்—துணுக்குறவே

வந்தக்கா லென்செய்வாய் வாழா மடநெஞ்சே
தொந்திப்பெல் லாமறுமோ சொல். 262

ஆன்றோ ருரைப்பிட்ட தந்தோ விதுதானோ
கான்றசோ றென்றனைத்துங் கற்றிலையே—தோன்றி
வெளிவந்த தென்னோகாண் வீணாக நெஞ்சே
வொளியிடுமோ வென்னுருவ மோது. 263

பிதுங்கற் கிடமுண்டோ பேதையே யென்றும்
பதுங்காதிங் கேன்கெட்டாய்ப் பாரில்—பிதுங்குவதோ
வாடுதழை தின்பதொக்கு மையையோ நானெனலை
நாடுதற்கென் றாகுமோ நன்கு. 264

நானே குணியெனலா னானே குணமாகு
மேனோ வெளிப்பட்டிங் கேமாந்தாய்—நானெனவே
நாடித்தற் காளானாய்த் தொந்தமிலா வான்றோரைக்
கேடுற்று வீழ்வாய் கெதி. 265

உற்றகுண நானாகி லோதுங் குணிநானுஞ்
சற்றுமுண ராமலே தக்கவினைச்—சொற்றகுணம்
பூதவெளி யின்கண்ணே பொன்றிடுமிக் கற்பனையை
யோதுவதென் னோனதா யோர்ந்து. 266

சொற்ற வெளியின்கட் டோன்றுறுத லேதயலாய்
வெற்றவெளி யேயென்னின் மெய்ம்மையே—கற்றோய்ப்
பரிணமித்த லோடு பகருமா ரம்ப
மிருமையில் யாதென்போ மீங்கு. 267

பரிணாம பட்சமெனிற் பாறிரிந்தாற் போலிப்
பெரிதாம் வெளிதிரிந்து பேதித்—தொருமுதலாய்த்

தோன்றுவதென் றாலிவைகள் தோன்றற் கிடமெதுவோ
வூன்றியதை யீதெனவிங் கோது. 263

வெளியிடந்தா னென்னில் வெளிதிரிந்த தன்றே
வெளியன்றித் தோன்றுவது வேறாய்க்—களியுடையோ
யீதென்று கூறுவா யிந்தவெளி யேயன்றி
யோதவறி யேனென்றா யுற்று. 269

உற்ற வெளிதிரிதற் கொக்குமே லெங்கேனுஞ்
சற்றேனுஞ் சித்துகுணஞ் சார்ந்திருக்குஞ்—சொற்றவெளி
தன்னையுமற் றொன்றினையுந் தானறிதற் பாலதோ
சொன்னமொழி தீர்ப்பன்றே சொல். 270

முதறிரியாத் தோன்றல் முழுவெளியா லாகா
வதுவெதுவென் றாராயி னந்தோ—சிதைவில்லாச்
சித்தி னிலைமையதாந் தேரா தலைகின்றா
யெத்திறத்தாற் சாதிப்பா யீங்கு. 271

இவ்வாறே பல்லணுவா யெங்கு மிலகுவதிங்
கொவ்வாத சித்தென்னு மோங்கொளியே—கவ்வுசலுக்
கச்சித்தி யாதோவென் றையமுறேல் சத்தியமாய்ச்
சச்சிதா நந்தநான் றான். 272

ஒவ்வோ ரணுக்கண்ணு மொன்றுமெனைக் கண்டுபிடித்
தொவ்வாத வாநந்த முட்கொண்டார்—செவ்விதாய்ச்
சீவன்முத் தாக்களெலாந் தேறாயினியேனும்
பாவகர்மம் விட்டென்னைப் பார். 273

எல்லா வணுக்களுமே யென்பர் விலகுவதை
நல்லோர் தரிசிப்பர் நன்குணர்ந்தே—பொல்லாங்கோ

யீதுணரா தென்கற்றா யிந்தப் புவியதனில்
வாதிடற்கே நிற்கின்றாய் வந்து. 274

என்பாலில் லாம லியைந்த வணுக்களுண்டே
லின்பாக வோர்ந்துய்தற் கேற்குமே—யென்பாலி
லெல்லா மிருந்து மெனையன்றி யின்றதனாற்
சொல்லுவதென் வேறாகத் தோய்ந்து. 275

அணுக்களைநன் காராயி னாங்காங்கு மென்று
நுணுக்கப் பொருள்வெளியே நோக்கற்—கிணக்கமுறு
நானென்ன லங்கின்றே நானாமோ வவ்வெளிதா
னேனென்னைத் தேடவிலை யேய்ந்து. 276

நானணுக்க ளன்றென்னி னானலவென் பேன்வெளியை
யேனென்னி னிவ்வணுக்க ளெய்திலகும்—ஞானமிலோய்
தூலமொடு சூக்குமமாச் சொல்லுமிவை கட்கிடமாய்ச்
சாலவுமே நிற்றலினாற் றான். 277

ஆதேய நானெனலா லாதாரம் வேறாமோ
வாதா ரமுமூன்றா யார்ந்திலகு—மோதுதுங்கேள்
தூலசூக்மோ பாதிகளைச் சூழ்ந்தபூதா காயமொடு
சாலமனா காயமுமாந் தாம். 278

சூட்சுமபூ தந்தேயின் றோன்றுசூன்யா காயமதா
மாட்சேப மின்றிவைக்கிங் காயுங்கான்—மாட்சியிலோ
பந்தந்த காலத்து யாங்காங் கதுவதுவா
யெர்தமுத லோவிளங்க லேய்ந்து. 279

என்னையன்றி யின்றதனா லென்னுருவை நாடாதிங்
கென்னவுழைப் புக்கானா யேழையே—யென்னுருவைப்

பார்த்துச் சுகிப்பவரே பந்தமிலா முத்தரென்போம்
பேர்த்துரைப்ப தெல்லாம் பிழை. 280

அழுக்கா றவாவெகுளி யின்னாச்சொன் னான்கா
விழுக்காம் வினையியற்று மேழாய்—உழைப்பாற்றி
யென்றெருளைத் தேடாதிங் கேனோ வெளிப்பட்டாய்
நன்றென்னு மோவிந்த நாடு. 281

ஆதார வாதேய மாங்கனைத்து நானெனலா
லேதாகு நின்றீர்ப்பிங் கேற்கவே—போதமென
னீங்கிச் சுகிப்பதற்கு நேர்வதென்றோ வென்னுருவைப்
பாங்கில்லாப் புன்னெஞ்சே பார்த்து. 282

போதமென லீதெனவே புந்தியுளோர் பாற்சென்றே
யேதமறக் கேட்டுணரா தெவ்விதத்து—மோதிடுதற்
கேனோ வெளிப்பட்டா யெங்கெங்கு நானுனென்
றானா முடனானோ வோது. 283

நானுனென் றேபெவர்க்கு நன்குபோ திக்கின்றாய்
நானுனென் றன்னோரு நன்மகிழ்வா—ரூனுடலை
யன்றி யரைக்கணமு மாராய்ந்து கண்டதுண்டோ
வென்றென்னைக் கண்டுவெப்பா யேய்ந்து. 284

போதமெனக் கெட்டதலாற் போலிக் குருவாலப்
போதமெனை யன்றியுண்டோ பொய்யன்றே—நீதமிலோ
யோதுதற்கிங் கானாய்நீ யூரைக் கெடுக்கவெநின்
பாதகத்தை யென்சொல்வேன் பார். 285

இதுநானென் றென்றைக் கிருப்பாய் மனமே
யுதையாஸ்த மின்றி யொளிரு—மதியென்னை

யிந்தவஃது பூதியின்றே லெங்கு மயலுளதாய்
வந்துவந்து தாக்கிடுமே மால். 286

என்னையுற்றுப் பாரா திங் கென்மருளை நாடளவு
மன்னியநா னுன்னை யகலாதே—யென்றெருளை
நாடுவதால் நன்றாகு ஞானமிற்கோட் டங்கொண்டு
வாடுவதா லென்னோ வழங்கு. 287

என்மருளி னாற்பிறப்பிங் கென்றெருளி னால்வீடே
யென்றெருளு மென்மருளு மென் னுருவே—யென் னுருவி
லிவ்விரண்டு முண்டிலதை யேற்பதனா லென்னையன்றிக்
கவ்வுதற்கு வேறுண்டோ கண்டு. 288

அனைத்துந்தற் காரியங்க ளாயிருக்க நீயேன்
கனத்தமா யைத்தொழிலாய்க் கற்றா—யனைத்தினையு
நானல்ல நானலதாய் நல்லாய்வி னந்தத்தி
னாணிறத்தற் கேனியையு நாடு. 289

அல்லவெனற் கேற்க வறைதத்து வாந்தத்தி
லல்லவென்ப தேலாதாங் காமெனற்கு—நல்லவரு
ளென்னி லனாதியதா லிந்த விருவருந்தா
மொன்று படுவதெங்கே யோர். 290

இருவ ரனாதியதா லேனருணா னாரும்
பெருமாயை நானலதாற் பேச்சே—னொருமூன்றும்
வெவ்வே றெனப்படலால் வேண்டுவதே தாமெனற்குச்
செவ்வனே யுள்ளுணர்ந்து செப்பு. 291

உற்றிலகும் பாசவச மொன்றா தகலுவதாற்
பற்றி லருள்வசமோ பந்திக்கு—முற்று

மிருபொருளும் வேறதனா லேய்ந்தவுயிர்க் கென்று
மொருவா நிலையெதுவோ வோது. 292

ஆதியுருப் பாசவச மந்தத்தை யேற்பதனா
லாதியென லுற்ற வருள்வசமு—மோதுமிடத்
சந்தமென லேலாதென் னையையோ புன்னெஞ்சே
சொந்தமுறற் கெங்ஙனமாஞ் சொல். 293

எப்போது மேயென்னி லேகைக பாவமென
விப்போதில் லாதலைதிங் கெப்போதுஞ்—செப்பிடுதற்
கின்றே பொருத்தந்தா னென்று மனர்த்தமதா
நன்றலவே நின்புரளி நாடு. 294

முக்கால முந்தழுவி மூதுணர்வாய் நின்றோர்க
ளொக்கா லமுமென்றா ரேழையே—யெக்கால
மொன்றிரண்டு நீங்கியதற் கொன்றாதெக் காலமென
னன்றலவே நின்றீர்ப்பு நாடு. 295

உற்றிலகு மைக்யமென லோதுமொரு காலத்தில்
மற்றவிரு காலத்து மாயையதே—மற்றிவற்றி
லின்பதுன்ப மேல்கீ ழிறப்புபிறப் பாதிகளை
நன்கனுப வித்தலன்றோ நாம். 296

மாயை யெனல்பொருளோ வண்மையில் லாப்பண்போ
தீயமன மேபொருளேற் சிந்தனைசெய்—தாயசிவற்
கப்பாற் படும்பொருளோ வான்றவகத் துப்பொருளோ
வொப்பற் குணர்த்திடுவா யோர்ந்து. 297

அப்பாற் படும்பொருளே லச்சிவத்திற் கெல்லையது
தப்பா திருத்தலைநீ சாற்றுவையோ—வெப்போது

முள்ளிற் படும்பொருளே லொன்றும் புரையுள தா
யெள்ளற் கிடந்தருமே யீங்கு. 298

எல்லையுள தென்னி லெவைக்கும் வியாபகமாச்
சொல்ல லெவன்சுருதி தோன்றுதென்—வெல்லுதற்கிங்
கெங்குந் திருக்கூட்ட மேற்றதனு லிவ்வையந்
தங்கா தகன்றிடுமோ சாற்று. 299

புரையுடைமை யின்றென்னிற் பொன்று மனமே
நிரந்தர மாயிலகு நீர்மைப்—பரமென்னல்
வேறுபொரு ணிற்பதற்கு வேறிடமின் றேயென்று
மாறின்றிச் சொல்வாய் மதித்து. 300

மாயை முதலென்னின் வாய்க்குமே யிவ்வனர்த்த
மாயை குணமெனிலோ வாய்ப்பதைக்கேள்—தீயோய்நீ
பின்ன குணமாமேல் பேசுங் குணியன்றி
யென்னவித மாய்நிகழு மீது. 301

உற்ற குணியைவிட் டுண்டேல் குணமென்னல்
வெற்றகுண மோர்முதலா மேவுமோ—சற்றேனு
மிங்ஙன மீதிருக்க வெங்ஙனஞ்சா தித்துய்வாய்
பங்க மன்றேநின் றீர்ப்பின் பாங்கு. 302

கயிற்றரவு போலாமே கண்ணிழந்த நெஞ்சே
யியைந்தமா யாகுணந்தா னென்றுங்—கயிற்றரவிங்
கேதுக் குபாதான மேற்றிலகு மங்ஙனமே
யோதுவையோ மாயைக்கு மோர்ந்து. 303

சொல்லுவதாற் பின்னமதாத் தோடநனி யெய்துமென
நல்லோ யபின்னமென நாட்டுதியேல்—வில்சிவந்தா

னென்று மருண்ஞான மெய்திடுமே யச்சிவத்திற்
கொன்றுமோ மாயைகுண மோது. 304

மாயையஞ் ஞானகுணம் வாய்மையருண் ஞானகுண
மாய விருகுணமு மான்றசிவற்—கேயுமெனி
னென்றும் பகையின் றிருப்பதற்கிங் கேதென்கொ
லொன்றுதே மாயைகுண மோது. 305

இருகுணமு மோர்சிவத்தி லெய்திருக்கு மோதா
னொருவரையி லல்லோடொளியு—மொருகணமு
மொத்திலகு மேவினைவயு மொத்திருத்தற் கையமிலை
பித்தோ யிதனையுணிப் பேசு. 306

ஞானகுணந் தங்கியிடின் ஞானவடி வானுமஞ்
ஞானமிருப் பாலேயஞ் ஞானியனு—மீனமுளோ
யென்று மனர்த்தமே யெல்லையில் லாச்சிவத்திற்
கொன்றுமோ நின்றீர்ப்பிங் கோது. 307

ஞான சொரூபியெனல் ஞாயமே நற்சிவமஞ்
ஞான சொரூபியெது நாட்டிடுவா—யீனமெனு
மாயா மயமெனிலம் மாண்டசிவற் குண்மையெதோ
வீயாத வின்பமெனின் மெய். 308

மாயையா கும்பொருட்கு வாய்மைநிலை துக்கமதா
மாயசிவா நந்தத்திற் காணியுறந்—தீயோய்கே
ளெங்குஞ் சுகமயமே லேற்குமா யாதுக்கந்
தங்குதலுக் கெவ்விடமோ சாற்று. 309

மாயையென லெங்குமேல் மன்னுசிவ மின்றுகு
மாயசிவ மெங்குமே லங்ஙனமே—மாயையுந்தா

னென்றிருக்கி லொன்றெங்ங னுற்றிலகு நெஞ்சேநீ
நன்றுணர்ந்து சொல்வதற்கு நாடு. 310

இன்னுமோ ரையங்கே ளின்பாஞ் சிவமென்னல்
மன்னுசர்வா தாரமென வாய்மைநூல்—பன்னுவதூஉ
மென்றுநிரா தாரமென வேத்துவதூஉ மிவ்விரண்டில்
நின்றதெது வோவிசைக்க நேர். 311

உற்றசர்வா தாரந்தா னுண்மையெனி னிவ்வுலகம்
வெற்றவடி வாகாமல் மெய்வடிவாம்—சொற்றலுறு
மெய்னமநிரா தாரமெனில் மேவுமனைத் துந்தோற்ற
முய்வதெங்ங் னையமின்றி யோது. 312

சத்தெனலை யேற்பதெனிற் சார்ந்த வயலனைத்து
மொத்தசர்வா தாரமென்ப தொக்குமே—நித்தியமு
மித்தை யெனப்படுமேல் மேன்மையினி ராதாரஞ்
சத்தியமா மென்றேநீ சாற்று. 313

ஆதார மென்னிலோ வாகும் புரைதானி
ராதார மென்னி லனைத்துமின்றாம்—வாதிடற்கு
நானெனவென் றேகுவதா னன்காம் வினைக்களையங்
நானெனலோ நீக்கிவிடு நாடு. 314

அனைத்தினையுந் தோற்றமென லத்துவித பட்ச
மனைத்தினையுஞ் சத்தென் றறைத—லுனற்கெளிதாஞ்
சித்தாந்த பட்சமெனிற் செப்புமிவற் றின்னுண்மை
யொத்ததியா தோவதனை யோது. 315

ஓதியவிவ் வோரிரண்டு மொன்றுமே தோடமதாய்
ஈதிரண்டு நீக்கிடுதற் கேற்குமோ—சோதனையின்

மாறுது நிற்பதெதோ வாய்மையிலா நெஞ்சேநீ
தேறுதிங் கென்செய்தாய்த் தின்று. 316

சோதனையி னில்லாதே சொல்வாத மென்பவெலாஞ்
சோதனையாற் றேராதென் சொந்தமுற்றுய்—வாதிடற்குச்
சத்தெனலு மெய்யேகாண் சார்ந்த வனைத்தும்ம
சத்தெனலு மெய்மையே தான். 317

ஆகநா ளுமளவு மாங்கனைத்து முண்மையதா
மாகநா ளுவொளிரின் வாய்மையன்றுந்—தேகாதி
சத்துமசத் தாயிருக்கிற் சாற்றுண்மை யாதென்கோ
பித்தமுளோ யீதுன்னிப் பேசு. 318

செகபாவஞ் சத்தசத்தாச் செப்பலா மென்னிற்
செகபாவ மாநிற்றல் சித்தா—மகமலவோ
வவ்வகந்தா னெங்கணுமே யார்ந்திலகி லெங்ஙனுண்டாங்
கவ்வுமல கென்பவெலாங் காண். 319

(துவிதமேமாயாவாதமெனல்.)

தற்பாவ மாயிருக்கச் சார்ந்தவெல் லாமாயா
நற்பாவ மென்றேநீ நாட்டுவதிங்—கற்பமுளோய்
பற்றுதற்கில் லாவெவைக்கும் பாங்கா முதனுனே
லுற்றபிர்ம வாதமென்போ மோர். 320

அனர்த்தமா யாவாத மத்துவித மென்பா
யனைத்தினுக்கு மாயைமுத லாக—நினக்குத்தா
னெங்கேனுஞ் சொன்னதுண்டோ வேற்கும்வே தாந்தநூல்
பொங்குவதேன் கூட்டமுற்றுப் பொய். 321

சர்வமும் பிர்மமெனச் சாற்றுவதால் வேதாந்தம்
பிர்மவா தம்மெனற்கேன் பின்னிட்டாய்—சர்வமுளோய்

தோன்றாம லேயன்றோ துன்மாயா வாதமென்றா
யூன்றாதென் னீங்கிதனை யோர். 322

உற்றவுல கிற்குமுத லோதுவதால் மாயையினை
முற்றுமா யாவாத முந்துமுனை—சற்றேனு
மையமிதற் குண்டோகா ணுபாசப் பெட்டகமே
மையலன்றோ நின்றீர்ப்பு மாற்று. 323

மாயாத் தடிப்பதனை மன்னுலகிற் காதியென்றாய்
மாயாவா திப்புலவன் வாய்மையினீ—யாயாதிங்
கன்னியர்மே லேற்ற லவிசாரிக் கொக்குமே
பன்னுவதெல் லாநின்னாற் பாழ். 324

மாயா வசமகன்று மன்சிவமோ டொன்றாகில்
மாயாவா தப்பெயரை வாய்க்காதேல்—பேயோய்கேள்
நானலவென் றேயகன்ற நன்கின்மா யாத்தடிப்புத்
தானுளதற் கென்னையஞ் சாற்று. 325

உண்டென்று நீயொடுங்கி லோதுசெக மாயையென
லுண்டென்னு நின்கொள்கை யோடிற்றோ—திண்மையிலோ
யிந்த மருளகலா தெய்தியதா னற்சிவத்திற்
சொந்தமுறு மோவைய்க்கஞ் சொல். 326

மருளகலா தெய்தலன்றோ மாண்பிலோய் நின்னைக்க
மிருளகற்றற் கெங்கே யியையு—மருளிருளே
லொன்றையொன் றாயுணர்த லொன்றுவொன் றாத்தோன்ற
லொன்றுவதா மீங்கிவற்றை யோர். 327

மருளகலா ஞான மருளிழுக்கு மன்றோ
தெருணிலைப்ப தென்றோகாண் செப்பாய்—மருளறற்குக்

கல்லாது கற்றுணர்ந்தாய்க் காரியமா மித்தோற்ற
நல்லோ யெதின்மாட்டோ நாடு. 328

(உவமானவுவமேயவாபாசம்.)

சத்சல்லாக் காரியமாச் சாற்றுவதி யாநீயோ
சத்தாகுங் காரியமாய்ச் சாற்றுகின்றாய்—பித்துள்ளோய்
மாயை யெனலாதி மன்னுஞ் சிவநிமித்தந்
தூயவருட் சத்தி துணை. 329

இம்மூன்று காரணத்திற் கேய்ந்தவுப மானமதாய்
நம்புதற்கிங் கோர்மூன்றை நாட்டுகின்றாய்—செம்மையிலோய்
இந்தமண் ணேயாதி யேய்ந்தகுலா லன்னிமித்தன்
தந்ததண் டந்துணையாய்த் தான். 330

சொன்மூன்று காரணமுந் தோன்றலுறு மெய்ச்சடமு
மிந்நான்கும் வெவ்வேறா யெய்வதுபோல்—மன்சிவமு
மாயையுஞ்சிற் சத்தியுநல் வாய்மையுல கும்மிவைகள்
தீயோய்வெவ் வேறாமே செப்பு. 331

உற்றதண்ட சக்கரமு மோதுங் குலாலனுமே
சற்றுமபே தத்தையற்றத் தானிகழ்போற்—பற்றில்லா
வீசனுஞ்சிற் சத்தியுந்தா னென்றென்றும் பேதமின்றேல்
மாசுறுமே நின்னுவமை மற்று. 332

உவமையாச் சொன்னிமித்த மொன்றுந் துணையு
மவமின்றே வெவ்வேறுக் காயி—னுவமேயத்
தீதிரண்டு மொன்றுற்றிங் கேய்ந்திருப்ப தாலேனோ
வாதிடுதற் காணாய்நீ வந்து. 333

அயன்மண்ணைக் கொண்டுகட மாக்குவதுபோல
வயன்மாயைக் கொண்டன்றோ வாக்க—லியலுளதே

லெந்தவிடத் துள்ளபொரு ளெங்குஞ் சிவமென்று
லந்தவிட மோதிடுவா யாய்ந்து. 334

தன்பா லுளதென்னிற் றன்னிடமண் ணைக்கொண்டு
நன்குகடஞ் செய்வதுண்டோ ஞாயமன்றே—வன்மையுளோ
யிவ்வுவமை தக்கதன்றே பேஞே விவகரிப்பா
யெவ்வமித ஞலறுமோ வீங்கு. 335

தன்பான்மண் ணைக்கொண்டு தான்கடமா யாக்கலுண்டேல்
தன்பான்மா யைக்கொண்டு தானுக்க—னன்மையதாம்
வேறிடத்தைக் கொண்டுமெனல் மெய்ம்மைகட மாக்குவதால்
வேறிடமுண் டோமாயை வீண். 336

வேறிடத்த தென்னில் வியாபகத்துக் கானியுண்டாம்
வேறிடத்த தன்றேல் விவர்த்தமதா—மாறி
லுபாதான மாயையென லொன்றுஞ் சிவன்பா
லபாவமில் லாதிருப்பே லாங்கு. 337

நிறைந்தபரி பூரணமாய் நிற்பனெனல் பொய்யோ
வுறையுமிட மெங்ஙனமோ வோதாய்—மறைந்திலகு
மாயையென்ப தென்றும் வாய்மையில் லாநெஞ்சே
யாயவிலை யேனின்னு மாழ்ந்து. 338

ஆயசிவா நந்த மகம்புறமு நள்ளு மின்றேல்
மாயையுபா தானமென்றேன் வாதிப்பாய்—மாயையுமோ
வுள்ள பொருளென்னி லொன்றுஞ் செகமனைத்துந்
தள்ளுதற்கா மோவிலதாச் சாற்று. 339

இல்லதெனின் மாயைதனை யீங்கனைத்து மின்றுமே
நல்லோ யிதற்குநீ நாணுதே—னில்லுளதாச்

சாற்று மிருவழியுஞ் சாய்தற் கிடமுண்டோ
வேற்றிங் குவப்புறலே னெண். 3,0

மாயையுபா தானமெனின் வாய்மை யுலகெவைக்கு
மாயவுபா தானமுமூன் ருய்ங்கமூ—மாயுங்கா
லாரம்போ பாதான மாகும் பரிணமஞ்
சாரமில் லாவிவர்த்தந் தான். 341

உற்ற முதறிரியா தொன்றுவது காரியமாய்ப்
பற்றுமா ரம்பமதாம் பார்க்குங்காற்—கற்றுணர்ந்தோ
யுள்ள முதற்றிரியி னென்றும் பரிணமந்
தள்ளுதற்கீ தாகுமோ தான். 342

நிதானிக்கும் போதெல்லா நிச்சயமில் தோற்றஞ்
சதாவிவர்த்தோ பாதானஞ் சாற்றும்—நிதானமிலோ
யிம்மூன்றி லேற்பதெதோ வேய்ந்தவா ரம்பமெனி
னிம்மண் கடம்போலென் றெண். 343

மன்னுகட பேதமெலாம் வாய்மையிலாத் தோற்றம்போ
லுன்னுசக மாதியெலா மொன்றுமே—பின்னமிலா
வாரம்ப பட்சம்வைத் தாள்வதனு லிவ்வுவமைச்
சாரமிலா தேகிடுமே தான். 344

பரிணம பட்சமெனிற் பாறிரிந்தாற் போலப்
பெருமாயை தானே பிறழ்ந்து—திரிந்திலகு
முற்றுலகு மீண்டொடுங்க முன்மாயை வேண்டுவதாற்
சற்றுமிது நன்றன்றே தான். 345

உற்ற விவர்த்தந்தா னெக்குமெனி லிங்கிதுவும்
வெற்றரவு போலன்றே மேவலுறு—முற்றுணர்ந்தோ

யுந்தனுக்கீ தெங்ஙனுறு முண்மையிலக் கின்மையதா
லெந்தவழி யின்னிற்பா யீங்கு. 346

செகத்துக் குபாதானந் தேரா விடத்தீங்
ககமுவப்ப மேலே யறைத—னகைப்பாமே
மாயா வடிவினையு மன்னும் முலகினையு
மாயாதா லிவ்வனர்த்த மாம். 347

உலகெனலை யுற்றுணரா தோதற்கா ளானாய்
மலமகன்று நிற்றலெங்ஙன் வாய்க்குஞ்—சலனமுளோ
யிவ்வாறு நீயிருக்கி லென்செய்வா ரேதிலர்க
ளொவ்வுமோ நின்றீர்ப்பிங் கோர். 348

மாயைமுத லாக்கொணர்ந்து வாய்மை யுலகமதற்
காயசிவா நந்தமய மாயுரைத்தல்—ஞாயமதோ
வீதிரண்டில் யாதுண்மை யேனிவ் விவர்த்தமொழி
யோதவரின் றேநினக்கிங் குற்று. 349

எல்லாஞ் சிவமயமே லென்முப் பொருளாக
நல்லோய் விளக்குவது ஞாயமோ—சொல்லாலே
வாதிக்கி லொவ்வொன்றும் வாய்மைசிவ மாகுமோ
வேதுக்கிவ் வீண்வாத மேகு. 350

எல்லாமாய் நின்றிலக லென்று மியற்கையெனி
லெல்லா மலவெனலை யேற்பதெங்ங—னல்லசிவ
மோர்நிலைமை யேற்கின்மற் றோர்நிலைமை யேற்றிடுமோ
வோர்ந்துரைத்தற் காமோநீ யோது. 351

எல்லாஞ் சிருட்டியுற்றிங் கேய்ந்திருத்த லாலேயிவ்
வெல்லாஞ் சிவமயந்தா னென்பையே—னல்லோய்

குடசிருட்டி யெல்லாங் குலாலனே லீதுந்
திடமதாக் கொள்வதற்கென் றீது. 352
செய்யுங் கடமனைத்துஞ் செய்வா னெனப்படுமேல்
மெய்யாஞ் சிவமெனற்கென் வேறெவையு—மையோ
தனது சிருட்டியெல்லாந் தானுமோ பேதாய்
நினதுமரு ளேயிஃது நில். 353
திரிபொருளு நித்யமெனச் செப்பியசித் தாந்த
மொருபொரு ளெல்லாமென் றோதல்—சரியன்றே
சர்வமு மித்தையெனச் சாற்றியநல் வேதாந்த
மர்மமறி யாக்குறையா மால். 354
எல்லா மசத்தெனலை யேற்குமே லெல்லாமா
மல்லவுமா மென்பதிங் காகுமே—வல்லோய்நீ
யீதுணரா தெப்பொருளு மென்று மிருப்பெனக்கொண்
டோதுவதாற் றிண்மையுறு மோ. 355
இங்ஙனமா மீசனோ டென்று முறுமுயிரு
மெங்ஙன மோவைக்ய மெய்திலகுஞ்—சங்கையறக்
காட்டுவதற் காமோகாண் கல்விப் பெருக்கமுளோ
யேட்டறிவை நீக்கிடுவா யீங்கு. 356
ஒன்றென் றிரண்டென்றிங் கோது மயக்கந்தா
னென்று மகன்றிருத்த லேழையே—நன்றென்னு
மத்துவித மென்பதிங் கன்றினிலை வேறின்றே
யெத்திறத்தாற் சாதிப்பா யீங்கு. 357
ஒன்றென்ப தேற்பதெங்ங னோது மைக்யமென
லென்று மனாதியதா லீசனுயிர்—நன்றே
யிரண்டென்ப தேற்பதெனி லெங்கே யயலென்னல்
மருளில் சிவத்தினுக்கு மற்று. 358

பிரிவற் றிருப்பரெனின் பேசுமிவர் மீண்டும்
பிரிவாதற் கையமுண்டோ பேதாய்—பிரிந்திருத்தற்
காதியென லின்மையதா லந்தமெங் குண்டாகும்
வாதிடற்கிங் காவானேன் வந்து. 359

ஒன்றோடொன் றொன்றியதற் கோதுஞ் சிவசிவ
ரென்றும் பிரிவிலரென் றீங்கிசைத்தாய்—நன்றே
சிவமே யுயிராயிச் சீவன் சிவமா
யவமுளோ யாமோ வறை. 360

பிரிவற் றிருக்கினுமென் பேதிக் கினுமென்
வறிதோ விரண்டென்னும் வாய்மைச்—சிறுமையுளோ
யெங்கே பிரிவிலதை யேற்குநின் னைக்யநிலை
பங்கமா நின்மொழிதான் பார். 361

அத்துவித மென்பதினி யாகுமெனி னெஞ்சேயவ்
வத்துவித மிப்போதிங் காகாதே—வத்துவித
மென்று முளதா யிருந்தபடி யேயிலகு
மொன்றுமோ நின்றீர்ப்பிங் கோது. 362

இருப்பைத் தெளிதலைவிட் டென்று மினிமேல்
வருநிலையோ வத்துவித வாய்மை—வருநிலைமைக்
காவா யெனும்பொருளோ வான்ற வசிபதந்தான்
றாவாதென் னிவ்வுளவைச் சாற்று. 363

ஆனு யெனும்பொருடா ஞான்ற வசிபதத்திற்
கேனோ வெதிர்காலத் தென்றுரைப்பா—யூனமிலா
வத்துவித மென்பதனை வையையோர் வாரேற்பர்
முத்தியென நின்றீர்ப்பை முந்து. 364

உற்றதவ வல்லமையா லொன்றிடுமிவ் வத்துவிதஞ்
சற்றுமிதற் கையமின்றேல் சாற்றுதுங்கேள்—கற்றுணர்ந்தோ
யாதியுறு நின்னைக்ய மந்தத்தை யேலாதென்
னீதமின்றே நின்றீர்ப்பு நில். 365

அத்துவித மாதற்கிங் காயில் துவிதமென
லெத்திறத்தும் போலிகளா யேய்ந்திருக்குஞ்—சத்யமிதே
யுண்மையெனி னின்றுவித மொன்றுமோ வத்துவிதந்
திண்மையிலோ யீங்கிதனைத் தேர். 366

உற்றதுவி தம்மெனற்கிங் கோதிடுவோங் கேளுவமை
வெற்றகட மேகத்தான் மெய்போலப்—பற்றில்
வெளியிரண்டாத் தோற்றுகினும் வெவ்வே றெனலாமோ
தெளியாதே னிவ்வுளவைச் சென்று. 367

சித்திரண்டு போலிலகிற் செப்பு முபாதிகளாற்
சத்தியமே யத்துவிதஞ் சந்ததமு—மொத்த
வுபாதிகடா னீங்கிடினு மொன்றிடினு மென்று
மபாவமா மேதுவித மாழ்ந்து. 368

அத்துவித மென்பதினி யாகுமெனல் பொய்யாமே
யத்துவித மாமென்னை யாங்காங்குஞ்—சத்தியமா
யுற்றுணர்ந்து நிற்றலன்றே முண்மையா மத்துவித
முற்றுணர்ந்து மென்னபயன் மூந்து. 369

தானேதா னுயிலகுந் தன்னை யயலின்றி
யூனமறத் தேர்ந்திருக்கி லொன்றுமே—நானென்னு
மத்துவித மென்பதுதா னையோநின் சித்தாந்தஞ்
சத்தியமென் றுரேற்பர் சாற்று. 370

அயலின்றித் தான்றெளித லத்துவித மென்னின்
மயலென்ப தெங்குண்டா மாண்போய்—மயல்வடிவா
மூன்றினையு நித்யமென மூலவினை நீக்கியுயி
ரான்றவைக்யந் தீர்ப்பன்றே யாங்கு. 371

துவிதம் விசிட்டாத் துவிதமத் வைத
மவசர மென்றுன்னா தந்தோ—வவமாகச்
சத்தா யனாதியெனச் சாற்றுவதான் முப்பொருளும்
பித்தோய் முரணாமே பேசு. 372

சிவமாம் பொருளினுக்குச் செல்லுலசம் வேறே
லவமா நிறைவென்ப தந்தோ—சிவமசன்பா
லென்றுமுள தென்னிலோ வேய்ந்த பரம்புரையா
யொன்றிடுமே யூகிக்கி லோது. 373

சிவமே யுலகுயிராச் செப்பலா மென்னிற்
சிவஞான மென்பதற்குத் தீங்காய்—அவஞான
மாகுமே நெஞ்சே யனர்த்தமா முத்தீர்ப்பு
மூகமிலா தென்கற்றா யோது. 374

இப்போதெங் கேதுவித மேற்றவிசிட் டாத்துவிதந்
தப்பில்லா வத்துவிதஞ் சாற்றுவையோ—முப்பொருளு
மாதியசத் தன்றென்றிங் கானமட்டும் வாய்வலிவா
லோதுவதா லென்னா முனக்கு. 375

மூப்பொருளுஞ் சத்தெனற்கு முந்துவதா லந்தோநீ
தப்பாகு நின்றீர்ப்புச் சந்ததமு—மெப்படியோ
கற்றாய் மிகுதியுறக் கள்ளங் கபடின்றி
பற்றாது நிற்பதென்றோ பார். 376

திரிபொருளி னிச்சயத்தாற் செப்புந் துவித
மிருதன்மைத் தாகுமே யென்று—மிருமையுங்கே
ளொன்றுகூ டில்துவித மொன்றுகூ டுந்துவித
நன்றாகா தீதிரண்டு நாடு. 377

கூடில் துவிதமெனல் கூறுபா டெற்றிருக்குங்
கூடுந்துவிதமோ கூறக்கே—ளடியிவ
னுற்றவா தாரமுமா யோதுமா தேயமுமாய்ப்
பற்றியதா மிம்முரணைப் பார். 378

குடபடம்போல் வேறென்னல் கூடில் துவிதங்
குடங்கடல் போற்றுவிதங் கூடுந்—திடமன்று
முன்றுவிதங் கண்டிதமாய் மூதறிவோ யேற்குமே
பின்றுவித மோபுரையாம் பேசு. 379

எற்கக்கூ டில்துவித மென்றுமே கண்டமதா
லேற்கக்கூ டுந்துவித மீங்கிடந்தா—னேற்குமெனி
னிவ்விருசித் தாந்தமுமே யென்று மனர்த்தமதாங்
கவ்வுதற்கிங் கென்செய்வாய் கண்டு. 380

வேலையா தாரத்தில் மீனுதிதங்குவபோற்
சீலமா மச்சிவத்திற் சேர்ந்ததெனிற்—றாலாதி
கூடுந் துவிதமதாங் குன்றாத பாழ்நெஞ்சே
நாடுதற்கிங் கிதாமோ நாம். 381

எட்டுஞ் சகத்தினுக்கிங் கெல்லையென்ப தின்றென்னி
லெட்டாச் சிவத்திலீ தெங்ஙனுறு—முட்டின்றி
கற்றறிந்தோ யென்செய்வாய் கண்ணுடையார் கேள்விகட்குப்
பற்றகன்று நிற்பதனைப் பார். 382

உலகளவ கன்றிருத்த லுற்றசிவ மாமே
லுலகத்திற் கோரளவு முண்டோ—வுலகில்லா
வொன்று மிடமுண்டே லோர்சிவமங் குண்டாகு
நன்றன்றே நின்முடிவு நாடு. 383

தன்கண் ணிலையெனினுஞ் சாற்றுமிவற் றுண்முழுது
நன்கு விரிந்திலகு நஞ்சிவமே—லென்றும்
புரையுளதா யீங்கனைத்தும் பொய்த்தோற்ற முற்றுத்
திரமிலதாய்ப் போகுமே தேர். 381

இரண்டும் புரையுளதா யேற்பதனு லென்றுந்
திரமின்றிப் போமேநின் றீர்ப்புத்—திரமெதுவென்
ளுேர்ந்துழைத்தா லன்ளுேகா ணென்றுமிலாப் புன்னெஞ்சே
யார்ந்திலங்கு மென்சொருப மாழ்ந்து. 385

உலகோ டுயிரிரண்டு மோர்சிவன்பா லென்றே
யலகில் சுருதிகளு மாளல்—கலகமின்றே
லெங்கும் புரையுளதா யேற்குமே நஞ்சிவந்தான்
பங்கமா நின்றீர்ப்புப் பார். 386

உற்றபுரை யாதென்னி லொவ்வாத சூனியமாஞ்
சற்றுமீ தர்த்தமன்றே சந்ததமும்—பற்றுதற்கிங்
குள்ளதென்ப திவ்வுலகா யொன்றிடுமே யென்செய்வாய்
கள்ளமிலா நாஸ்திகனீ காண். 387

விசிட்டாத்துவிதம்.

துவிதமென லோரிரண்டுஞ் சொல்கற்பனையேல்
நவில்விசிட் டாத்துவித நாடி—லவிர்பரத்துள்
விண்டகட னீரலைபோல் வேருயுதித்தொடுங்கும்.
பண்டையதா மிவ்வுலகப் பண்பு. 388

உற்றகுண மாம்விகற்ப மோதலுற மிவ்வுலகேல்
பற்றில்லா மெய்ப்பொருட்குப் பண்புளதோ—கற்றுணர்ந்தோய்
சுத்தனவி காரியெனச் சொல்வதெவ னேத்திங்கே
யெத்திறத்தாற் சாதிப்பா யேய்ந்து. 389

உற்றபர மான்மாவை யோது முயிருலகும்
பற்றி யிலகுமெனிற் பான்மைகளாய்ச்—சொற்றபர
மென்றும் விகாரத்தோ டேய்ந்த வசுத்தமுமா
யொன்றுமே யென்செய்வா யோது. 390

ஓது முயிருலகு மொன்றுமெனிற் றர்மமதாய்ப்
பேத மபேதமலப் பேய்நெஞ்சே—சேதனர்கட்
கேய்ந்த சுகதுக்க மேற்குமே யப்பரந்தா
னாய்ந்துணராத் தீர்ப்பிதுவா மாழ்ந்து. 391

சேதன சேதனங்கள் செப்புங் குணங்களெனி
லோதுமிவற் றுல்வாய்க்கு முள்பயனைப்—போதமிலோய்
நின்றனுப வித்தற்கு நேர்ந்திடுமே லப்பரந்தான்
குன்றுமன்றே நின்றீர்ப்பின் கோள். 392

இக்குணங்கள் காரணமா யேய்ந்தபர முண்பதெனி
னிக்கதையா லப்பரத்திற் கேதமன்றே—விக்கதையோ
வுண்மைவிசிட் டாத்துவித மோராதென் கற்றாய்நீ
திண்மையில் லாநெஞ்சே தேர். 393

அவிகார மாம்பிரம மாயி னுலகா
மவிர்விகற்ப மேற்பதெவ னந்தோ—நவிலும்
விசிட்டாத் துவிதமிது வெற்றுரைதா னாமே
யுசிதமென் றுரேற்ப ரோது. 394

(அத்துவிதம்)

எல்லாஞ் சிவமயமே லேகமே வாத்வைத
மெல்லாங் கயிற்றராப்போ லெய்துமே—சொல்லாலே
யத்துவித மென்னி லகலுமோ மாயாதி
பித்தமுள நெஞ்சேநீ பேசு. 395

துவிதம் விசிட்டாத் துவித மிரண்டு
மவசரப் பேதமதா மாயி—னவையில்லா
வத்துவித மொன்றுமே யாராய்தற் கொன்றியதிங்
கொத்தநல வவ்விரண்டு மோர். 396

முப்பொருளுஞ் சத்தெனவு முத்தீர்ப்பிங் குள்ளெனவு
மெப்படியோ கற்றுணர்ந்தா யேழைநீ—தப்பின்றி
யாராய்த லில்லா வவதிப் படிப்பாமே
தோாதென் தக்கோர்பாற் சென்று. 397

முத்திர்ப்பு முண்மையதா முத்தீர்ப்பு மித்தையதா
மித்தையுண ராதமினக் கேன்வாதம்—பித்தமுளோ
யுய்வதுதா னெங்ங னுணர்வுவடி வாவிழித்துப்
பொய்மெய்யா தென்றுணர்ந்து புக்கு. 398

உள்ளதில தீதிரண்டு மோரி னவசரமே
யுள்ளதென வொன்றனைநீ யோதுவதென்—கள்ளமுள
நெஞ்சேநீ யிஞ்ஞான்று நீளமாக் கற்றதெலாம்
பஞ்சமென லாகுமே பார். 399

அவசரமாம் பேதமதை யாய்ந்துணரா நெஞ்சே
யவசரமேன் வாதித்தற் கந்தோ—திவசமெலா
மாறுத்து டித்தலொடு மாறுப்போ தித்தலையும்
வேறுக்கி நின்றுணர்வாய் வீடு. 400

தன்னைத்தான் றேடுங்காற் சாற்றுதுவி தம்விசிட்டம்
வன்னெஞ்சே யின்மையென வாய்க்குமே—தன்னை
யயலாகத் தான்மயங்கி லப்போ திரண்டும்
பயன்படுமே நெஞ்சேநீ பார். 401

(துவிதமுதலிய மூன்றினுக்குந் திட்டாந்தம்).

(க – வது, துவிதம்).

கடபடத்தி லிம்மூன்றுங் காட்டுதுமா லென்றுந்
திடங்கொண் டுதாரணமாத் தேர்வாய்—மடமுள்ளோய்
உற்றபெய ரோராறி லோதுமிவை யாதென்பம்
பற்றும் பொருட்பெயரேற் பாங்கு. 402

பற்றுபொரு ளோரிரண்டாம் பார்க்கிலுபா தானமுமோ
டுற்றவுபா தேயமுமா யோதலுறும்—கற்றுள்ளோ
யீதிரண்டில் யாதுண்மை யேற்க முரணின்றி
யோதிடுவாய் நன்றாயநீ யோர்ந்து. 403

உற்ற விருமையுமே யுண்மையெனின் வன்னெஞ்சே
பற்றுமண் ணூ லன்றியிவை பவ்வியமோ—சற்றேனு
மிந்தக் கடபடங்க ளென்பதுமண் ணூலாமோ
பந்தமின்றி யீங்கிவற்றைப் பார். 404

காரணத்தைக் காரியமாக் காரியத்தைக் காரணமாப்
பாரினிடத் தாரேனும் பற்றுவரோ—வோரி
லிவையே துவிதமதா மேற்பதற்கென் னைய
நவையில்லோய் நீயறிவாய் நன்று. 405

காரண காரியங்கள் காணிலிரண் டானதினாற்
றாரணியி லார்துவிதஞ் சாற்றார்க—டாரணைசற்

றில்லாத கீழ்நெஞ்சே யேனிதனை விட்டயலாச்
சொல்வாதஞ் செய்கின்ருய் சொல். 406

(உ - வது, விசிட்டாத்துவிதம்).

காரியந்தான் வேறெனினுங் காரணத்தை விட்டதுண்டோ
காரணத்தின் றன்மையதாக் காண்பதனுற்—காரணஞ்சி
ருற்ற வியாபகமு மூக்கமிகு காரியந்தான்
பற்றும் வியாப்பியமும் பார். 407

மண்ணுலா தாரமதில் வல்லோயா தேயமதாய்ப்
பண்ணுங் கடபடங்கள் பற்றியதா—னண்ணும்
விசிட்டாத் துவிதமென மேலோர் மொழிந்த
துசிதமன்றோ வேனைய மோது. 408

காரண காரியமாக் காண்டல் துவிதமதாம்
ஒருங் குணிகுணமா யொன்றியதாற்—பாரில்
விசிட்டாத் துவிதமென்பர் மேலோ யிதனை
வசிட்டசுக ராதியரும் வந்து. 409

(ரு - வது, அத்துவிதம்).

இந்தமண் ணுலின்பா லிவ்விரண்டுங் காட்டியபோற்
றெருந்தமிலா வத்துவிதஞ் சொல்லக்கேள்—பந்தித்தோ
யோதுங் கடபடங்க ளுள்ளமண் ணுலன்றி
யேதிவற் றிற்கருத்த மீங்கு. 410

கடபடங்க ளின்மையதாற் கண்கூடா மண்ணுல்
திடமாம் பொருளெனற்குச் செல்லுந்—திடமிவையேல்
வேறுருகுங் காரியமும் வேறில் குணமதுவு
மாறுகாப் பொய்யாமே மற்று. 411

மண்ணாலைத் தள்ளியுண்டேல் மன்னுங் கடபடங்க
ணண்ணுமவை போற்பொருளாம் நாஸ்தியல—வெண்ணுங்கா
லுற்றவா தேயமுமிங் கோதற் குளகுணமும்
பற்றுதலிற் காரியமும் பாழ். 412

மண்ணாலே காரியமாய் மன்னுவதா லம்மண்ணா
னண்ணுதேன் காரணமா நன்மையினை—மண்ணாலில்
மாறுவதா லீதிரண்டும் வன்னெஞ்சே யென்றென்றுந்
தேறுதலிம் மண்ணாருஞ் செப்பு. 413

இந்தநிலை யத்துவித மேற்றற் கிழுக்கென்னே
தொந்தக் கடபடங்கள் தோற்றளவும்—வந்த
துவிதம் விசிட்டாத் துவித மிரண்டு
மவலமில் போலிருக்கு மாழ்ந்து. 414

உற்றிலகு மிவ்விரண்டு முண்மைபோற் றோன்றளவும்
பற்றுமண்ணா லத்துவிதம் பவ்வியமாங்--கற்றுணர்ந்தோய்த்
தோற்றுவது கற்பனையேல் சொல்துவிதப் பேதங்கள்
சாற்றுதல்பொய் யத்துவிதந் தான். 415

இங்கேயிம் மூன்றுந்தா னென்றும்பொய் யேல்மண்ணால்
தங்குமே யுண்மையதாய்ச் சந்ததமும்—பங்கமின்றி
யிவ்வுளவு தோன்றுதிங் கென்கற்றாய் புன்னெஞ்சே
யெவ்வமன்றோ நீயிருத்த லேகு. 416

(இம்மூன்றினுக்குந் தாட்டாந்தங்கூறல்.)

மண்ணாலொன் றேதுவித மன்னுவிசிட் டாத்துவித
நண்ணுமே யத்துவித நாடுங்கால்—மண்ணாற்போ
லுற்றதாட் டாந்தமெனு முண்மை யிருப்பதனாற்
பற்றாகக் கொள்வதற்கென் பார். 417

(இஃது துவிதம்).

காரண காரியமாக் காணுந் துவிதத்தை
யாரண வாசிகளுக் கார்ந்திருக்கத்—தாரணையுற்
றோதுதுங்கா ணிப்புதுமை யுள்ளமே கேட்டுணர்ந்து
வாதிடற்குப் போகேல் வலிந்து. 418

எப்பொருணன் கேற்குமோ விந்தத் துவிதத்தை
யப்பொரு ணல்விசிட் டாத்விதமுந்—தப்பின்றி
யேற்குமே யத்விதமு மிப்படியே தானன்றோ
வேற்கும்புன் னெஞ்சே யிவண். 419

எனக்கயலாக் காண்பனைத்து மெப்பொருளென் றாயின்
தனக்கென்ன வோருருவம் சற்று—நினைப்பதற்கிங்
கில்லாமற் போவதினா லெவ்வயலுஞ் சொற்றோற்றஞ்
செல்லாதே பற்றுதற்குச் சென்று. 420

எப்பொருளுந் தோற்றமதா லெஞ்ஞான்று நானெனதென்
றெப்படியு மேற்பதற்கிங் கேதமின்றே—யொப்பில்லா
நானிருத்த லால்ஞான நானன்றி வேறிலையஞ்
ஞானமுநா னாவேனோ நாடு. 421

அஞ்ஞான மென்பதெதே லாங்காங் குளதோற்றம்
மெஞ்ஞான மோவிருப்பா மேவியநா—னெஞ்ஞான்று
மிவ்விரண்டி லஞ்ஞான மேற்குமேல் காரியமா
யொவ்வுநான் காரணமா மோர். 422

ஈங்கனைத்து மாராயி னில்லையல்ல வென்றேகு
மோங்குமெனை யாராயி னுண்டெனவுந்—தீங்கின்றி
யாமெனவு நின்றொளிர்வே னாங்காரங் கெட்டுணரி
னேமமுறற் கென்னோ வீசை. 423

உற்ற வயலனைத்து மொக்குமே லாரோபம்
பற்றிலதிட் டானமாம் பார்க்குழிநான்—சிற்றறிவோ
யீதிரண்டு மன்றோ வியைந்த துவிதமென
லேதமிவைக் குண்டோகா ணேகு. 424

ஆரோபத் தோடிங் கதிட்டான மாமிவற்று
ளாராயு நானே யதிட்டான—மாரோப
மாதலினு லீங்கனைத்து மாகுமிரண் டெந்துவிதஞ்
சோதனையாற் றேர்ந்ததிது சூழ்ந்து. 425

சிவே சுரத்துவிதஞ் செல்லுமநு மானமட்டா
வோவாத நானெதிரு மொவ்வுமோ—பாவனைக்கிங்
கிச்சத் துவிதம்போ லெச்சமயத் தோர்க்குமிலை
யந்தமுளோய் சேட்டெய்வா யாழ்ந்து. 426

(இஃது விசிட்டாத்வைதம்).

தோற்றன் மயமாகத் தோற்றிடினு முப்பொருளு
மாற்றலிலோ வெவ்விடத்தி லார்ந்திலகல்—மாற்றரிய
வென்னிடத்தி லாதலினு லெஞ்ஞான்று மென்னுருவை
யுன்னுதற்கென் னிவ்வுண்மை யுற்று. 427

என்னிடத்தி லேதோன்றி யென்னிடத்தி லேவிளங்கி
யென்னிடத்திற் கூடுதலா லிம்மூன்று—மென்னையன்றி
வேறிடந்தா னெங்குண்டு வெற்றவெளி யாதலினால்
மாறுண்டோ வீங்கிதற்கு மற்று. 428

எப்பொருளு மென்னைவிடா தெஞ்ஞான்றுந் தோன்றுவதா
லப்பொருள்க டற்கிழமை யாகுமே—தப்பின்றி.
யிவ்வனுபூ திக்கன்றோ வெய்ந்தவிசிட் டாத்துவிதஞ்
செவ்வனே யீங்கிதனைத் தேர். 429

பண்புந் தொழிலுமதாய்ப் பல்பொருள்கள் கூடிநிற்கும்
பண்பையன்றோ வென்னிடத்திற் பார்த்துரைத்தார்--பண்புடையோ
ரேய்ந்தவிசிட் டாத்விதமென் றெஞ்ஞான்று மாதலினு
லாய்ந்தென்னை யாதரிப்பா யார்ந்து. 430

சேர்க்கைத் தொழிற்குணந்தாம் சேர்ந்தபினர் தோற்றகுண
மார்க்குந் தெரிந்ததன்றோ வானவிவை—பார்க்கு
முலகனைத்து மிவ்வாறே யொன்றுவதா லென்பா
லலகிற் றொழிற்பண்பு மாம். 431

கூறுங் குணமிரண்டுங் கூடியெனை நீங்காதால்
கூறினர்காண் மெய்யுணர்ந்த கூர்மதியோர்—மாறில்
விசிட்டாத் துவிதமென மெய்மையிலா நெஞ்சே
வசிட்டசுக ராதியரை வாழ்த்து. 432

ஓர்போது தூலமுமா யோர்போது சூக்குமமுமா
யோர்போதி லாதியுமா யுள்ளவென்பால்—நீர்மையிலோய்
மாறினனித் தோன்றுவதால் வாய்மைவிசிட் டாத்விதமாந்
தேறுதலுக் கென்னையஞ் செப்பு. 433

தூலமெனல் சேர்க்கைகுணஞ் சூக்குமமென றோற்றகுணஞ்
சோலியிலாக் காரணந்தான் சூன்யகுணஞ்—சீலமிலோ
யெந்தனிடத் துள்ளதனு லீதுவிசிட் டாத்துவிதஞ்
சந்ததமு முண்மையெனச் சாற்று. 434

சாக்கிரமுஞ் சொப்பனமுஞ் சாற்றுஞ் சுழுத்தியுமே
போக்கின்றி யெக்கணமும் புன்னெஞ்சே—சாக்கியதா
மென்பாலே மாறிதலா லேத்துவிசிட் டாத்துவித
மென்றறைந்தா ரிங்கிலையை யே. 435

உற்றவிஸ்வன் றைசதனு மோதும் பிராக்ஞனுமாய்ப்
பற்றுமபி மானமதைப் பார்க்குங்காற்—பற்றின்றி
மாறினனித் தோன்றுதலான் மன்னுவிசிட் டாத்விதமென்
றூறில்லார் சென்றுரைத்தா ரோர்ந்து. 436

மாயைவித் தையிரண்டு மன்னுபெருங் காரியத்தோ
டாயதொழிற் பண்புமென வார்ந்திலகுந்—தூயவென்பா
லென்றுமக லாமையினு லேய்ந்தபே தத்துடனே
யொன்றுமபே தம்மெனவு மோர். 437

இந்தவிசிட் டாத்துவித மேற்கினும்பே தாபேதம்
சந்தமுளோ யெஞ்ஞான்றுந் தானயலே—சந்ததமு
மத்துவித மென்றெண் ணபேதமதை யோதுதுங்கே
ளத்திர்ப்பு மேகிடுதற் கே. 438

(இஃது அத்துவிதம்)

எல்லா வயலனைத்து மேய்ந்திலகுங் காரியத்தோ
டெல்லாங் குணமெனவு மேற்றதே—நல்லோய்கே
ளிவ்விரண்டா மொன்ன லேய்ந்திலகுங் காரணமு
மொவ்வுங் குணியெனவு மோர். 439

காரியவி லக்கணமுங் காணுங்கு ணத்வமுமென்
றோருமிரண் டாமிவைக ளொன்றுதற்குச்—சாரமிலோ
யெந்தமுத லோவதனை யின்னதென வாராய்ந்திங்
கந்தமுத லோதிடுவா யார்ந்து. 440

ஈசனெனி லிவ்வுலகை யேற்றித்தா பித்தலது
மாசுடையோ யத்திர்ப்பு வாய்க்காதே—தேசுடைய
வெண்முகிலைக் கொண்டனலை வீண்சாதிப் பார்போலாந்
திண்மையிலோ யீங்கிவற்றைத் தேர். 441

தூமத்தினாலனலைச் சொல்லுவது சத்தாகுந்
தூமத்தைப் போன்முகிலேல் சொல்வதெங்ஙன—னேமமிலோய்
தோற்றவனு மானமதாற் சொல்வதெலா முண்மையதோ
வாற்றலிலோ யீங்கிதனி லாமு. 442

இருப்புடைய காட்சியைக்கொண் டென்றுந்தோன் றாத
விருப்பென்ப தொன்றுளதென் றேற்றல்—விருப்பமிலோ
யேய்ந்த விலக்கணமா மிந்தவனு மானத்தா
லாய்ந்துணர்ந்து நிற்பா யகத்து. 443

ஆதலினா விவ்வுலக மர்த்தமிலா தாகுமோ
காதலுறற் கேய்ந்திருக்குங் காட்சியன்றோ—ஏதமிலா
தென்னி லைம்பூதங்க ளேய்ந்தபதி னைந்துகுண
முன்னியவற் றின்குணிகண் டோது. 444

அந்தபதி னைந்துகுண மானவகை யாதென்னி
னைந்தொலியு நாற்பரிச மானதுடன்—மந்தமுளோ
யுற்றதிரி ரூபங்க ளோது மிரண்டிரச
முற்றுவிரை யொன்று மொழி. 445

மண்ணாதி யைந்துக்கு மன்னுமே யைஞ்சத்தம்
மண்ணாதி நான்கினுக்கும் வாய்க்குமே—திண்ணமதா
நாற்பரிச மண்ணாதி நன்மையுளோய் மூன்றினுக்கு
மேற்குமே மூவுருவமெண். 446

மண்ணீ ரிரண்டினுக்கு மன்னு மிரண்டிரச
மண்ணொன் றினுக்குவிரை வாய்ந்திலங்கும்—வண்ணமுளோ
யந்தந்தப் பூதத்திற் காணவிப் பண்பொதுக்கி
யந்தந்தப் பண்பியையோ ராய்ந்து. 447

உற்றபதி யைந்துகுண மோர்ந்தகற்றி நெஞ்சேபின்
சற்றுந்தா னைந்தினுண்மை சாற்றுவையோ—வெற்ற
வெறும்வாயை மெல்லவரென வீணய்வா யாடி
லறுமோவைம் பூதமயக் காங்கு. 448

தமக்கென் றுருவின்றித் தங்கியவைம் பூதந்
தமக்கர்த்த முண்டென்னச் சாற்றித்—தமையளிக்க
வேறுபர முண்டென்னல் மெய்ம்மையனு மானமன்றே
தேறுதலுக் கெங்கேநின் றீர்ப்பு. 449

ஐந்துபூ தத்தினையு மாங்காங்கு மேமறைத்த
விந்தபதி யைந்தினையு மேற்றிருத்த—லெந்தகுணி
யெந்தகுணி யென்றெவரு மெட்டுமிடத் தின்மையதா
லெந்தவிதத் துண்மையென்பா யீங்கு. 450

தோற்றன் மயமாகத் தோன்றுவதாற் காரியமுஞ்
சாற்றுங் குணமெனவுந் தானேற்கு—மாற்றலிலோ
யீங்கிரண்டாற் காரணமு மெஞ்ஞான்று நற்குணியு
மோங்கியநா னுமேயென் றுன்னு. 451

தோற்றமெலா நானுகிற் சொல்வதற்கென் காரியமுஞ்
சாற்றுங் குணமுமெனச் சந்ததமுந்—தோற்றமெலா
நானன்றேற் காரணமு நன்காங் குணியுநா
னேனின் றுனக்குணர்ச்சி யீங்கு. 452

இவ்வைந்தை யும்மாயி னென்றும் பொருளிலதா
லிவ்வைந்து ஞானன்றே யெய்திலங்க—லிவ்வைந்து
மென்னையன்றி யின்மையதா மென்றுமிவை நானன்று
முன்னுதலுக் குள்ளதுநா னேர். 453

ஆதலினா லென்று மனர்த்தபரிச் சேதமெனா
மேதமின்றி நான்மாத் திரமிலக—பேதமுளோ
யென்னுருவை நாடாதிங் கில்லாத் துவிதத்தைப்
பன்னுவதே னுண்மையதாப் பார். 454

(வஸ்துநிலை முன்னிலை படர்க்கையற்றதெனல்).

வத்துநிலை முன்னிலையாய் வான்மதியோ ரேற்பாரவ்
வத்துநிலை நானென்றேன் வாதித்தல்—பித்தாமே
சத்தியற்ற நானென்னல் தானேதா னாய்விடுமோ
வித்தையெவ ரேற்பரெனி னீங்கு. 455

நானெனலை நீயவனாய் நாட்டுவதா னீயென்றும்
நானென்ப தின்விகற்பாய் நண்ணுமே—யானதினால்
எங்ஙனமோ நீயவனென் றேற்கு மவையிரண்டும்
பங்கமின்னா னாயிலதேற் பாங்கு. 456

எங்கெங்கு நானாக வேய்ந்தவெனை நீயவனென்
றங்கங்குங் கற்பிக்கி லாய்விடுமோ—பங்கமுளோ
யிம்மருளா லெஞ்ஞான்று மேதுசா தித்திடுவாய்
நம்பி யடிப்பவர்க்கு நாடு. 457

ஆன்றோரைத் தூடித்தற் காளாக்கு வாயவரைச்
சான்றுகு மென்னைநீ சார்ந்துய்ப்பாய்—தோன்றுகின்ற
விவ்வுலகா னீயவனென் றெஞ்ஞான்றும் பாராட்டிற்
கவ்வுதலை யெங்கொழிப்பாய் காண். 158

தந்தைமகன் பேரன்மூ தாதைமுன் னோன்பின்னோன்
சிந்தையுள மாதுலனற் சீர்மையிலோய்—பந்தித்தாட்
குற்றகண வன்முதலா யோதி லொருவனுக்குப்
பற்றறுமோ வொன்றேனும் பார். 459

ஈங்கிவைபோ னீயவனென் றேத்திடினு மென்பதற்குப்
பாங்குறுமோ வொன்றேனும் பார்க்குங்காற்—றீங்குற்ற
நெஞ்சே விவையிரண்டு நேசிக்கி னுனக்குக்
கொஞ்சமே னும்விளங்கேன் கூறு. 460

பிரமன் முதலாப் பிபீலிக மீரு
யிருந்திலக லெப்பொருளே லென்றும்—திரமாக
வுற்றநா னன்றேகா ணேதுவதென் னீயெனவும்
பற்றுற் றவனெனவும் பார். 461

உற்ற விதிமுதலா யோதியமுன் பல்லுருவை
முற்றும் வினைமுதலா முந்தியதாற்—பற்றுற்றிங்
கென்றென்று நீயெனவு மேலா வவனெனவு
நன்றென்று நீமருண்டாய் நாடு. 462

மருண்டதினு லன்றேகாண் மாண்பில்லா நெஞ்சே
தெருண்டிலகு நான்றான் றெரியா—திருண்டதென்று
மிப்படியே பின்ஞான்று மேமாந் திருப்பையே
லெப்படியோ வுய்ந்திடுவா யேய்ந்து. 463

முன்னிலைய தாகவே முற்று மழுக்கமுறின்
றன்னிலைதா னென்றிலகுஞ் சத்தியமாய்—முன்னிலைபாற்
பெற்றதுநீ யாதென்போம் பேரின்பத் தாழ்தலெனின்
சொற்றவின்பம் யாதின்பாற் சொல். 464

உற்ற சிவத்தின்பா லுள்ளதெனி னெஞ்ஞான்று
மற்றதுநா னென்பதற்கு மன்னுதே—சொற்றலுறுஞ்
சிற்றின்பம் யாதினதோ செல்லுஞ் செகத்தினதேல்
சற்றுமிது நானுமோ சாற்று. 465

ஓதுசிவ நானாயி னொவ்வுவன்பே ரின்புருவா
யாதியந்த முள்செகநா னாகுமேல்—பேதமிலா
தொன்றுவனிச் சிற்றின்ப முண்மையிலோய் சொந்தசுக
மென்றுமெனக் கேதோ விசை. 466

இவ்விரண் டின்பமுந்தா னென்றுமெனக் கன்னியமே
விவ்விரண்டி லெச்சுகத்தி லேய்ந்திருப்பே—னெவ்வமின்றி
யச்சிவத்தி லென்னிலஃ தாகாதே லெற்கயலாய்
மெச்சுதற்கென் னானுன்னை மெய். 467

பேராற் றலினாலே பேரின்பம் வாய்வுறினப்
பேராற்ற லால்வருதல் பின்னமன் றோ—வோராய்நீ
பின்னசுகத் தின்கண்ணே பேரா திருந்திடுவ
தென்னமதி யாற்கொண்டா யீது. 468

தன்னுடைய வின்பத்திற் றானழுந்தி நில்லாம
லன்னியமா மின்பத்தி லாழ்ந்திடலே—னின்னுடைய
நீங்கா மயக்கமது நீங்குதற்கு வாய்க்குமோ
தூங்காமற் றூங்குநிலை தோய். 469

தன்னைப் பிரியமெனச் சாற்றுதுமே லெஞ்ஞான்று
மன்னியத்தைக் கண்ணுற்றிங் காழ்ந்திடுத—னன்மையதோ
வீங்கிதுபோ னஞ்சிவத்தி லேற்க வழுந்திடினே
யாங்கதனா லென்றுமிழுக் காம். 470

தற்பிரிய மன்றியெங்குஞ் சாற்று மயலின்பம்
சற்றுந்தா னின்றாமே சந்ததமும்—நற்கருத்தோ
யிந்தவனைத் திற்குந்தா னின்றென்னி லின்பமென
லந்தசிவற் கெங்குண்டா மாய். 471

தனக்கெனவே யின்பமெனல் சந்ததமு முண்டேல்
தனக்கயலை நாடுவதென் சத்தாய்—நினைப்புற்றுத்
தானயணு ணுமளவுந் தற்பிரிய மும்மயலாந்
தானெனலைக் கண்டுய்வாய் தாழ்ந்து. 472

என்னைக்கா ணுவளவு மென்சுகநி னக்கயலே
யென்னைநீ காணுதென் னிஞ்ஞான்று—மென்சுகத்தை
யன்னியத்தின் மேலேற்றி யாழ்ந்து நுகருதற்கோ
வன்னியனா னாய்நின்று யாங்கு. 473

எல்லா வடிவினுமென் னின்பமதை யேற்றுவதேல்
சொல்லார் வடிவொன்றிற் றேற்றுவிப்பாய்—நல்லோய்கே
ளெந்நாளுக் கெவ்வடிவ மின்புருவாய்த் தோன்றுவதோ
வந்நாளுக் கவ்வடிவ மாங்கு. 474

மற்றோர்காற் றுன்புருவாய் மன்னுமே வேறொருவர்க்
குற்றிலகு மோர்வடிவ முண்மையிலோய்—முற்றுந்தா
னின்புருவாய்த் தோற்றியபின் னிவ்வின்பே மற்றவர்க்குத்
துன்புருவாத் தோற்றுவதேன் சொல். 475

எப்போதிங் சோருருவ மின்புருவாய்த் தோன்றுவதோ
வப்போதே மற்றொருவர்க் கவ்வுருவந்—தப்பாமற்
றுன்புருவாத் தோன்றுவதூஉஞ் சொல்லலுறு மீதேபின்
பின்புருவாத் தோன்றுவதூஉ மீங்கு. 476

இப்படியே யொவ்வொன்று மின்பாயுந் துன்பாயுந்
தப்பின்றி மாறுவதாற் சந்ததமு—மொப்புதற்கிங்
காய்ந்தாய்ந் தடங்காம லந்தோ விவையனைத்திற்
சாய்ந்துறைவ தென்கொடுமை தான். 477

ஈங்கெவையு மாராய்வி லென்னசேர்ந் திட்டதெனி
னாங்காங்குந் தற்பிரிய மாயிருத்தல்—பாங்குள்ளோய்
சர்வமுமே நானென்பான் தற்பிரிய மாமிந்த
மர்மமறி யாவுனக்கென் மாண்பு. 478

எவ்வுருவிற் றற்பிரிய மேற்றிச் சுகிப்பதுவோ
வவ்வுருவ நற்பிரிய மாத்தோன்று—மெவ்வமுளோ
யச்சுகத்தைத் தானிழுத்திக் கார்ந்திருக்கி லவ்வுருவ
நச்சுதற்கே தப்பிரிய நாடு. 479

தற்பிரிய மன்றியெங்குஞ் சந்ததமும் வேறிலதா
னற்சுகமென் றெங்கெதிலே நாமமூந்த—லற்பமுளோய்
தன்னைக்கா ணாததினாற் றற்சுகத்தை யேமறந்து
பன்னுவதெல் லாநின்னாற் பாழ். 480

சர்வமுந் தற்பாவந் தர்பிரிய மாயிருக்கு
மர்மமறி யாமலே மாலுற்றுச்——சர்வத்து
ளொவ்வொன்று முண்மையென்று மொன்று லளித்ததென்றுங்
கவ்வுதலுற் றேன்கெட்டாய் காண். 481

எதனைநன் காய்ந்தாலு மேய்ந்திருத்த னானென்னி
லெதுவுந்தற் பாவமெனற் கேச்சென்——மதியில்லோ
யெல்லாந்தற் பாவமதா லெல்லாமுந் தற்பிரியஞ்
செல்லாநின் றீர்ப்பிவற்றாற் றேர். 482

தற்பாவந் தர்பிரியந் தானுணராக் காறுநீ
யற்பமுந்தா னெவ்விதத்து மார்ந்துய்ய—நற்குணமில்
நின்முடிவைக் கொண்டுநனி நீளமாய்ப் போதிக்கி
னின்னையடுத் தாருய்வார் நேர்ந்து. 483

தற்பாவ மாயிருக்கச் சாற்றுகின்ற விவ்வுலகஞ்
சொற்பமுமோ ராதிதனிற் சொக்குவதென்—னற்பமுளோய்
நின்றீர்ப்பை நம்பினர்க்கு நீண்டவுல கப்ராந்தி
சென்றொழித லெங்ஙனமாஞ் செப்பு. 484

ஈங்கெவையுந் தற்பாவ மெச்சுகமுந் தற்பிரியம்
பாங்கில்லோய் நன்கிவற்றைப் பாராமற்—றீங்குற்று
முன்னிலைப டர்க்கையுமாய் மோசம்போ நின்றனக்கே
யென்னிலையென் றும்மிலகா வீங்கு. 485

என்றென்று முன்னிலையா யேற்பதனுக் கர்த்தமின்றேல்
நன்றென்றேன் முன்னிலையா நாட்டியது—குன்றுதலில்
வேதந்தா னென்னில் விடாத்தேக போகிகளுக்
கோதியதாங் கன்மபத்தி யோர். 486

கன்மபத்தி ஞானமெனுங் காண்டத் திரயத்துள்
கன்மபத்தி யாமிரண்டிற் காட்டியதாம்—நன்மையென
முன்னிலைப டர்க்கையுமாய் மூதோய்சிற் காண்டமதி
லென்னியல்பை நன்குணர்த்திற் றே. 487

முன்னிலையாக் காட்டியது முற்றும் வழிபடற்கா
மென்னிலையைக் காட்டியதிங் கெற்றுக்கேல்—பின்னமுளோ
யேகமே வாத்வைத மேற்கும்பிர் மோகமென
வூகித்துத் தேர்ந்திலங்கற் கோர். 488

இவ்வுளவு தோன்றும லெஞ்ஞான்று முன்னிலையே
பவ்வியமென் றேமருண்டு பந்திக்கி—னெவ்வமுளோய்
கற்பனைநாட் டந்தவிர்ந்து காண்பதனுக் கென்னுருவை
யற்பமுந்தா னேருவையோ வாங்கு. 489

முன்னிலையாய்ப் போவதெலா முற்றுமே மோசமிதா
லென்னியல்பை முற்றுமிழந் தெவ்வுருவும்—பின்னமென
நாடுதலி னின்றகற்கு நண்ணும லெஞ்ஞான்றும்
வாடுதற்கே யாளாவாய் வந்து. 490

கற்பனையை மெய்ப்பொருளாக் கண்டுமயங் கற்கிடமா
மற்பமுந்தான் முன்னிலையா யாள்வதெலாஞ்—சொற்பனமாக்
காண்பவற்றைக் கண்ணுற்ற கண்ணுடையார் சொல்லியதை
வீண்மொழியென் றேன்விட்டாய் விண்டு. 491

கண்ணுடையா ராராய்ந்து கற்பித்த தேதென்னிற்
புண்ணுடைய நெஞ்சேயென் போதனைகேள்—மெல்லப்
பொருளல்ல வற்றைப் பொருளென் றுணரு
மருளானு மாணுப் பிறப்பு. 492

ஓதியவிந் நன்மொழியை யோர்ந்துதெளிந் தாற்பின்ன
ரோதியமற் றோர்மொழியு மொன்றிடுமே—யோதிடுவ
தெப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு. 493

உள்ளபடி கண்டுணர்வார்க் கோதியவிந் நன்மொழிதான்
தள்ளிவிடற் காகாதே சற்றேனுங்—கள்ளமுளோ
யிவ்விரண்டை யும்பற்று தேமாந்தே முன்னிலையாய்க்
கவ்வியென்ன வின்புற்றாய் கண்டு 494

கண்டதுநீ யாதென்னிற் கண்ணுடையார் கண்டிழிந்த
பண்டையவய லாகியவிப் பல்லுருக்கள்—கண்டுவக்கத்
தேகமதை நானாகத் தேங்கினாய் தேகியெனு
மாகமதைக் காண்பதென்றோ மற்று. 495

ஒவ்வோ ரவத்தையினு மொன்றுவது நானாரென்
றொவ்வோ ருயிருந்தா னூன்றாதென்—செவ்விதாக்
கற்றுணர்ந்து மாறாகக் காணா மடமையென
விற்றிடுதற் காகுமோ வீண்டு. 496

அவத்தாத் திரயத்திற் கப்பானா னென்னி
லவத்தைகளை நீங்கிடுதற் காமே—யவத்தையுளோ
யிவ்வுளவை யோராம லிந்தவுடற் பாவனையாற்
கவ்வுதலால் யாதயலைக் கண்டு. 497

எதனைநா னென்றாலு மெல்லா மலவாய்ச்
சதிசெய்து போவதனாற் சற்றும்—மதியில்லோ
யிந்தவழி யாமைக்கோ வென்றும் புகழுற்றாய்
மந்தமதி யோருவக்க வந்து. 498

(இஃது ஒருதலைத்தீர்ப்பு).

நாமரூ பம்பலவோ நானென் பதுபலவோ
நாமரூ பம்பலபோ னானுமெனி—னென்னும்
போதமென றேகமட்டோ பொன்றா வுயிர்மட்டோ
பேதமுள்ள நெஞ்சேநீ பேசு. 499

உற்றவுட றானளவே லோது முடலுயிரிற்
பற்றில்லாப் போதமெதன் பான்மையது—முற்றுணர்ந்தோய்
தேகத்தின் பான்மையதே றேகமக மாம்பொருளோ
வூகமின்றே நின்மொழிதா னோது. 500

தேகியின் பான்மையெனிற் றேகவள வன்றாகுந்
தேகியள வாமென்னிற் றிண்ணமே—தேகமட்டா
யோர்ந்திருத்த லென்றென்று மோர்தலைத் தீர்ப்பாமே
தேர்ந்ததெங்கே யேனையுநீ செப்பு. 501

தேகவள வாயிருந்தே சீர்மையுற்றாற் போலேநற்
றேகியள வாகவுநீ தேர்ந்திலங்கி—னாகமுளோ
யுற்றதுவி சம்மோடே யோதுவிசிட் டாத்விதமு
முற்றுமெடுத் தாளுதற்கென் முந்து. 502

அளவிலாக் கோலா லளக்கி னிலனை
யளவுபடு மோவென்று மந்தோ—வளவில்லா
வென்னையுண ராதளக்கி லேகிடுமோ வீண்மயக்க
முன்னாதென் னிவ்வுளவிங் கோர்ந்து. 503

உற்றுணரா வென்னளவை யோதுங் கணிதமது
சற்றுந்தா னன்குறுமோ தக்கோர்க்குப்—பற்றுள்ளோ
யென்னையுணர்ந் தாலன்றி யென்னளவு தோன்றாதிங்
கென்னவிதத் தாலுய்வா யேய்ந்து. 504

என்னையுற்றுப் பார்த்திருக்கி லென்னளவுக் கெல்லையுண்டோ
வன்னியமெல் லாமென்பா லார்ந்திலகு—மன்னியமு
மென்னையன்றி யில்லையே யேனீ கணிப்பனென
வுன்னியெழுந் தாயிங்ங னோது. 505

என்னுருவு மென்னளவு மேய்ந்துணரா திஞ்ஞான்று
மென்னசெய் தின்புற்றா யேழையே—பின்னமிலா
தென்றோ பிறப்பின்றி யின்புருவாய் நீயிலகல்
நன்றுணர்ந்து நேயர்களை நாடு. 506

உருவு மளவு முணராது நாளும்
பரிபாகர் போலே பகரின்—திரமெனவே
யாண்டா னடிமைகளை யன்பில்லோய் நானெனலைக்
காண்டற் கரிதாமே காண். 507

தன்னையிழத் தற்கன்றே தானடிமை யாக்களித்திங்
கன்னியமென் றேரிறையிங் சானாவது—நன்மதியோய்
நானலதை நானென்னு நன்கின் மயக்கமென
லேனகலு மெஞ்ஞான்று மேச்சு. 508

(இஃது கர்மோபாசனா வொழுக்கம்).

ஆண்டாற்குத்தொண்டுசெயு மான்றவொழுக் கத்தாலே
யாண்டான் வசமடிமை யார்ந்திருக்குந்—தீண்டாமல்
தேகபோ கச்சார்பைச் சிந்தையெப்ப தெவ்விதத்து
மூகித்தற் கென்னிதனை யுற்று. 509

எல்லாச் சுதந்தரமு மென்னுடைய தென்றிருக்கும்
நல்லோ யிவையகலு நன்னெறிகேள்—சொல்லுங்
குருலிங்க சங்கமத்தைக் குன்றாமற் பூசித்
தருள்வசநன் கெய்துதலா மால். 510

உற்றவரு ளின்வசமா யோர்ந்திருத்த லீங்குயிர்தான்
சற்றுமுட் கொள்ளாமற் சார்புகளை—முற்றும்
வழிப்பட் டிருப்பதெனல் வல்லோ யிதுவே
பழிப்பிற் பதமுத்தி பார். 511

இந்நெறியே பக்திநெறி யெம்மதப் போதகர்க்கு
மிந்நெறிபோல் வேறுநெறி யெங்குண்டா—மிந்நெறியை
வந்துபுரி தற்குமுனம் வாய்மை விதிவிலக்காம்
பந்தகன்மம் சொல்லுதுங்கேள் பார்த்து. 512

உற்றகன்மம் யாதென்னி லோதுங் குடும்பியெனுச்
சற்றுமிலை யாமலே சார்புசட்கு—மற்ற
வறியவர்க்கு நல்லோனாய் வாய்மைநோன் பாதி
வறிதின்றி யோர்ந்தொழுகல் வந்து. 513

உற்றிலகுங்கன்மத்தா லுண்மையிலோ யெஞ்ஞான்றும்
சற்று மகமமதை தான்குன்றா—முற்றும்
விரிவுற் றிருக்கினுமே வீணாங்கா மாதி
பிரிந்திடுமே சட்பகையும் பின். 514

இவ்வுலக போகத்தி லெய்தும் விருப்பகலக்
கவ்வுமோர் சொர்க்கபதங் காட்டிற்றே—யெவ்வமிலா
வாரணந்தா னப்போதே யான்றவிது தந்திரமாந்
தாரணைகொள் வாய்மனமே தான். 515

பட்டிமா டொத்துப் பழிபாவந் தோன்றாதிங்
கிட்டப் படிதிரியு மேழையரின்—துட்டவினை
தேய்ந்திடற்கும் புண்ணியந்தான் தேயா வளர்தற்கு
மாய்ந்துரைத்த தேவேத மார்ந்து. 516

தூலவுடற் பூபோகம் சூக்மவுடல் விண்போகம்
சீலமிலா விவ்விரண்டுஞ் செய்தளித்தல்—மாலகன்ற
வோரிறைவ னாமென்னி லோர்ந்தவனைப் பற்றுதற்குப்
பாரினிடத் தென்னிழுக்கோ பார். 517

இத்தேக போகமெலா மென்று மிறைவனதே
லெத்திறத்தால் யானெனதென் றின்புறுதல்—பித்தன்றோ
விவ்விரண்டும் யானெனதன் றென்றிங் ககலுதுமேல்
கவ்வுதற்கென் னோவிறையைக் காண். 518

என்பொருளென் றென்செயலென் றென்று மிருப்பதைவிட்
டுன்பொருளென் றுன்செயலென் றுன்னியுனி—யெந்நாளு
மெப்போ சுதந்தரவீ னத்துவந் தான்வருமோ
வப்போ வழிபட்ட தாம். 519

உற்றகர ணம்மிரண்டா மொன்று சிவகரணம்
மற்றொன்று சீவனதாய் மன்னுமே—வுற்றவுடற்
பற்றதனை நானென்னல் பாழ்சீ வகரணமாம்
பற்றுடல்செல் லாதிறையைப் பார்த்து. 520

அவ்விறையி லாழ்ந்திருத்த லாகுஞ் சிவகரண
மெவ்வழியிலோ யித்தீர்ப்பிங் கேற்குமே—பவ்வியமா
யிந்நிலையோர்க் கென்றென்று மேய்ந்திடுமோ துக்கசுக
மன்னவர்கா ணம்மிறையோ ராம். 521

இந்நெறியே யான்றோர்கட் கேய்ந்த நெறியென்னி
லிந்நெறியே நன்றென்றிங் கேய்ந்திருப்பார்—பின்பெவருந்
தம்மை யடிமையெனத் தானிற்குங் காறுமிது
நம்பிக்கை சித்தாந்த நாடு. 522

(இஃது பிராக்கேனல்).

முன்னெறியி லேநின்று மூத்திருக்குங் கன்மியர்தா
மின்னநா னென்றெங்கே யெட்டினர்கா—ணின்றன்றே
விந்தபத் திக்கண் ணிருப்பவரு மின்றெனிற்பின்
பெந்தநெறி யாலுணர்வா ரேய்ந்து. 523

போகப் பிராக்கிற் பொருந்துபவர் கன்மியராப்
போகப் பிராக்கிற் பொருந்தாதார்—பாகமூறு
மிந்தநெறிக் கண்ணிருப்பா ரேய்ந்தபிராக் கேதிவர்க்கே
லந்தபிராக் காளுதுங்கே ளாழ்ந்து. 524

பிராக்கென்ப தென்னிற் பெருந்தெய்வ நாட்டம்
பிராக்ககன்று ரீதேலார் பித்தோய்—பிராக்ககன்ற
தன்னுருவுந் தன்னளவுந் தானுணரா தேனின்னு
மென்னமதி யோகினக்கிங் கேச்சு. 525

உருவ மருவ முருவருவ மூன்றாக்
கருதியவற் றைத்தேவாக் கண்டு—மருவலெலனி
லிந்தவுரு வாதிகளை யேர்பது நானாயி
னெந்தவித நானா மிவை. 526

நானலதை நானெனவே நாடல் பிராக்காமேல்
நானலதை நாடுவதே னன்கில்லோ—யூனப்
பிராக்ககல்வ தெங்ஙன் பிதற்றலீ தாமோ
பிராக்கெனற்கென் னையமுண்டு பேசு. 527

தன்னையுற்றுப் பாராம றானயலைப் பார்த்துறைத
லென்னவென்று சொல்லலா மிக்கெடுதி—தன்னுணர்விங்
கில்லா ததினாலே யீதுபிராக் கென்பதொக்கும்
நல்லோ யிதையுன்னி நாடு. 528

கன்ம நெறிபிறழாக் கட்டுபட்டு நிற்போருங்
கன்ம நெறியதனைக் கண்டித்தே—வன்மையுள
பத்திநெறி நின்றகலாப் பாங்கா யிருப்போருஞ்
சத்தியமா யாரென்போம் சாற்று. 529

ஈரிடத்துந் தானகலா தெவ்வறமுஞ் செய்நானை
யோரிடத்தி லேனுநின் றோர்ந்ததுண்டோ—வோரிடஞ்சேர்ந்
தொன்றையனுட் டிக்குப்போ தொன்றிலதா னானென்பா
னென்றுவெளி யாவானோ வெண். 530

பிராக்ககன்றா னின்றதனாற் பேரறிஞ ருள்ளும்
பிராக்ககன்று தன்னைத்தான் பேணப்—பராக்கதமா
மார்க்கமெனல் யாதென்னின் மாயாத வாத்மார்த்த
தீர்க்கவிசா ரம்மென்றே தேர். 531

(காண்டத்திரயம் இருவகைச்சுருதியேனல்).

இந்தவிசா ரத்தினுக்கே யேய்ந்தபிர்ம்ம காண்டமென்று
மந்தவிரண் டாற்றலினுக் கானதெதேல்—பந்திக்கத்
தக்ககன்ம காண்டமென்றுஞ் சான்றபத்தி காண்டமென்று
மொக்குநம தாரணத்தி லோர். 532

ஞானமுறை காண்டமொன்றே நண்ணும் பிரபலமாய்
ஞானமலாக் காண்டங்க ணண்ணுமே—யூனமுளோ
யற்பச் சுருதியதா யாரணத்தின் சம்மதமே
நற்குணனே யீங்கிவற்றை நாடு. 533

இல்லையல்ல வென்னு மியலினைத்தா மேலாமற்
செல்லுதற்கிங் கேய்ந்ததெனச் செப்பிடுமே—நல்ல
பிரபல்ய மாஞ்சுருதிப் பேதமில்சிற் காண்டந்
திரமென்ன நன்கிதனைத் தேர். 534

ஆமுண் டெனுமியலுக் சாகாத கற்பனையை
யாமுண் டெனவென்றிங் காளுவதாற்—றேமில்லோ
யீனச் சுருதிகளா மேய்ந்தபக்தி கன்மங்க
ளூனமுண்டோ சொல்லியதிற் கோது. 535

இந்தவிரு காண்டமுந்தா னேற்குஞ்சொராங் காதிகளோ
டிந்தவுல கத்தையுமே யெஞ்ஞான்றும்—பந்திக்கச்
சத்தியமென் றேயுணர்த்துஞ் சத்தாமோ வீதனைத்து
பித்தமுளோய் நன்கிதனைப் பேண். 536

(இக்காண்டங்கள் இருவகை மதியேனல்).

ஆதலினு வீதிரண்டு மற்பமாம் வாலமதி
யோதியமுன் சிற்காண்ட மூகமதி—பேதமுள
நெஞ்சகமே யிப்பகுப்பை நேர்மைபெற வேயுரைப்பேன்
சஞ்சலத்தை விட்டகனீ தான். 537

ஊகமதி லூகமதி யோதியசிற் காண்டமதா
மூசமதில் வாலமதி யோர்வதெதேல்—பாகமுள
பத்தியுரைக் குங்காண்டம் பாங்கோயவ் வாலத்தி
லுத்தமமா மூகமதி யோ. 538

ஓதுகன்ம காண்டமதா முண்மையிலோ யம்மதியி
லேதென்னில் வாலமதி யேற்பதற்கு—மாதரையி
லிந்தகன்ம காண்டத்து மென்றுமே செல்லாமற்
சந்ததமும் வேறாகித் தான். 539

பட்டிமா டோத்துப் பகலிரவில் லாமலே
யிட்டபடி யேதிரிவ தென்னுமறை-நட்டமிலா
திந்தமதி நான்கினையு மெஞ்ஞான்று மேயுணர்ந்து
சந்தமுளோய் நின்றிடுவாய்ச் சார்ந்து. 540

(இக்காண்டங்கள் மூவகைத்தவமெனல்).

இந்தநற் காண்டங்க ளேற்குந் தவபேதஞ்
சந்தமுறு மூன்றுமே சாற்றுதுங்கேள்—மந்தமுளோய்
கன்மமுறை காண்டமது காமத் தவமாகு
நன்மையுள்ள மற்றவையு நாடு. 541

நிட்கா மியத்தவமாம் நீண்டபக்தி காண்டமென
லொட்பமுறுஞ் சிற்காண்ட மொன்றுமே—திட்பமுளோய்
நல்லவிவே கத்தவமா நன்குணர்வார்க் கிம்மூன்றி
னல்லதிது சத்தியமாய் நாடு. 542

இந்தச்சிற் காண்டமென லெய்ந்தவிவே கத்தவமே
லந்தவிரு காண்டங்க ளாகுமன்றே—வெந்தவிதத்
தும்மவி வேகமெனத் துன்பமகற் றுந்திற
னம்பிக்கை ஞானமொன்றே நன்று. 543

ஒன்றுசிற் காண்டமெனி னேதலுறு மற்றிரண்டு
மென்றுமென்ன காண்டமென வேற்குமோ—வொன்றிலகு
மஞ்ஞான காண்டமென லாகுமே நன்மையுளோ
யிஞ்ஞான்று மேனுணர வின்று. 544

இந்தவிரு காண்டங்க ளெங்ஙனமஞ் ஞானமெனி
னிந்தவய லத்தனையு மேற்பதற்குச்—சந்தசமுஞ்
சத்துப்பொருளெனவுஞ் சார்புகளா மீதெனவும்
பித்துள்ளோய் முன்புணர்த்திப் பின். 545

ஓதியவிச் சார்புகளு ளொன்றைச் சுகியென்று
மேதமிலா மற்றொன்றை யேத்தென்று—மோதுவதா
லஞ்ஞான காண்டமெனற் காட்சேப மென்பதுதா
னெஞ்ஞான்று மின்றே யிசை. 546

பொருளல்ல வற்றைப் பொருளென் றுணர்த்து
மருளுடைய காண்டங்கள் வாய்மைத்—தெருளலவே
யெப்பொருளத் தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு. 547

இந்தநன் மெய்யுணர்வை யேற்க வுணர்த்துவதாற்
சந்ததஞ்சிற் காண்டமதாஞ் சம்மதமே—பந்தமெனல்
நீங்கிடுமோ வவ்விரண்டா னீங்காது புன்னெஞ்சே
யோங்குமெனைக் கண்டுய்வா யுற்று. 548

துவிதமா யாவாத தும்சஞ்செய் கின்ற
வவிர்சோ ளரியாமே யாயி—னவிலுமிந்தச்
சிற்காண்ட மெஞ்ஞான்றுஞ் செப்பிடுதெற் காகுமோ
வற்பமுந்தான் தோடமென லாங்கு. 549

இந்தச்சிற் காண்டமென லேற்கின்மா யாவாத
மந்தமிலா மாயையுண்டென் றானாமன்றோ—சந்ததமு
முள்ளதுசத் தாம்பிரம மொன்றேயென் றோதுவதா
லெள்ளுவதே னீயிதனை யேகு. 550

இல்லையென வாதித்த லேமாயா வாதமெனி
னில்லெனற்கு மாறா யிருப்பதெனச்—சொல்லாலே
வாதித்த லென்னென்போம் வாய்மையில் லோயிவற்றைச்
சோதித் துணர்ந்துய்வாய் தோய்ந்து. 551

நினதுபட்ட மான்றோர்மேல் நீவைத் துரைத்தல்
தனதவிசா ரித்தன்மை தானே—தனக்கனியர்
மேல்வைத் துவப்புறாஉம் மெல்லியர்போ னெஞ்சேயிம்
மால்வைத் துழலுவதென் மாண்பு. 552

பண்புந் தொழிலையெலாம் பார்த்துச்சோ திக்காம
லுண்மையென வெஞ்ஞான்று மோதுவதா—லுண்மையன்றோ
மாயாவா தப்பெயர்தான் வாய்த்திருத்த னின்றனக்கிங்
காயாதென் னிஞ்ஞான்று மாழ்ந்து. 553

எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவென்றே—செப்பியதி
லெப்பொரு ளென்றதனா லென்னபொரு ளீங்கனைத்தும்
பொய்ப்பொருள்க ளன்றோ புகல். 554

பண்புருவை யேயல்லாற் பார்த்தனுப வித்ததுண்டோ
பண்புருவை யேபொருளாப் பார்ப்பதனாற்—பண்புருவை
யெத்தன்மை யென்றாரே யேனிதனை நாடவிலை
பித்தனெனற் கையமென்னீ பேசு. 555

பித்தனைமா யாவாதி யென்றுநனி பேசிடுது
மொத்திலையே சத்தியமா யொவ்வொன்று—நித்தமுநீ
யன்னியர்கண் மேலேற்றி யாண்டுவர லென்மடமை
யுன்னுவர்க்கெல் லாஞ்சிரிப்பா மோர். 556

பொய்ப்பொருளை மெய்ப்பொருளாப் போற்றிச் சுகிப்பதுநீ
மெய்ப்பொருளை மெய்ப்பொருளா வேண்டியே—யெய்ப்பின்றிக்
கண்டுநுகர்ந் தின்புறனுன் கண்ணவிந்த பாழ்நெஞ்சே
யுண்டோ வுனக்கின்ப மோது. 557

நாணமில் லாமையினால் நாடோறு முண்மகிழ்ந்து
நாணமுள் ளோரையுநீ நாட்டுவாய்—கோணலெனுந்
துன்மாயா வாதியெனத் துர்நரக மேயன்றி
நன்மாப் பதியுண்டோ நாடு. 558

உள்ளதென விவ்வுலகை யோர்ந்துநனி மேலீசனுக்
குள்ளதோர் மாயையென வோதுகின்றாய்—கள்ளமுள
நெஞ்சேமா யாவாதி நின்னையன்றி வேறுளரோ
தஞ்சமென வந்தடைவாய் தாழ்ந்து. 559

(உலகம் பலகூட்டப்போய்ப்பொருட்பெயராதலால்
ஆபாசமெனல்.)

என்று முலகெனும்பே ரில்பெயரோ வுள்பெயரோ
வொன்றுமெனி லுள்பெயரா யோருங்கால்—பொன்றா
பொருளிடங் காலமன்றிப் புந்தியுள் ளாரேற்
றுரையிடுதற் காகுமோ வோர்ந்து. 560

உற்றபொரு ளாதிகண்மூன் றென்றோடொன் றொத்திடலாற்
பற்றுதற்கிங் கில்லாத பாழுலக—முற்றும்
பலகூட்ட மாகுதலாற் பாங்கோய் விகார
முலகெனும்பேர்க் கேதிருப்போ வோது. 561

மண்ணாதி பல்லுருவு மன்னும் பொருளெனற்கம்
மண்ணா திகட்கிடந்தான் வாய்மையாய்—நண்ணு
மருவமெனலாகுமே யல்லும் பகலும்
திரமாகுங் காலமெனச் செப்பு. 562

இம்மூன்றி லீதுலகென் றேற்பதற்குச் சொல்லுவையோ
விம்மூன்று மேயென்னி லேற்குதுநா—மிம்மூன்று
ளொவ்வொன்றும் வெவ்வேறா யுற்றிருத்த லாணிலைமை
யொவ்வுமோ மூன்றுலகா யோது. 563

உற்ற பொருளிடம்போழ் தொன்றேனு மேலாமற்
சற்று முலகெனும்பேர் தாமிருக்க—முற்றுணர்ந்தோ
யேற்பதுதான் யாதோ வியைந்திலகு மப்பெயரை
யேற்பதற்கு நன்குரைப்பா யீங்கு. 564

உள்ள பொருளிடம்போழ் தொத்திருக்குஞ் சேர்க்கைக்கே
யுள்ள வுலகெனப்பே ரோதிவர—கள்ளமுளோ
யிந்தப் பெயரனர்த்த மென்றுணரா தென்கற்றுச்
சொந்தமுற்றாய் வாதிடற்குச் சொல். 565

சொல்லுக் கியைந்தபொருள் சொல்வதற்கிங் கொன்றிலையே
வெல்லுவனென் றிங்கேன் வெளிப்பட்டாய்—சொல்லுவது
பண்புந் தொழிலையன்றிப் பார்த்தவரு முண்டோகாண்
திண்மையிலோ யுண்மையினைத் தேர். 566

சர்வமுமே யுண்மையெனிற் றக்கோ யிவற்றிலொன்றை
மர்மமிலா தேயுணர்த்த வல்லையேல்—சர்வமுந்தா
னங்ஙனமே மெய்யாகு மவ்வவற்றிற் சிந்தையுற்றுப்
பங்கமின்றி நின்றுவப்போம் பார். 567

இம்மரந் தானென்னி லெங்ஙனநா மேற்பதது
தம்பமாய்த் தோற்றுவதேல் சத்தியமே—தம்பமிது
நீட்சி யுருட்சிகளாய் நிற்பதனாற் பண்பெனற்கிங்
காட்சேப முண்டோ வறை. 568

குணபேத மெல்லாங் கொளும்பொரு ளாமோ
குணங்கள் குணியன்றிக் கூறி—லிணங்குநின்சொல்
லிக்குணங்க ளைச்சுட்டி லேய்ந்தகுணி யிற்படலா
லிக்குணங்க ளோர்முதலோ வேகு. 569

உற்றகுணி யாம்பொருளோ டோதுங் குணங்களையும்
பற்றுபொரு ளென்பார்க்குப் பாழ்நரகே—முற்று
மிருப்பாங் குணியைவிடா தெஞ்ஞான்று நாடி
லிருப்பலதாந் தோற்றகுண மேது. 570

ஒவ்வோர் குணத்தினிலு மொன்றுங் குணிப்பொருளைச்
செவ்விதாக் கண்டுணரச் செப்பினர்கா—ணெவ்வமிலா
ரெப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் சாண்ப தறிவு. 571

உற்றகுணி கண்டுவக்க வோதினரென் றுன்னுமற்
பற்றுதற்கில் லாப்பண்பிற் பாழுறலேன்—முற்றும்
பொருளெனவே யெஞ்ஞான்றும் புன்மைமதி கொள்வோ
யிருளகலு மோவிதனை லெண். 572

குணங்களைத் தான்பிரித்துக் குன்றாக் குணியை
யிணங்காதே கண்டுணர்தற் கென்னிற்—பிணநெஞ்சே
மெய்ப்பொருள் காண்ப தறிவென்பா னேன்மேலோர்
பொய்ப்பொரு ணீக்கவன்றோ போந்து. 573

பண்புந் தொழிலுமன்றிப் பார்க்குங்கா லெவ்வுருவு
முண்மையென வெங்கேனு மோதுவையோ—பண்புருக்க
டத்தங் குணியையலால் தாமனுப வப்படுமோ
பித்தோயீ தென்புதுமைப் பேசு. 574

உற்றகுணந் தானன்றி யோதுங் குணியினைநாம்
பற்றிநுகர்ந் தின்புறற்குப் பாங்குறுமோ—சற்றேனு
மென்னிற் குணிகளன்றி யெந்தகுண மேனுமுண்டேல்
நன்காகு நின்மொழிதா னடு. 575

உற்றகுணி தானன்றி யோருங்கா லின்றேனு
முற்றுமனு போகத்தின் முந்துமெனிற்—கற்றுள்ளோ
யிந்தக் கடபடங்க ளேற்கநீ சாதிக்கிற்
சந்ததமீ தேயுறுதி தான். 576

எவ்வெப் பொருள்க ளியைவதோ வின்புறுதற்
கவ்வப் பொருளையுநா மாராயி—னெவ்வுமுதற்
காரணத்தை யேலாமற் கண்டதுண்டோ வொன்றேனு
மாரணத்தார்க் கென்சொல்வா யாழ்ந்து. 577

இந்தக் கடபடங்க ளெந்தமுத வின்றன்மை
யந்தமுதன் மண்ணுதா லன்றோகா—ணந்த
விரண்டு மனுபவத்துக் கேய்வதெனி னெஞ்சே
பிரண்டிடுதே யிக்குணங்கள் பேசு. 578

காரணத் தாலன்றிக் காணுக் கடபடத்தின்
சீரணமா ருண்மையினிற் செல்லாதென்—கோரணியே
யீதொழிய வேறொன் றிருக்குநல் லூகமதை
யோதுவதைக் கேளிங் குவந்து. 579

என்றென்றும் புல்லறிவோ ரேய்ந்துருசிக் கும்மயலை
நன்றென்று நீருசித்தல் ஞாயமோ—மன்றுபுகுந்
திந்தவழி யாமையிலோ வேய்ந்த புலவனெனத்
தொந்தமுற்று நிற்கின்றாய் சொல். 580

தன்னைநுகர்ந் தின்புறற்குத் தக்கவிர இல்லாம
லுன்னியுனித் தாவுகின்ற வூனோ—மன்ன
வயலைருசித் தற்கென்று மாளாகி னெஞ்சே
மயலறுதற் காமோநின் மாண்பு. 581

கற்றதுநீ யாதுக்கேற் காண்பவற்றிற் சிக்குண்டு
சற்றேனு மூகமின்றிச் சங்கிக்க—முற்றுந்தா
னிப்படியே நீயிருக்கி லென்னைச் சுகிப்பதிலை
யெப்படிதா னுய்வா யினி. 582

என்னிழலா மன்னியத்தை யேழைமதி யுள்ளோர்க
ளுன்னியுழன் றேருசிப்ப ருண்மையென—வென்னுருவைக்
கண்டுநுகர்ந் தின்புறற்குக் காதலைநீ கொள்ளாது
துண்டமதி யேனுனக்குச் சொல். 583

என்னுருவை நாடாத வேழைமதி யுள்ளார்போ
லுன்னியுனி நாடலெவ னென்றுமிலோ—யன்னியத்தை
யிஞ்ஞான்று நாடினதற் கென்னநய முற்றுபெற்றா
யெஞ்ஞான்றுந் துக்கமன்றி யின்று. 584

(துக்கநிவர்த்தி.)

கற்றுணர்ந்த கன்னியத்தைக் கண்டேனு மன்னியத்திற்
பற்றின்றி நிற்பதற்குப் பாங்கில்லோய்—சற்று
முபரதியை நாடாதிங் கூரேனம் போல
வபராதத் துக்கானு யாழ்ந்து. 585

ஆன்ற வுபரதிதான் யாதெனிலொவ் வொன்றினையுங்
கான்றசோ றன்னக் கருதுவதா—மூன்றி
யுணராயே லிங்கலத்தை யுண்மையிலா நெஞ்சே
மணமெழுமோ நின்னிருப்பா மாண்பு. 586

இந்த வுபரதியை யேலாயே லெஞ்ஞான்றும்
பந்தித்து நின்றலைவாய் பல்லுருவை—நிந்தையதாய்த்
துக்கநிவர்த் திப்பெருமை தோன்றுமோ புன்னெஞ்சே
யெக்கலையுங் கற்றறிந்து மென். 587

யாதெனின் யாதெனி னீங்கியா னோத
லதனி னதனி னிலனென்—றிதமாகச்
சொல்லியதிங் கெற்றக்குத் துக்கநிவர்த் திக்கன்றோ
நல்லோ யினியேனு நாடு. 588

எதிலார் யாரு மிகழா திருப்பதற்கே
யேதுசெய்து நின்றுயிங் கேழையே—வாதிடற்குத்
தொந்தமுற்றே நிற்பதனாற் றுக்க நிவர்த்தியெனல்
வந்துறுமோ நின்றனக்கு மற்று. 589

ஒருமூன் றிலக்கணையு ளூற்றமுதல் யாதே
லரியவிட்ட லக்கணையா மாயிற்—பிரியமுளோய்
துக்க நிவர்த்தியது தொந்தமுற்று வாதிடலேன்
பக்குவரெல் லாங்கலங்கப் பார்த்து. 590

முதலா மிலக்கணைக்கே மூந்தா திருக்கி
லிதமாகு மற்றிரண்டி லெங்ஙன்—பதிந்திருப்பா
யின்று தவினுலே யென்று மயலில்லா
நன்று நிலையுறுமோ நாடு. 591

(குறிகுணங்களிரண்டும் நானேன்பானுக்கின்றேனல்.)

உற்றகுறி யெந்தனுக்கிங் கோரிரண்டாந் தூலதனுப்
பற்றில்லா ஞானதனு பார்க்குங்கால்—மூற்றுணர்ந்தோ
யிவ்விரண்டில் ஞானகுறி யென்றும் வெளியொளியே
கவ்வுதற்குத் தக்கதிது காண். 592

இந்தக் குறியிலங்க லேதுநயத் துக்கென்னின்
மந்தமதி யாஞ்சீவன் வாய்மையிலாப்—பந்தமெனுந்
தேகோக நீங்கிச் சிவோகமாய் நிற்றற்காஞ்
சோகாப் பிதற்குண்டோ சொல். 593

இந்தக் குறியெனக்கிங் கென்ஞான்று முள்ளதுபோற்
சந்ததமு நற்குணங்க டானுமுண்டா—மந்தக்
குணங்க ளவையென்னிற் கூறுவோங் கேட்பாய்
மணமுள்ள நெஞ்சே மதித்து. 594

சச்சிதா னந்தநித்த நம்மோ டகண்டங்க
ளெச்சமிலா தேயிலகு மீங்கிவற்று—னச்சுபவர்க்
குற்றபயன் யாதென்னி னுள்ளதுபோற் றோற்றுகின்ற
பற்றுதற்கில் லாவுலகப் பாழ். 595

அசத்துசடந் துக்க மனித்தமொடு கண்டம்
வசப்பட் டிருப்பதுவா மாலோய்—நிசத்தைநிதந்
தேர்ந்திருத்தற் கென்னகுறை செப்புங் குறிகுணமுன்
பார்ந்தவெனக் குண்டெனினு மாங்கு. 596

இந்தக் குறிகுணங்க ளில்லையென வேதந்தா
னந்தத்திற் கூறியதென் னன்புள்ளோ—யெந்தனுக்குச்
சொன்ன விவையனைத்துஞ் சொந்தமன் றூதலினு
லுன்னற் கரியவனு னோர். 597

நானெனற்குத் தூலதனு நன்கில்லாத் துற்குறியங்
நானெனற்கு ஞானதனு நற்குறியாம்—நானென்னல்
தூலகுறி யன்றுயிற் சோதியாம் ஞானகுறி
சீலமுளோ யன்றுமே தேர். 598

இந்தக் குறியுளபோ தேப்ந்தவஃ தின்றுகு
மந்தக் குறியுளபோ தார்ந்திருந்த--மந்தமுளோ
யிச்குறிதா னின்றுமே யிவ்விரண்டி னுளிருக்க
வெக்குறிதான் சொல்வா யெனக்கு. 599

இந்தக் குறியிரண்டு மெஞ்ஞான்று நானலதா
லந்தத்தில் வேத மறைந்ததுகாண்—சந்தமுளோ
யீதொழிய நிர்க்குணமு மேற்பதற்கு வாராய்ந்திங்
கோதுவதைக் கேட்பா யுவந்து. 600

ஓதலுறுந் தூலகுறி யொன்றுமசத் தாதிகுண
மேதமிலா ஞானகுறி யேற்றிடுமே—மூதறிவோய்
சத்துமுத லாங்குணங்கள் சார்ந்த விவையனைத்து
மெத்திறத்து மின்றுமே யெற்கு. 601

இருவகையா மிச்குணங்க ளில்லையென்ப தெங்கே
விருகுறியு மேலாதா லெற்குத்—திருகுடையோ
யிச்குணங்க ளும்மேலா தெஞ்ஞான்று மீங்கிவற்றைப்
பக்குவமுற் றுண் ணுழைந்து பார். 602

நற்குறியு நற்குணமு நாடாத நானெனற்குத்
துற்குறியுந் துற்குணமோ சொந்தமுறும்--பற்பலவாய்த்
தூடிப் பதனுனீ துன்மாயா வாதியன்றோ
பாடிப் படிப்பதெலாம் பாழ். 603

சத்துடைய தாய்பிரமா ணங்களுக்குச் சார்ந்ததனாற்
சத்தியமே யித்தீர்ப்புச் சங்கையின்றே—பித்தமுளோ
யப்பிரமா ணங்களுமோ வான்ற பதினான்கா
மப்பதினான் குஞ்சொலக்கே ளாழ்ந்து. 604

வேதநான் காறங்க மேன்மை நியாயமுமே
யேதமறு மீமாம்சை யீராறே—டோதுதலுக்
குற்றஸ் மிருதிகளு மொவ்வும் புராணமுமாம்
நற்றவமார் விஞ்சைபதி னான்கு. 605

இந்நால் வீரேழு மேசத்பிரமாண
மெந்தவிதத் தும்மிவைகட் கெங்குமின்றே—பந்திக்க
வேறுபிர மாணங்கள் மெய்ம்மையிலோ யுண்டென்னின்
மாறுபடு மேயவைகண் மற்று. 606

இந்தப் பதினான்கு மென்னை விளக்குதற்கு
வந்ததன்றிக் கற்பனைகள் வாய்மையெனச்—சந்ததமும்
சாதித்தற் கன்றதனாற் சான்றசத்ப்ர மாணங்கள்
சோதித்திங் குய்வதற்கேன் சொல். 607

நின்னால்வா திக்கின்ற நின்மதந்தான் கன்மபத்தி
யென்னுமிரு காண்டமன்றி யில்லையே—யுன்னாம
லுற்ற வனன்மலையை யோர்மசகந் தாக்குவபோன்
மற்றிதைநீ தாக்குவதென் மாண்பு. 608

நின்றுநிதம் வாதிக்கு நீர்மையில்மா யாவாதம்
நின்மதந்தா னாயிருக்க நீபிறரை—நன்றுரைத்தாய்
எஞ்ஞான்று மேகிறிஸ்ட்ய ரேய்ந்திலங்கு நம்வரை
யஞ்ஞானி யென்பதைப்போ லார்ந்து. 609

மாயாவா தப்புலவா மாயுந் துவிதத்தில்
வாயாட லாலறுமோ வன்மயக்கம்--தோயாம
லாயி லனைத்தையுமே யார்ந்தவெளி தோன்றும்பின்
மாயு மெதுவுமின்றி மற்று. 610

(துவித மாயாவாதத்தால் சச்சிதானந்தகுணங்கள் இழிவடைவதேனல்)

சத்துப் பொருளென்றே சாதிப்பாய் மாயையையச்
சத்துக் கெதிரசத்துத் தானுண்டேல்---சத்தாகு
மோதலுறு மாயையென லுன்னவிலோ யீதசத்தென்
றேதமின்றி யோதுவையோ வீங்கு. 611

எல்லாமே சத்தா யியைந்திருத்த லானினக்கு
நல்லோ யெதையசத்தாய் நாட்டிடுவாய்—நில்லாத
விவ்வுலகை யேற்பமெனி லென்று மனுபவித்தற்
கொவ்வா திருக்குமன்றோ வோது. 612

அசத்துநினக் கின்மையதா லந்தோநீ யேனோ
வசத்துக் கெதிர்மறையை யாளல்--பிசக்காமே
சத்தென் றுரைப்பதெலாஞ் சாயுமோ வீங்கெவர்க்கும்
பித்துமொழி யாய்விடுமே பேசு. 613

அசத்துக் கெதிர்மறைதா னார்ந்தசத் தாமவ்
வசத்துக் குடன்பாடு யாதேல்—பிசக்கில்லா
வுற்றசட துக்கமதா மோருங்கா ணெஞ்சேநீ
பற்றுதற்கென் னிவ்வுளவைப் பார்த்து. 614

உடன்பாட் டிலக்கணத்துக் கொத்ததுபோ லின்மை
திட்மாகுஞ் சத்தெனலேன் செல்லா—துடன்பாடா
யுற்ற விலக்கணத்திற் குண்மையறி யாமனமே
சொற்றவற்றைக் கூறுதுங்கே டோய்ந்து. 615

சத்துக் குடன்பாடாய்ச் சாரிலக்க ணம்யாதேல்
சித்துமா நந்தமுமாந் திண்மையது—பித்துள்ளோய்
சத்துப் பொருளென்னிற் சாற்றலுறு மாயையினைச்
சித்துசுக மின்றியுண்டோ செப்பு. 616

சித்துடனா நந்தமின்றிச் செல்லுமேல் சத்தெனரூன்
சுத்தசட துக்கமின்றிச் சொல்லுதும்யாம்—பித்தோ
யசத்தெனலை யெஞ்ஞான்று மந்தோநின் றீர்ப்பு
கசப்பெனற்கிங் கென்னிழுக்கு காண். 617

உற்ற வுடன்பாடு மோது மெதிர்மறையுஞ்
சற்றுந் தெரியாமற் சாதித்தல்—வெற்ற
வெறுவாயை மெல்வதுபோல் வீணாமே நெஞ்சே
யறுமோவஞ் ஞான வகம். 618

மாயை சடப்பொருளேல் மன்னுமசத் துத்துக்கம்
மாயைசித் துப்பொருளேல் வாய்க்குமே—யேயுகின்ற
சத்துடனா னந்தமதாய்த் தக்கோர்பாற் சாராத
பித்தனே யிவ்வனர்த்தம் பேண். 619

சிவத்தையுநீ சத்தென்று செப்புவையேல் நெஞ்சே
யவத்துக் கிடந்தருமே யந்தோ—சிவசத்திங்
கெந்தவசத் துக்கென்ற விக்கேள்விக் கென்செய்வாய்
சிந்தையிலோ யிங்கிதனைத் தேர். 620

இப்படியே சிவசகத் தேலாதேற் சத்தெனலை
யெப்படியோ சங்கையின்றி யேய்ந்துய்வாய்—திப்பியதா
நின்மதத்தை நம்பியென்று நீயேன்வா யாடுகின்று
யென்மதிகொண் டுண்மைவழி யேகு. 621

நானெனலே சத்தாகு நானே யசத்தாகு
நானெனலன் றேயிரண்டு நானாளும்--ஆனவிசாற்
கண்டுழியிந் நன்குளவைக் கண்கூடாய் நெஞ்சேநின்
துண்டமதி நீக்கிடுவாய் தோய்ந்து. 622

சத்தலைதைச் சத்தெனவே சாதித்துச் சாதித்துப்
பித்துதலைக் கொண்டதனாற் பேதித்தாய்—நித்தமுந்தான்
நெஞ்சே நினக்கென்றே நிர்விகா ரப்பொருளா
நஞ்சொருபம் வாய்ந்திலங்கு நாடு. 623

எல்லா மசத்தென்றிங் கேலாமை யாலன்றே
வெல்லாமுஞ் சத்தென்றே யேமாந்தாய்--நல்லாரை
நெஞ்சே யினியேனு நேசிக்கி னுனக்குப்
பஞ்சமின்றி நன்கொளிர்வேன் பார். 624

சத்துசித்தா நந்தநித்தஞ் சான்றவகண் டம்பிரமத்
தொத்திருத்தல் போன்மாயைக் கொத்திருக்கும்--பித்தோ
யசத்துசடந் துக்க மனித்தமொடு கண்டம்
பிசக்கின்றி யிவ்வைந்தும் பேண். 625

ஓசலுறும் பிர்ம்மமென வொன்றும் வெளியொளியா
யேதமுறு மாயையென வேயுமே--பேதமுறுஞ்
சீவபரத் தோடுலகாய்ச் செல்லுதற்கி தென்னிழுக்குப்
பாவமறு நெஞ்சேநீ பார். 626

பிரமமு மாயையுமாய்ப் பேதித்த வீதிற்
றிரமெதுவோ நானெனற்குச் செப்பாய்—பிரமமெனின்
மாயையஃ தன்னியமாய் மன்னுவதால் நின்மொழிதான்
தேயுமே யென்செய்வாய் தேர். 627

அன்னியமன் றென்பதனை யங்கிகரித் தற்காமோ
வென்னிலொவ் வொன்றினையு மேய்ந்தாயி—னென்னுநுவில்
வந்தவந்து முட்டுவதால் மாயையெனக் கன்யமல
சிந்தையைவைத் துன்னியுனித் தேர். 628

அன்னியமன் றாதலினு வார்த்தவிம் மாயையே
யுன்னுகின்ற நானெனற்கென் னேதுமெனின்—பன்னுசலுக்
குற்றபிர்ம மெற்கயலா யொன்றுமேல் நின்மொழிதான்
பற்றுதலுக் கென்னையம் பார். 629

இருவழியுஞ் சாயா திருக்க மொழிந்தா
விருளகன்று நிற்பதெங்ஙு னென்னி—லிருமையுந்தா
னெற்கயலா யின்றெனினு மென்றுமிவை நானன்றா
லொற்கமுளோ யென்னென்ப னோர். 630

நானெனற்கு வேறிலதா னற்பிரமந் துன்மாயை
நானெனற்கென் னிவ்விரண்டு நாணுளு—நானெனலி
லிவ்விரண்டு மொன்றினிலொன் றின்றாக மாறுவதா
லிவ்விரண்டி னுனேயுண் டேய்ந்து. 631

என்னைநான் மாயைபதா பேற்குங்காற் பிர்மமெனு
நன்மைசரு வத்தில்லை நாடுங்கா—லென்னைப்
பிரமமதா யெட்டுங்காற் பேதமையா மாயைத்
திரமின்றா மீதுண்மை தேர். 632

(அகம்பொருள் சத்திசத்தனேன்பதற்கு விலட்சணமேனல்.)

நானெனலி லேயிரண்டா நற்பிரம மாயையுமந்
நானெனலின் மாறுவதா னுடோறு—நானென்னல்
சத்தனன்றோ விவ்விரண்டாற் சத்திகளில் லாஞான்று
பித்தனெநா னென்னவென்பாய் பேசு. 633

மாயாசத் தன்னென்னின் மாறியபின் பச்சத்தித்
தூயோனாய் நானிருக்கிற் சொல்வதெங்கே—பேயோய்நீ
சத்தனென வச்சத்திச் சார்ந்திருக்கும் போதேனுஞ்
சத்தனெனும் பேருளதோ சாற்று. 634

இந்தமா யாசத்தி யெய்ந்தபோ தேவிதனால்
வந்தசத்த னென்னும்பேர் வாய்மையில்போல்—சந்தமுளோய்
ஞானசத்தி நிட்டையினி னன்கிலங்கும் போதுமே
நானென்னல் சத்தனன்றே நாடு. 635

இப்போதப் பிர்மசத்தி யின்றதனா னெஞ்சேநா
னிப்போதுஞ் சத்தனன்றா மென்செய்வா—யெப்போது
மாறாது நானிருக்க மாறுமிச் சத்திகளால்
மாறாகப் பேசுவதென் மாண்பு. 636

இந்தவிரு சத்தியுந்தா னென்னுருவ மன்றாயுஞ்
சந்ததமு மின்றாயுந் தாமிருக்க—மந்தமுளோய்
வேண்டும் பொருள்களெலா மெய்மையல வேநின்றால்
யாண்டு மிருப்பதுநா னாய். 637

இவ்விரண்டு சத்திகளு மென்றமொளிர் நானன்றே
லிவ்விரண்டை விட்டவனா னேழ்மையுளோ—யிவ்விரண்டு
மென்னையன்றி யின்றதனா லென்றும் விடாதவனா
னுன்னிநீ யிவ்வுண்மை யோர். 638

உற்றவிட்ட லக்கணையா லோதலுறு மல்லவுமாய்
மற்றவிடா லக்கணையால் மன்னுவனான்—பற்றுள்ளோ
யெல்லாமா யென்னுமிய லீதிரண்டு மெந்தனுக்குச்
செல்லுமே யெஞ்ஞான்றுந் தேர். 639

இந்நிலைய னுயிருக்கு மென்னையுற்றுப் பாராம
லன்னியமா மாயையென வாள்வதொடு—பின்னமுளோய்
சத்துசடந் துக்கமுமாய்ச் சாற்றலெலவ னீங்கிதனைப்
பித்தர்களு மேலாரே பேசு. 640

சத்துசித்தா நந்தமெனச் சாற்றுவது மூடர்களுஞ்
சத்துசடந் துக்கமெனச் சாற்றுவது—வத்துநிலை
யான்றோர் களுமாக வாளுவதா னீயிவற்றைச்
சான்றோனென் றேற்பதெங்கே சாற்று. 641

இலக்கியத்தைக் கண்டுணரா தேழ்மையினு லன்றோ
விலக்கணபே தந்தெரியா திப்போ—தலக்கணுற்றுத்
தத்தளிக்கின் றுய்மனமே சாற்று மிலக்கியந்தா
னுத்தவெனை யன்றியுண்டோ வோது. 642

என்னையன்றி யின்றதனு லென்னியல்பை நன்குணரா
தென்னசா தித்துய்வா யேழையே—வென்னியல்பைக்
கண்டவரே யான்றோர்கள் காணுதார் பாவிகளே
பண்டைமய லென்றொழிப்பாய் பார்த்து. 643

(இஃது பேதநாட்டநீக்கம்).

நாமரு பங்களையே நாடிநா டிப்புணர்ந்திங்
கேமநீ யென்கண்டா யிஞ்ஞான்றும்—வீமமின்றிப்
பெற்றதுவே றுண்டோ பெருமாயைச் சேர்க்கையெனும்
பற்றகன்று சூழ்வெளியைப் பார். 644

என்றைக் குடல்விழுமோ வேதிலரு மத்தினத்தி
வின்றுவரை பேதடைர்தா யென்பாரே—லென்சொல்வா
யொன்று மடைந்திலனே யுள்ளபடி யென்றவேவா
நன்குரைப்பா யீங்கிதனை நாடு. 645

சாவி லயலனைத்துந் தான்முழுது மேமறதி
மேவு மெவர்க்குமெனல் மெய்மையதாம்—பாவியே
யப்போ மறப்பதனா லானபய னொன்றுமிலை
யிப்போ மறந்தாலின் பே. 646

இந்தவனே கத்தையுநீ யிப்போ மறந்துவரி
னந்தமர ணாவத்தை யற்றுய்வாய்—பந்தமெனல்
தாக்கிடுமோ துன்மனமே சற்றேனுஞ் சிந்தையினிற்
போக்கிடுதற் கென்னோ புகல். 647

இப்போ மறந்துவர லெவ்வாறிங் கென்னிலோ
தப்பா துருவனைத்துஞ் சங்கையின்றி—யொப்பில்லோ
யல்லவிலை யாய்முடிய வாயுமா றாய்வதுவா
மெல்லோர்க்கு மீதொப்ப தே. 648

ஆமெனவு முண்டெனவு மாங்காங் கிருப்பவைகள்
நாமழுந்திச் சோதிக்கி னண்ணுவதே—னேமமின்றி
யன்றெனற்கு மின்றெனற்கு மையமையோ புன்னெஞ்சே
யின்றபிமா னம்விடுவா யே. 649

அன்றெனவு மின்றெனவு மாகுமனர்த் தங்களைநீ
நன்றெனவே நம்பிநம்பி நாடோறுந்—துன்புறலே
னிங்ஙனமாங் கற்பனையி லென்று மழுந்துவதா
லெங்ஙனந்தா னுய்வா யினி. 650

இப்போ மறந்துவரற் கில்லா திவைகளைநீ
யப்போ மறப்பதிலென் னாகுமோ—தப்பார்வோ
வென்றுங் கவலைக் கிடமின் றிருப்பதற்கிங்
கொன்றாதே யென்செய்வா யோது. 651

திருட்டி யகலுதற்குச் செய்வினையா தென்னி
லுருக்கட் ககம்புறமா யொன்றும்—அருப்பொருளை
யுற்றூற்றுப் பார்ப்பதனு லோடு முருபேதம்
பற்றற்று நிற்பதற்கென் பார். 652

ஒவ்வோ ருருவி லொளிர்கின் றதுவெளியே
லொவ்வொன்றை யுஞ்சுகிக்க வொவ்வுவதென்—பவ்வியமாய்த்
தோன்றுகின்ற தேயென்னிற் சொல்லுங் கயிற்றரவு
தோன்றுகின்ற தாலுளதோ சொல். 653

தோன்றுங் கயிற்றரவைச் சொல்லலாங் கற்பனையாத்
தோன்று முருக்கள் சொலத்தகுமோ—வான்ற
வனுபவத்துக் கொத்ததெனி லப்பினலை யாதி
யனுபவத்துக் கொத்ததுபோ லாம். 654

இவ்வலைக ளாதியபோ லெங்ஙனந்தா னேற்பனெனி
னெவ்வோ ருபாதான மொன்றவதா—லிவ்வுருக்க
ளென்று மனுபவத்துக் கெய்திடுமோ வெங்கேனு
நன்றுணரு மின்பநெறி நாடு. 655

உற்றவுபா தானமோ டோதுமுபா தேயமுமாய்ச்
சற்று மூரணின்றித் தானிலங்கக்—கற்றூ
யுருக்க ளனுபவத்துக் கொவ்வுமோ வென்றுஞ்
செருக்ககல முன்னேநீ தேர். 656

என்று முபாதேய மேற்குமெனிற் பந்தித்தற்
கென்று முபாதான மில்லையோ—குன்று
திருப்பதனு லின்புறற்கிங் கிவ்வுபா தானந்
திருட்டிக்கா தேன்மருண்டாய் சென்று 657

எந்தவுபா தானமென லேற்பதோ பந்தித்தற்
கந்தவுபா தானமலோ வார்ந்திருத்த—லெந்த
விதத்து முபாதேய மின்மையதா லென்று
மதித்திவோ யீங்கிவற்றை மற்று. 658

உற்றுணராக் காறு முபாதேய மாகுமே
யுற்றுணர்ந்த ஞான்றிங் குபாதான—முற்றுணர்ந்தோ
யெவ்வுருவு மிவ்வா றிருப்பதனாற் பந்தித்தற்
கொவ்வும் பொருளெதுவோ வோர். 659

சோதனைசெய் தாலிலதுஞ் சோதனையில் லாவுளது
மோது முருவனைத்து மொன்றுமே—யேதமின்றி
நிற்கும் பொருளெதுநீ நிற்றற் கதுவாக
வொற்கமின்றிக் கண்டொப்பா யுற்று. 660

ஓர்பரந்தா னென்னிலோ வோத லெதைக்கொண்டோ
பார்முதலாம் பூதத்தாற் பன்னுவதேல்—பார்முதரு
மையமய மாசலினிவ் வையத்தைக் கொண்டுரைத்தல்
பொய்யெனற்கென் னையம் புகல். 661

வெண்முகிலைக் கொண்டனலை விண்டிவோன் போலொருவ
னுண்மையெனற் கேலா வுருக்களைநீ—கொண்டுணர்ந்தே
போதித்தற் காளாகிற் பொய்த்திருட்டி நன்கறுமோ
சாதகத்திற் கென்செய்வாய் சார்ந்து. 662

பொய்த்திருட்டி நீங்கமுதற் போதித் தலைக்கேட்டுப்
பொய்ப்பொருளெல் லாங்கரைக்கப் புக்காமல்—மெய்த்திருட்டி
வாய்க்காதே நெஞ்சேநீ வரளா விவணிருத்தல்
பேய்க்கோல மென்றுலென் பேசு. 663

பொய்த்திருட்டி மாறாமற் பொய்ப்பாவ நீங்கிடுமோ
மெய்த்திருட்டி யெங்ஙனுண்டா மெய்மையிலோய்—மெய்த்திருட்டி
வாய்த்தாலன் றேபின்னர் வைகுஞ்சீ வன்முத்தி
தேய்த்துவிடு மென்னிழலைத் தேர். 664

எங்கெங் குருவுளதோ வேய்ந்தங் கதுவதனைப்
பொங்குவெளி சூழ்ந்தென்றும் பொன்றாதே—சங்கையிலோ
யவ்வெளியைத் தன்றன்பா லார்ந்திருத்த லேலாம
லொவ்வு முருக்களுண்டோ வோது. 665

உற்றவெளி யில்லாம லோரணுவுந் தங்குதற்குச்
சற்றுமிட முண்டாமேற் றாமிருப்பாஞ்—சொற்றவணுக்
குள்ளும் புறம்பிடையு மோதும் வெளியன்றிக்
கொள்ளும் பொருளுளதோ கூறு. 666

எல்லாப் பொருளு மியைந்த வெளிக்கண்ணு
மெல்லாப் பொருட்கண்ணு மிந்தவெளி—நல்லோ
யிருப்பதனா லீங்கிரண்டி லில்லையென லேலா
திருப்பதுவின் வேறின்றா மீங்கு. 667

இவ்வெளியை நாடுவதற் கென்னிழுக்கோ நின்றனக்கிங்
கொவ்வாதே பல்லுருவு மோர்ந்துவப்ப—வெவ்விதத்துங்
கற்பனைக ளாதலினிக் கற்பனைநாட் டந்தவிர்ந்தே
யற்பமுளோ யிவ்வெளியி லாழு. 668

இருப்பதனைக் கண்டே யிருப்பலதை நீக்கி
னுருப்பலந்தா னெங்கே யொளிரு—மிருப்பென்னு
மிவ்வெளிநாட் டந்தவிரா தேய்ந்திருக்கின் முக்குற்றங்
கவ்வுதற்கிங் காகுமோ காண். 669

என்றும் வெளிநாட்ட மேலாம னன்னெஞ்சே
நன்றென்று கற்பனையி னுடலெலவன்—துன்று
முருபாவ நீங்குவதற் கோதுநெறி யின்றே
யருபாவ மாகாம லாங்கு. 670

அருவமய மாநிலைக்கி னல்லல் தணியு
முருவமய மாநிற்கி லொன்றும்—பெருமனர்த்த
மிவ்வுருவ பாவத்திற் கேனோ முறிப்பட்டாய்
கவ்வுதற்கு வேறின்றோ காண். 671

என்றுஞ் சுழுத்திக்கண் ணெப்பாவ மாகின்றாய்
நன்றா மருவமன்றோ நாடாதென்—னொன்றுமிலோ
யப்பாவ மாவதற்கீங் காகுமிழுக் குண்டோகா
ணொப்புவரின் றோவிதனை யோது. 672

அவ்வருவ பாவ மமைதி மயமாகி
லிவ்வுருவ பாவந்தா னென்னென்ப—மெவ்வழுளோ
யல்லல் மயமாமே யாரிதனை யேலாதார்
செல்லுமோ நின்மடமை செப்பு. 673

அல்லலுக்குப் பின்னிடுவா ரான்றோர்க ளாமென்னி
னல்லோ யமைதிதனை நாடாதார்—சொல்லாலே
வாதித் தழிந்திடுவர் வத்துநிலை தோன்றாமற்
போதிப்ப னோவவர்க்குப் போய். 674

இவ்விரண்டு தன்மையுந்தா னிச்சாக் கிரத்திருக்க
வொவ்வு மமைதிதனி லொன்றாதென்—னெவ்வமின்றி
யிவ்வுளவை போதிப்பா ரெங்குமின்றோ நின்றனக்குச்
செவ்விதா யீங்கிதனைத் தேர். 675

இந்த வவத்தைக்கண் ணேயு மமைதியினாற்
பந்தமற்று நிற்பதற்கென் பாழோய்நீ—சந்ததமும்
பாடுபட்டு வந்தாற் பழவினைதான் கூட்டுவிக்குங்
கேடுறுதற் கேனானாய் கீழ். 676

தவமுந் தவமுடையார்க் காகு மவமதனை
யஃதிலார் மேற்கொள் வதுவென்—றவமற்றார்
கூறியதை யோர்ந்துநீ குன்றாத தேனின்னாள்
தேறுதறா னெஞ்ஞான்றே செப்பு. 677

அருவநய மின்றே லதற்குமே னாஞ்
சொருபநய மெவ்விதத்துந் தோன்றா—தொருகணமு
மாதவினால் வேண்டுமே யையோ வருவநயங்
காதலுற்று நிற்பாய் கனிந்து. 673

அருவடிவம் வாய்க்கி னதற்குமே னாஞ்
சொருபமெங்ஙன் தோன்றுமெனிற் சொல்வாம்—வருந்திமுன
மாராய்ந் ததைச்சொல்லா யார்ந்தவுருக் காட்சியையே
லாராய்ந்த வந்தத்தில் யாது. 679

அருவமதே தோன்றுமெனி லாயவுரு வத்தை
யருவமாய்த் தோன்றலெஃ தார்ந்த—வுருவுகளே
யென்னி லுருவனைத்து மின்றாமோ மற்றோர்க்கிங்
குன்னி யுணர்ந்திடுவா யுற்று. 680

இன்றா மெனினுனக்கிங் கெந்தனுக்குத் தோன்றுவதே
யின்றென்ன லாகுமோ வேழையே—நன்றன்றே
யிவ்வுருவாத் தோன்ற லெதுவென்பார்க் கென்சொல்வா
யவ்வுருவந் தானென்னி லாங்கு. 681

இவ்வுருவ பாவ மெதுகாறு மோவென்ன
வவ்வருவ மில்லா வதுகாறு—மிவ்வுருவை
யாராயாக் காலத்திங் கானவரு வின்றுமோ
தேரா திருப்பதெனீ செப்பு. 682

அவ்வருவ மென்றுமுள தாதலா விவ்வுருவ
மெவ்வமுற்றுப் போகுமேயென்செய்வாய்—பவ்யமிலோ
யன்றியு மிவ்வுருவா யவ்வருவ மாறிடுமோ
வென்று மதுசடமா மே. 683

இவ்வுருக்க ளவ்வருவா யெங்கேனுந் தோன்றிடுமோ
வெவ்வமுளோ யீதிரண்டு மேற்குமே—பவ்வியமா
யுற்ற சடமெனலை யோதுவதென் மாறுகப்
பற்று மிவற்றையுனிப் பார். 684

உருவ மருவாயு மோது மருவ
முருவாயு மாகாதே யோரி—னுருவருவா
யாவ தெதுவென்றே யாயாதிங் கீதிரண்டுள்
தாவலெவ னிவ்வுருவைச் சாற்று. 685

உருவருவ மாறுவதா லொன்றினிலொன் றின்றிப்
பெருமையுளோர் நன்குரைத்தார் பித்தோ—யருமையுட
னன்யோன்யா பாவமென வாங்காங்குந் தேராம
லென்னவித மாய்நிலைப்பா யீங்கு. 686

இவ்விரண்டு மொன்றினிலொன் றின்றெனினு மெஞ்ஞான்று
மிவ்விரண்டு ணிற்பதெதிங் கேழையே—யெவ்வமிலா
நானென்பா னேலவ்வை நாடாம னீயிருக்கி
லூனமென லேனசலு மோது. 687

இந்த விரண்டிலுநா னென்றுமக லாவிடினு
மிந்த விரண்டினுக்கு மேதிடமேல்—தொந்தமிலா
நானென்ப தாலென்னை நாடாம னெஞ்சேநீ
நானென் றிடர்ப்படலே ளுடு. 688

இவ்விரண் டிற்குமிட மென்னையன்றி யின்றெனினு
மிவ்விரண்டு மாநிகழ்த லென்னுருவே—யிவ்விரண்டு
ளொன்று பிரவிருத்தி யொன்று நிவர்த்தியதால்
சென்று விசாரணையிற் றேர். 689

இவ்விருத்தி யீரிரண்டு மென்பாலின் மாறுவதா
லிவ்விருத்தி நாட்டமதை யேன்விடுதற்—கொவ்வவிலை
விட்டுநின் றாலன்றோ விளங்குநன விற்சுழுத்தி
கட்டமுற்றேன் வாடுகின்றாய் காண். 690

இந்தநன விற்சுழுத்தி யென்று நிலைத்திருக்கி
னந்தவறி வாகியளு ளூர்ந்தொளிர்வேன்—தொந்தமின்றி
யிந்நிலைதா னன்றோ வினையிற் சொரூபநிட்டை
மன்னுதற்கென் னீதில் மனம். 691

தெரிவு மயமாகிற் றேசிற் சிறந்த
பெரியவெளி தானன்றோ பேசுஞ்--சொரூபநிட்டை
யிச்சொருபந் தானே வினையில்லா வெந்தனிலை
நச்சுதலுற் றென்னைநீ நாடு. 692

எவ்வுயிரு நானெனைற்கிங் கிந்நிலையே லெஞ்ஞான்று
மொவ்வும் பொருளாமே யுள்ளபடி—யெவ்வமுளோய்
நாளு னெனப்பழகி நன்குநிலைத் தாவிந்த
வாளு னெனுமகம்போ மோர். 693

மந்த வியாபகத்தில் வைகிற் சுகமுண்டோ
விந்த வியாபகத்தி னில்லாதென்—பந்தவுரு
வுண்டா யிருக்கினுமே யுண்டாம்பேய்த் தேர்போல்முன்
கண்டதுவா நிற்பாய் கரைந்து. 694

பிரமன் முதலாப் பிபீலிக மீறா
யிருக்கும் பலநானா மெங்ஙன—னொருநானாய்த்
தேர்ந்திருப்ப தந்தோ தெருட்சியுறா நெஞ்சேநீ
யோர்ந்துய்யச் சொல்லுதுங்கே ளாற்று. 695

எந்நானாக் கெவ்வுடல மென்றாஞ் சுதந்தரமோ
வந்நானை விட்டகலா தவ்வுடல—மென்னானா
மின்றா தலினாலே யெவ்வுடலும் வேறாக்கி
நன்றாக நானெனலை நாடு. 696

நாடுங்கா னானெனறா னல்லோய் பலவாமோ
பாடுவதேன் பன்னாய்ப் பல்வடிவை—நாடியிவண்
விட்டிடுமோ புன்னெஞ்சே வீண்மயக்கஞ் சற்றேனு
நட்டமதைத் தந்திடுமே நாடு. 697

கடநாட்டம் விட்டுணரிற் கண்கூடா மாகந்
திடமேற் பலவென்னல் செப்பு—முடலெவையு
நாடாம னானெனலை நாடிற் பலவாமோ
தேடாதென் னின்னாளுஞ் சென்று. 698

எகமெனல் வாய்க்காதே லெஞ்ஞான்று மத்துவித
பாசம் வரற்கரிதாம் பாழ்நெஞ்சே—வாகைபெறும்
பிர்மோக மாயிலங்கப் பின்புதடை யாய்விடுமே
டர்மமித ஞ் சத்தியமாய் மன்னு. 699

இந்நிலையே வேதாந்தத் திருநற் சித்தாந்த
மிந்நிலையே மாவாக்ய மீங்கிதனை—யுன்னுமன்
மாறுகக் கற்பிக்கும் வாய்மையில் லாத்துவிதஞ்
சேருமவித் தீர்ப்பிற் செல். 700

பொய்த்துவிதம் யாதுக்கேற் பொய்யர் வழிபடற்கு
மெய்த்துவிதம் யாதுக்கேல் மெய்யெனவே—பொய்ப்புவியைச்
சாதித்தல் விட்டுணர்ந்து தானேதா னுதற்குப்
பேதித் திருப்பதெனீ பேசு. 701

பொய்த்துவித மென்னல் பொருந்து மதவாத
மெய்த்துவித மென்னிலோ மேன்மையுளோ—வெய்ப்பில்
மதாதீத மாகுமே மாண்பா மிவற்றை
நிதானிக்கா தேனின்னு நேர்ந்து. 702

உற்றமதா தீதமென லோதலுறுங் கூடத்தன்
சற்றசைவி லாப்பிரமஞ் சாட்சிகளாம்—பற்றில்லோ
யிவ்விரண்டும் லட்சியத்திற் கேய்ந்த துவிதங்க
ளவ்விரண்டுஞ் சொல்வாத மாம். 703

தானேதா னுகுநிலை சந்ததமு மாயிருக்க
நானே யதுவெனவு நானெனவு—மேனே
நிகழுமிங் கீதிரண்டு நிட்டை யிரண்டிற்
புகலுமையா வென்னிற் பொருள். 704

உற்றவுபா தித்திரைய மொன்றேனு நானன்றேற்
பற்றற் கெதுநானே பாங்குள்ளோய்—சற்று
மகலா வெளியொளியே லந்நிலைதா னுனு
மிகலுண்டோ வென்று மிதற்கு. 705

அவ்வொளியே நானென்றிங் காழ்ந்து தெளிந்தபின
ரெவ்வமுறுந் தோகோக மேகுமே—செவ்விதா
யீங்கனைத்து மின்றதனா லென்னையன்றி யவ்வொளியு
மோங்குமென்னை யன்றியின்றா மோர். 706

இவ்விரு லட்சியமு மில்லாம னிற்றலே
செவ்விதா மத்துவிதஞ் சிந்தித்தார்க்—கொவ்வுமிதை
யேலாத மானிடர்க ளென்றுமிரு கான்மிருகஞ்
சீலமதி யுள்ளோய்நீ சேர். 707

அதுநானாய் நானதுவா யாகத் தெளியி
னிதமு மயலென்ன னீங்கு—மிதமாகத்
தன்னிலையிற் றானகலா தானேதா னாயிருக்க
வன்னநிலை நன்கொளிரு மார்ந்து. 708

இந்தநிலைக் கன்றோ வெவரும் படவேண்டு
மிந்தநிலை தான்விளக்கு மெச்குருவோ—வந்தகுரு
ஞான குருவவனை நாடியவன் றன்னாலிம்
மோனநிலை யாவாய் முதிர்ந்து. 709

இந்நிலைதா னாதற்கே யெங்ஙனநா னிற்பதெனி
னிந்நினைப்பு நின்மறப்பு நீக்கியிடி—னந்நிலைதா
னாதற் கெளிதாகு மவ்வாறு சத்தியின்றே
யேதமுளே னென்செய்வே னீங்கு. 710

சத்தியுனக் கின்றென்னிற் சார்ந்தவித் தேகோக
மெத்திறத்து மேகாதே யென்செய்வாய்—பித்துள்ளோ
யோர்செயலு மில்லாம லுள்ளபடி நிற்பையேற்
பார்மிசைக்க ணிட்டையென்பர் பார். 711

நிட்டையெனற் கர்த்த நிலைத்திருத்த லன்றேவந்
நிட்டைபுரிந் தாலென்று நீதமுளோய்—சட்டமதாய்
வெற்றவெளி பாவந்தான் மேவுமே நின்றனக்குக்
கற்றுணர்ந்தோர் சொல்வரிதைக் காண். 712

அப்படியே நானிற்கி லையா நிலைக்கவின்றே
யெப்படிநா னுய்வேனென் றெண்ணற்க—வெப்படியு
நின்னுழைப்பி னாலென்று நீநிலைக்க வேண்டுமலா
லென்னுழைப்பீ தாகாதே யீங்கு. 713

(மாணதன்பக்குவப்பட் டின்புறுதல்)

பற்பலகா லிவ்வண்ணம் பாங்கார் விவேககுரு
வற்புறுத்திக் கூறவே வாய்மைபெறு—நற்பலமாந்
தற்சொருபந் தான்காணத் தாளாண்மை கொண்டனனாற்
சற்சீட னுமான தன் 714

பன்னாளு நன்குழைத்துப் பாங்காய் நிலைத்தபின
ரெந்நாளு முன்னுணர்ந்த வீங்கனைத்து—மன்னாத
கானலைப்போற் றோன்றக் கண்டு குருமணிதாண்
மானமுளோன் வீழ்ந்துற்றான் வந்து. 715

உன்னாக் களிப்புடனே வோதலுறு மாராமை
மன்னியவுன் மத்தாதி மாண்புற்ற—வன்னவன்பா
லேய்ந்தகுறி யெல்லா மிலக வெழுந்துநின்றா
னாய்ந்துணர்ந்த சற்குருமுன் னாங்கு. 716

நின்றபினர் முன்னான்று நேர்ந்த நிலையிற்றா
னொன்று மநுபவங்க ளொவ்வொன்றாய்ப்—பொன்றுதலி
லாசான் விழித்தே யகங்குளிர நன்குரைத்து
மாசிலாத் தாள்படிந்தான் மனீ. 717

நின்றானைத் தான்பார்த்து நின்மலமாஞ் சற்குருவு
நன்றாகு நிட்டையினீ நன்கழுந்தி—யின்னும்
பழகிப் பழகிப்பின் பாரென்ன வாங்கே
வழுவின்றி நின்றுணர்ந்தான் மற்று. 718

உற்றுணர்ந்த ஞான்றங் கொளியிட் டிலகுவதைப்
பற்றியது தானாய்ப் பழகியபின்—வெற்ற
வெளியொளிதா னாய்நிலைத்து மெல்லமெல்ல விட்டு
வெளிவந்து சற்குருதாள் வீழ்ந்து. 719

ஐயா வருண்மணியே யண்ணலே யென்னுருவ
மெய்யாய் விளக்கிவைத்த மேலோனே—யுய்வதற்கே
யெஞ்ஞான்றுங் காணாத வென்னையிஞ் ஞான்றுணர்ந்[illegible]
னஞ்ஞான மேதினிமே லாங்கு. 720

எங்கும் வெளியொளியா யெய்ந்தவா னந்தமதாய்த்
தங்கு மிவற்றைக்யந் தானன்றோ—பங்கமிலா
வென்னுருவ மென்ப தினிமறந்து நிற்பேனோ
வுன்னுதற்கு வேறிலதா லுற்று. 721

உன்னுதற்கு வேறிலதா லோதலுறுஞ் சர்வமுமே
யென்னிடத்தி லாரோப மெந்தையே—மன்னியசீர்
நானே வியாபகமு நானே வியாப்பியமு
மேனோ மறப்பே னினி. 722

நானேயெல் லாமாயு நானே யலவாயு
நானே கரியாயு நன்கிருக்கக்—கோனே
யெனைமறந்து நிற்பதற்கிங் கெங்ஙனந்தான் கூடு
நனவிற் சுழுத்தியாத னான். 723

எங்கே துவிதமுட னேய்ந்தவிசிட் டாத்விதமுந்
துங்கமுறு மத்விதமுஞ் சோர்ந்துறலால்—தங்குதற்கு
காணாத லாலென்று நானேநா னாயிருப்பேன்
றானாகு மிந்நிலையே தான். 724

எதிருள் ளளவு மியைந்திலகு நானா
யெதிரற்ற போதுநா னென்னல்—நிதமுமே
தானேதா னாயிருக்குஞ் சாற்றியவிச் சுத்தநிலைக்
கேணிருக்குந் தாழ்வுயர்வொப் பேய்ந்து 725

இந்தவ்நு பூதியினன் கெய்தியவிச் சற்சீடன்
சிந்தையிலா ராமையுற்றுச் செப்பியபின்—சந்ததமுந்
தன்னைத் திருத்தியவன் றாண்மலரிற்றான் வீழ்ந்து
தன்னிலையி னின்றனனே தான். 726

வாழி.

சச்சிதா நந்தகுரு தாள்வாழி மேதினியி
லெச்சமயத் தோர்தலைவ ரெவ்வமிலா—நிச்சயமாய்
சீரார் சடகோபர் சிந்தையற்ற நால்வருடன்
பேராத ஞானசுகர் பின். 727

உற்றசன காதியரோ டோங்குவசிட்டமுனி
பற்றில்லா நல்வியாதர் பாரளந்தோன்—முற்றுந்தா
னென்றுணர்ந்த சங்கரர்சீர் ஞானநிலைமூதோர்க
ளென்றுமிவர் தாள்வாழி யே. 728

ஞானஞ்ஞானரகித அகம்பொருள்விளக்கம்

முற்றிற்று.